THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL

Thursday, the 3rd December 1970

The House met in the Council Chamber, Fort St. George, at ten of the clock, Mr. CHAIRMAN (THE HON. THIRU C. P. CHITRARASU) in the Chair.

STARRED QUESTIONS

Central Marine Fisheries Research Institute

*39· *Q.*—THIRU M. RAJAH IYER :— Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(*a*) whether the State Government was consulted by the Centre regarding the shifting of the Central Marine Fisheries Research Institute from Mandapam Camp to Ernakulam ;

(*b*) if so, the opinion offered by the State Government in the matter ;

(*c*) whether any representation has been received by the Government pleading for its retention at Mandapam Camp ; and

(*d*) if so, the action taken by the Government thereon ?

மத்திய கடல் மீனள ஆராய்ச்சி நிலையம், மண்டபம்

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மத்திய கடல் மீனள ஆராய்ச்சி நிலையத்தை, மண்டபம் முகாமிலிருந்து எர்ணாகுளத்திற்கு மாற்றுவது குறித்து மாநில அரசை மத்திய அரசு கலந்தாலோசித்ததா ?

(இ) ஆமெனில், இது குறித்து மாநில அரசால் தெரிவிக்கப்பட்ட கருத்து என்ன ?

(உ) மண்டபம் முகாமிலேயே அந்த நிலையத்தை வைத்திருக்கக் கோரி விண்ணப்பம் ஏதேனும் அரசால் பெறப்பட்டுள்ளதா ?

(எ) ஆமெனில், அதன்பேரில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) இல்லை.

(இ) இருப்பினும் ஆராய்ச்சி நிலையத்தின் தலைமையிடத்தை மாற்றுதல் குறித்த கருத்தைப் பரிசீலிப்பதற்கு, இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தால் அமைக்கப்பட்ட குழுவின் பெரும்பான்மை

உறுப்பினர்கள் தலைமையிடத்தை மண்டபத்திலிருந்து கொச்சிக்கு மாற்றவேண்டுமென்று பரிந்துரைத்துள்ளனர் என இவ்வரசுக்குத் தெரிய வந்தவுடன் நம் மாநில அரசு அம்முடிவைக் கடுமையாக எதிர்த்தது. தேவைப்படுமானால் அதனைச் சென்னைக்கு மாற்றலாம் என்றும் கருத்துத் தெரிவித்தது.

(உ) ஆம், எண்ணற்ற முறையீடுகள் வந்துள்ளன.

(எ) இந்திய அரசின் தீர்மானத்தைச் செயல் படுத்தாமல் நிறுத்தி வைக்க வேண்டுமென்று பிரதமரைக் கேட்டுக்கொண்டு நமது முதல் அமைச்சர் பிரதமருக்கு ஒரு தனிக் கடிதம் அனுப்பினர். (இக்கருத்து மீனளத்துறையின் பொறுப்பிலுள்ள மாநில அமைச்சராலும், மத்திய அரசின் உணவு வேளாண்மைத்துறை இராஜ்ய அமைச்சருடனும் விவாதிக்கப்பட்டது).

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, கிழக்கு இராமநாதபுரம் பகுதியில் இது முக்கியமான கேந்திர ஸ்தானமாகும். இதில் பல மக்கள் வேலை செய்கிறார்கள். இப்படி நமது மாநிலத்திலுள்ள முக்கியமான ஆராய்ச்சி நிலையத்தை நமது மாநில அரசைக் கேட்காமலேயே மத்திய அரசு மற்ற இடத்திற்கு மாற்ற முடிவு செய்தது சரியா? இதை நமது மாநில அரசு மத்திய அரசிற்கு எடுத்துக்கூறி இங்கிருந்து அந்த நிலையத்தை மாற்றக் கூடாது என்று தடுத்து நிறுத்தியதற்காக உண்மையில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பகுதி மக்கள் நன்றியுடையவர்களாக இருக்கிறார்கள். ஒரு சில உயர் அதிகாரிகள் எர்ணாகுளம் செல்கிறார்கள். அத்துடன் சில குமாஸ்தாக்களும் சில பணியாளர்களும் மாற்றப்படுவார்கள் என்ற ஐயம் இருக்கிறது. இதை அரசாங்கம் போக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ.பி. ராமன்: அங்குள்ள ஆராய்ச்சி நிலையத்தைக் கொச்சிக்கு மாற்ற வேண்டுமென்று இதற்காக ஒரு தனிக் குழு மத்திய அரசினால் நியமிக்கப்பட்டது. இதில் இருக்கிற பெரும்பாலான அங்கத்தினர்கள் அந்த ஆராய்ச்சி நிலையத்தைக் கொச்சிக்கு மாற்றுவதுதான் சிறந்தது என்று சிபாரிசு செய்தார்கள். அது தெரிந்தவுடன் நம்முடைய அரசு அதற்கு எதிர்ப்பு தெரிவித்தது. மத்திய அரசு இதை மாற்ற வேண்டுமென்று முடிவு செய்தபொழுது, பல விண்ணப்பங்கள் வந்தன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிரதமருக்குக் கடிதம் எழுதினர்கள். நானும் மத்திய அமைச்சருடன் பேசினேன். அந்தப் பேச்சு வார்த்தையின்படி இப்போதிருக்கிற ஆராய்ச்சி நிலையம் அங்கேயே இருக்கும். ஆனால் டைரக்டர் ஒருவரும் நான்கு கிளார்க்குகளும் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மட்டும்தான் மாற்றப்படுவார்கள். 200க்கு மேற்பட்ட தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் அங்கே இருப்பார்கள். ஆகையால் அதற்குள்ள முக்கியத்துவம் அதிகரிக்கும் அளவில் இருக்குமே தவிர, குறைக்கப்பட மாட்டாது என்று மத்திய அமைச்சர் உறுதி கூறியிருக்கிறார்.

திரு. எம். ராஜா அய்யர் : பல ஆண்டுகளாக அந்த ஆராய்ச்சி நிலையத்தில் பணியாற்றிய டைரக்டர் அவர்கள் உலகப் புகழ் பெற்ற பையாலாஜிஸ்ட் டாக்டர் ஜான் என்ற பெரியார் ஆவார். அவர்

தலைவராக இருந்து வந்ததாலேயே அந்தக் கேந்திர ஸ்தானத்திற்கு ஒரு முக்கியத்துவம் கிடைத்தது. அவர் மாத்திரம் எர்ணாகுளத்திற்குச் செல்ல வேண்டிய அவசியமென்ன? அதை எதிர்த்து நம் மாநில அரசு ஏன் போராடக் கூடாது? எதிர்த்து ஏன் கருத்துத் தெரிவிக்கக் கூடாது? இத்தனை ஆண்டுகளாக அந்த நிறுவனத்தின் தலைவராக இருந்து டோக்கியோவுக்கும் பிற நாடுகளுக்கும் சென்று புகழ் உயர்த்திய பெரியார் அவர். அந்த நிலையம் மட்டும் மண்டபத்தில் இருக்கவும் அவர் அங்கே இருக்கக் கூடாது என்ற நிலைமையும் வந்தால், அந்தக் கேந்திரத்தின் முக்கியத்துவம் குறையும் அல்லவா? ஆகையால் அவரையும் மண்டபத்திலேயே இழுத்து வைத்துக்கொள்ள மாநில அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: இது வரையில் அந்தத் தலைவர் மண்டபத்தில்தான் இருக்கிறார் என்ற பெயரே தவிர, அவர் மாதத்தில் 25 நாட்கள் அங்கே இருப்பதில்லை. இந்தியாவின் பல்வேறு இடங்களில் பல மாநிலங்களில் அதனுடைய கிளைகள் இருப்பதால், அவர் டூரிங் ஆபிசராக இருந்து அங்கங்கே மாறி மாறிச் சென்று வருவார். எர்ணாகுளத்திற்குச் சென்றாலும், அங்கே மாதத்திற்கு ஐந்து நாட்கள்தான் இருக்க முடியும். அவர் எங்கேயிருந்தாலும், எல்லா இடங்களிலும் சரி பங்காகத்தான் செயல்பட வேண்டும். அப்படி அவர் எல்லா இடங்களிலும் செயல்படுவார்.

DEPUTY CHAIRMAN: The question is over.

(*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member).

II. ANNOUNCEMENTS

(1) *Message from the Governor*

MR. CHAIRMAN: I have received a message from the Governor of Tamil Nadu recommending to the Legislative Council the consideration of the Tamil Nadu Water Supply and Drainage Board Bill, 1970.

(2) *Messages from the Assembly*

MR. CHAIRMAN: I have received messages from the Hon. Speaker, Legislative Assembly, transmitting copies of the Tamil Nadu Prohibition (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 39 of 1970) and the Tamil Nadu Water Supply and Drainage Board Bill, 1970 (L.A. Bill No. 47 of 1970), as passed by the Legislative Assembly, and signed by him for the concurrence of the Council.

III. INFORMATION REGARDING PRIVATE NOTICE QUESTION No. 1

*திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, சென்ற மாதம் 27-ந் தேதி நான் கொடுத்த கேள்வி—தூத்துக்குடி நிகழ்ச்சி சம்பந்தமானது—அனுமதிக்கப்பட்டதாகச் சொன்னீர்கள். இது வரையிலும் அந்த அவசரக் கேள்விக்கு பதில் கிடைக்கவில்லை. ஆனால் இன்றைக்கு முதல் அமைச்சர் அவர்கள் உடல் நலமின்றி இருப்பதால் வரவில்லை. எனவே வேறு அமைச்சர் யாராவது அதற்குப் பதில்சொல்லுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : தலைவர் அவர்களே, தூத்துக்குடி கொலை சம்பந்தமான விவரங்களை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேட்டிருந்தார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த விவரங்களைத் தருவதாக இருந்தது. இன்றைக்குக் கூட உடல் நலம் குன்றியிருந்தாலும், இங்கே வந்து பதில் சொல்ல வேண்டும் என்ற ஆர்வத்தோடு இருந்தார்கள். இருந்தாலும் இப்போது வர முடியாத சூழ்நிலையில் இருக்கிறார். நான் இப்போது அவரைப் பார்த்து விட்டு வந்தேன். அந்த விவரங்களைப்பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால், நான் சொல்வதற்கு ஆட்சேபணையில்லை. ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே வந்தால், இந்த மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த கேள்விக்கு அவரே பதில் சொல்லுவது பொருத்தமாக இருக்கும் என்று இதை ஒத்தி வைக்கும்படி கேட்டுக்கொண்டேன். இப்போது தூத்துக்குடியில் நிச்சயமாக அமைதி நிலவி வருகிறது. எல்லா கட்சித் தலைவர்களும் கலெக்டர் தலைமையில் கூடி இது போன்ற நிகழ்ச்சிகள் வராமல் தடுக்க எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. தவறு செய்தவர்கள் மீது நமது காவல் துறை சிறந்த முறையில் நடவடிக்கை எடுத்து வருகிறது என்பது நமக்குத் தெரிந்ததாகும். ஆகவே இந்தக் கேள்வியை மாண்புமிகு முதல்வர் வந்ததற்குப் பிறகு எடுத்துக் கொள்வதுதான் சரியாக இருக்கும்.

IV. PRIVILEGE MOTION AGAINST THIRU R. RAMAN NAIR, M.L.C. AND EDITOR, PRINTER AND PUBLISHER OF 'NAVASAKTHI' *Re* STATEMENT PUBLISHED IN 'NAVASAKTHI'

MR. CHAIRMAN : I have received a motion raising a matter of privilege from Thiru S.Raghavanandam and Thiru T. K. Ponnuvelu. I request the Members Thiru S. Raghavanandam and Thiru T. K. Ponnuvelu, the Leader of the Opposition, the Member concerned — Thiru R. Raman Nair — and the Leader of the House — the Hon. Minister to state how the matter involves *prima facie* privilege.

THIRU T. K. PONNUVELU : Sir, I wish to raise a matter of privilege and request the consent of the Hon. Chairman under rule 157 of the Tamil Nadu Legislative Council Rules to ask the leave of the House to refer the matter to the Committee of Privileges.

3rd December 1970]

Matter sought to be raised

'Navasakthi' dated 2-12-1970 in the front page giving a three-column banner heading, published a statement purported to have been issued by Thiru R. Raman Nair, M.L.C. stating that the Hon. the Chief Minister and the Leader of the Council (Council) made a false statement on the floor of this House and thereby cast scandalous libel on the proceedings of this House. Both the publisher as well as the individual who issued the statement are liable to be proceeded against for having committed a gross contempt of this House and thereby the breach of privilege of this House. 10-10 a.m.

I, therefore, seek the consent of the Hon. Chairman to raise the matter and if the Hon. Chairman holds that a *prima facie* case has been made out, the matter may be referred to the Committee of Privileges.

தலைவர் அவர்களே, அன்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு ராமன் நாயர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த பதிலை ஒப்புக்கொள்கிற முறையில், அவருடைய மனைவி பெயரில் பட்டா இருக்கிறது என்பதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அப்படி ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு, அவர் பெயரில் நேற்றைய தினம் 'நவசக்தி' இதழில் முதல் பக்கத்தில் மூன்று காலம் தலைப்பிட்டு நான்கு காலத்தில் இந்தச் செய்தி வந்திருக்கிறது. அவர் தன்னுடைய அறிக்கையில் ''முதலமைச்சர் கருணாநிதி பதிலளிக்கையில் சட்டத் தவறான தகவல்களைக் கொடுத்திருக்கிறார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்'' என்று குறிப்பிட்டிருக்கிறார். தன்னுடைய மனைவியின் பெயரில் அந்த நிலம் பட்டா செய்யப்பட்டிருக்கிறது என்பதை அவர்களே இங்கே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு தவறான தக்வல் என்று இந்த மன்றத்தை அவமதிக்கிற முறையில் தவறான தகவலை அறிக்கையாகப் போட்டிருக்கிறார்கள். ஆகவே அதனால் நம்முடைய உரிமை பாதிக்கப்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், இந்த மன்றத்தில் முதலமைச்சர் அவர்கள் கூறிய கருத்துக்களுக்கு நோக்கம் கற்பிக்கிற முறையில் அந்த அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். ''புலவர் கோவிந்தன், தனது மகள், மருமகள், மகன்கள் உட்பட பல உறவினர்கள் மீது நிலப்பட்டா பெற்றது போலவே, தி.மு.க. சட்ட மன்ற, பாராளு மன்ற உறுப்பினர்கள் மாவட்ட, வட்டச் செயலாளர்கள் நிலப்பட்டா பெற்றிருப்பதும் நியாயம் என்பதாக வாதாட முயற்சிக்கிறார்'' என்று அதற்கு நோக்கம் கற்பித்திருக்கிறார். இப்படியெல்லாம் சொல்வது இந்த மன்றத்தினுடைய உறுப்பினர்களைப் பற்றிய நோக்கமாக இருப்பதால், அதில் உரிமை பாதிக்கப்படுகிறது என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். அதைப் போலவே முதலமைச்சர் தியாகிகளைப்பற்றி எவ்வளவு உயர்வான எண்ணம் வைத்திருக்கிறார்கள் என்பது அவர் பொறுப்பேற்றதற்குப் பிறகு தியாகிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கிற நிலப் பட்டாக்களையும், மானியத் தொகைகளையும் பார்த்தாலே தெரியும். திரு. ராமன் நாயர் அவர்கள் வேண்டுமென்றே திட்டமிட்டு நோக்கம்

கற்பிக்கிற முறையில் ''அதையே முதலமைச்சர் தியாகிகளை அவமானப் படுத்தும் வகையில் சுட்டிக்காட்டுவது'' என்று தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதையும் தவறான எண்ணத்தோடு திசை திருப்ப வேண்டுமென்ற நோக்கத்துடன் திரு. ராமன் நாயர் அவர்கள் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கை 'நவ சக்தி' ஏட்டில் பிரசுரமாயிருக்கிறது. அதேபோல மீண்டும் ''தி.மு.க. சர்க்கார் தனது அதிகார துஷ்பிரயோகங்களை மூடி மறைக்க முதலமைச்சர் கருணாநிதி தேவையில்லாமல் என்னை உதாரணம் காட்டுகிறார்'' என்று தவறாகக் கூறியிருக்கிறார். திரு. சுவாமிநாதன் அவர்கள் கேட்ட அந்தக் கேள்விக்கு பதிலளித்தபோது, எதிர்க் கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. ராஜாராம் அவர்கள், ''அப்படி யாராவது இருந்தால், இப்போதே கூறிவிடுங்கள்'', என்று சொன்னபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் கூறினார்கள். 'நீண்ட பட்டியல் இருக்கிறது. இப்போது கைவசம் இல்லை, தேவையான நேரத்தில் வெளியிடத் தயாராயிருக்கிறேன்' என்று திட்டவட்டமாகக் கூறியதற்குப் பிறகு, மீண்டும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் வற்புறுத்தியதன் பேரில், உதாரணத்திற்காக உடனடியாக கவனத்திற்கு வந்த ஒருவர் பெயரைக் குறிப்பிட்டார்களே தவிர, வேறு இல்லை. அப்படிப்பட்ட நேரத்தில் திரு. ராமன் நாயர் அவர்கள் இப்படிப்பட்ட அறிக்கையை வெளியிட்டிருப்பதும் அதை அந்தப் பத்திரிகை வெளியிட்டிருப்பதும் இந்தச் சபையை அவமதிப்பதாகும். இது உரிமையை பாதிப்பதாக இருக்கிறது என்பதைத் தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவந்து இதை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU S. RAGHAVANANDAM : **Sir, I seek the consent of the Hon. Chairman, under rule 157 of the Tamil Nadu Legislative Council Rules, to raise a matter of privilege against the Member Thiru R. Raman Nair, M.L.C., for having issued a statement and the Editor, Printer and Publisher of the Daily, 'Nava Sakthi', for having published the same in their paper dated 2nd December 1970. The matter sought to be raised is as follows :—**

''சட்டமேலவையில் 1970-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28-ஆம் நாள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேள்வி நேரத்தில் அளித்த பதில்களை தவறான நோக்கத்தோடு அளித்ததாகவும், உண்மைக்கு மாறாகத் திரித்துக் கூறியதாகவும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு நிலப் பட்டா கொடுத்தது நியாயம் என வாதாடும் உள்நோக்கத்தோடு கூறியதாகவும், நிலப்பட்டா ஊழலை மறைக்க, தீய நோக்கத்தோடு கூறியதாகவும், திரு. ராமன் நாயர், எம்.எல்.சி., அவர்கள் 2—12—1970-ம் தேதியிட்ட நவசக்தி இதழில் அறிக்கை தந்திருக்கிறார்கள். இம் மன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்த சில தகவல்களைத் திரித்து வேண்டுமென்றே, மன்ற நடவடிக்கைகளுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மாசு கற்பிக்கும் நோக்கத்தோடு மாண்புமிகு அங்கத்தினர் அவர்களால்

அறிக்கை வெளியிடப்பட்டிருப்பது இம் மன்றத்தின் உரிமையையும் மன்ற உறுப்பினர்களின்உரிமையை மீறுவதாக அமைந்துள்ளது. மேலும் மேற்படி அறிக்கையில் சட்ட மன்றத்தில் மாண்புமிகு ராமன் நாயர் அவர்கள் கூறிய தகவல்களைத் திரித்துக் கூறியுள்ளார்கள். சட்ட மன்றத்தில் உண்மைக்குப் புறம்பாக தகவல்களை அவர்கள் தந்ததும் இந்த மன்றத்தின் உரிமையை மீறிய செயலாகும். இந்த அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீது மாசு கற்பிக்கும் நோக்கத் தோடும் இம் மன்ற நடவடிக்கைகளைத் திரித்துக் கூறும் நோக்கத் தோடும் வெளியிட்ட ''நவசக்தி'' இதழின் ஆசிரியரும் இம் மன்றத் தின் உரிமையை மீறியிருக்கிறார்கள்.''

தலைவர் அவர்களே, அன்றைய தினம் நடந்த விவாதத்தில் மாண்பு மிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் ''புறம்போக்கு நிலங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் எவருக்கேனும் கொடுக்கப்பட்டிருக்கின்ற னவா ? அப்படிக் கொடுக்கப்பட்டிருக்குமானால், அவர்கள் பெயரை வெளியிடும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்'' என்று கேட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கு பதில் சொல்லும்போது, ''இதற்கு உள் நோக்கம் இருக்கிறது ; திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் வாங்கியிருக்கிறார்கள் என்ற பொருளோடு கேட்கப்படு கிறது. ஆனால் காங்கிரஸ்காரர்களும் வாங்கியிருக்கிறார்கள்'' என்று சொன்னார்கள். பின்னாலே அதற்கான பட்டியலைத் தருகிறேன் என்று அப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உடனே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ''பட்டியல் இருந்தால், இப்போதே சொல்லி விடுவது தானே'' என்று கேட்டதும், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், ''இம் மன்றத்திலே உள்ள மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமன் நாயர் அவர்களே 10 ஏக்கர் நிலத்தை தியாகி என்ற அடிப்படையிலும், மற்றுமொரு 10 ஏக்கர் நிலத்தை தம் மனைவியின் பெயரிலும் வாங்கியிருக்கிறார்கள்'' என்று குறிப்பிட்டார் கள். இது குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமன் நாயர் அவர்களும் விளக்கம் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திரு. ராமன் நாயர் பெயரில் 10 ஏக்கர் நிலம் தியாகி என்ற அடிப்படையில் கொடுக்கப்பட்டது என்றும் அவர் மனைவி பெயரில் இருக்கிற 10 ஏக்கர் நிலம் தியாகி நிலப்பட்டா அல்ல என்றும்தான் சொன்னார். திரு. ராமன் நாயர் அவர்களும் இந் 10-20 a.m. நிலைமையை அன்று ஒப்புக்கொண்டிருக்கிறார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னதெல்லாம் 10 ஏக்கர் தியாகி நிலம், மீதி 10 ஏக்கர் தியாகி நிலமல்ல என்பதுதான். அது 10 ஏக்கர்தானா, அல்லது 6 1/2 அல்லது 4 1/2 ஏக்கரா என்பதைப் பேசித் தீர்த்துக்கொள்ள லாம். 10 ஏக்கர் நிலம் தியாகி நிலம், 10 ஏக்கர் நிலம் தியாகி நில மல்ல என்று தான் இங்கே குறிப்பிட்டார்கள். இதைத் திரித்துக் கூறி 'கருணாநிதியின் அபாண்டம்' என்றும் 'ராமன் நாயரின் மறுப்பு' என் றும் 'நவசக்தி' இதழில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒருஅறிக்கை கொடுத்திருப்பது, மாண்புமிகு முதல்வர் அவர்களையும், இம் மன்றத் தினையும் அவமானப் படுத்துகிற காரணத்தால், இதை உரிமைப் பிரச்னையாகக் கொண்டுவர விரும்புகிறேன். எனவே இதை உரிமைக் குழுவுக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

?திரு. ஆர். ராமன் நாயர் : தலைவர் அவர்களே, நான் இந்தச் சபையை அவமதிக்க வேண்டுமென்றோ அல்லது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கு மாசு கற்பிக்க வேண்டுமென்றோ எந்த ஒரு எண்ணத்தோடும் நான் எதையும் பேசவில்லை. அன்றைய தினம் நான் என்னுடைய நிலையை விளக்கினேனே தவிர, இந்த அவையை அவமதிக்க வேண்டுமென்றோ, மாசு கற்பிக்க வேண்டுமென்றோ நான் எதையும் சொல்லவில்லை. என்னைப் பொறுத்த வரையில், எனக்கு ஆங்கிலம் அவ்வளவாகத் தெரியாது. தமிழ் மொழியில் கூட நல்ல விதமாகப் பேசக்கூடிய நிலையில் நான் இல்லை. என் மனதில் இருக்கிற நிலையை அன்றைய தினம் இங்கே சொல்ல முடியாத காரணத்தால், நான் பத்திரிகையில் ஒரு அறிக்கையைக் கொடுத்தது உண்மைதான். எனக்கு 10 ஏக்கர் பூமி, 41 ஆண்டு காலமாக இந்த நாட்டிலே ஒரு காங்கிரஸ் தொண்டனாக இருக்கிற காரணத்தால் கொடுக்கப்பட்டது. 10 ஏக்கர் பூமி எனக்குத் தியாகி என்ற அடிப்படையில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் அன்றைய தினமே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். ஆனால் 10 ஏக்கர் பூமிக்கு எனக்குப் பட்டா கொடுக்கப்பட்டாலும், அந்த நிலத்தை நான் ஒரு நாளும் உபயோகிக்கவில்லை, எனக்கு சௌகரியமில்லாத காரணத்தாலும், என்னுடைய ஏழ்மைத் தனத்தின் காரணத்தாலும், அந்த பூமியை நான் அனுபவிக்க முடியாத அளவில், பிறருக்கு அப்பொழுதே கொடுத்துவிட்டேன் என்று வெட்ட வெளிச்சமாக சொல்லியிருக்கிறேன். என் மனைவியின் பேரில் 10 ஏக்கர் பூமி வாங்கியிருக்கிறேன் என்று சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மனைவி மக்கள் பேரில் என்றுதான் சொன்னார்கள்.

திரு. ஆர். ராமன் நாயர் : இப்போது கூட மனைவி பேரில் என்றுதான் குறிப்பிட்டார்கள்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : என் நினைவில் உள்ளதைத்தான் சொல்லுகிறேன். மனைவி மக்கள் என்றுதான் அன்றையதினம் சொல்லப்பட்டது.

திரு. ஆர். ராமன் நாயர் : இந்த பூமி கூடலூர் தாலுக்காவில் ஒரு ஏக்கருக்கு 10 ரூபாய்கூட விலை போகாத காலத்தில் 10, 15 ஆண்டுகளுக்கு முன்னாலே என்க்ரோச் செய்த நிலம். நான் எந்த விதமான செல்வாக்கை உபயோகப்படுத்தியோ, இந்த அவையிலேஅங்கம்வகிக்கும் நிலைமையை உபயோகப்படுத்தியோ, அல்லது அன்றைய தினம் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் சர்க்காரின் செல்வாக்கை உபயோகப்படுத்தியோ இந்த பூமியை வாங்கவில்லை என்பதை மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அந்த இடத்தில் ஆயிரக் கணக்கான பட்டாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அந்தச் சந்தர்ப்பத்தில் நான் ''என்க்ரோச்'' பண்ணியிருக்கிறேன். அன்றைய தினமே சொல்லியிருக்கிறேன். பிறகு எல்லோருக்கும் பட்டா கொடுத்தார்கள். நானும், அந்த நிலத்திற்கு பட்டா பண்ணிக்கொடுத்தால் நல்லது என்று கேட்டுக்கொண்டேன்.

அதற்குப் பிறகு பட்டா செய்து கொடுத்தார்கள். அதைத் தவிர, வேறு ஒன்றும் கிடையாது. நான் அங்கத்தினர் ஆகி ஏதோ பட்டா வாங்கவில்லை. ஆனால், என் பேரில், பத்திரிகையில் வந்துகொண்டிருக்கிறது என்ன? நான் ஒரு காங்கிரஸ்காரன், பட்டா வாங்கியிருக்கிறேன் என்று சொல்லி பத்திரிகையில் வந்திருக்கும்போது அதற்கு மறுப்புக் கொடுக்காமல் இருக்க முடியாது. அந்த நிலையில், நான் சர்க்காரிடமிருந்து எந்தவிதமான பட்டாவும் வாங்கவில்லை என்ற எண்ணத்தை வைத்துத்தான் இந்த அறிக்கையைக் கொடுத்தேன். மற்றபடி, இந்த சபையையோ, அல்லது முதலமைச்சரையோ தப்பான நிலையிலோ அல்லது மாசு கற்பிக்க வேண்டும் என்ற எண்ணத்துடனோ எந்த அறிக்கையையும் கொடுக்கவில்லை என்பதை நான் வெட்ட வெளிச்சமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் 41 வருடமாகத் தொண்டனாக இருந்துகொண்டிருக்கிறேன். 28 வருடமாக இந்த நாட்டில் பிற்போக்கான ஒரு சமுதாயத்தைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்களுக்காக தொழிற் சங்கம் ஏதும் இல்லாத நிலையில் தொழிற் சங்கம் ஏதும் ஆரம்பிக்கப்பட முடியாத நிலையில் ஆரம்பிக்கப்பட்டு, இன்றைய தினம் 2, 3 லட்சம் தொழிலாளர்கள் பலன் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில், எனக்கு அந்த நிலத்தைப் பார்த்துக்கொள்வதற்கு நேரமே இல்லாமல் இருந்தது. மேலும், அந்தப் பட்டா கொடுத்த பூமியில் பல கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருந்தேன். செலவு பண்ணுவதற்கு வசதி இல்லை. ஆகவே, அதைத் திருப்பி எடுத்துக்கொண்டுவிட்டால் கூட, பரவாயில்லை என்று சொன்னேன். மேலும், வருடா வருடம் பணம் கட்ட வேண்டியிருந்தது. எனவேதான் அந்த நிலத்தைத் திருப்பி எடுத்துக்கொள்ளுங்கள், வரி கட்டுவதற்கு சக்தி அற்றவனாக இருக்கிறேன் என்று சொன்னேன். 8 ஆயிரம் பட்டாக்கள் கூடலூர் தாலுக்காவில் கொடுத்துக் கொண்டிருந்த நேரத்தில் அந்தப் பட்டா கொடுக்கப்பட்டது வாஸ்தவம்தான் என்று ஒத்துக்கொண்டிருக்கிறேன். ஆனால், ஏதோ இந்த சந்தர்ப்பத்தில் எதையோ செய்ததாக இன்றைய தினம் என் பேரில் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து ஒரு தப்பான பிரசாரத்திற்கு ஆளாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே இடத்தில் இன்றைய தினம் லட்சக் கணக்கான பட்டாக்கள் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். பத்திரிகையில் அன்றாடம் வந்து கொண்டிருக்கிறது. அந்த இடத்தில் சுமார் 6 ஆயிரம் பேர்களுக்குப் பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகும் 5 ஆயிரம் ஏழை மக்களுக்குப் பட்டாக்கள் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆனால், இன்றைய தினம் போலீசை வைத்து பட்டா கொடுக்கக் கூடாது என்று விரட்டியடிக்கிறார்கள்.

<u>மாண்புமிகு திரு. எஸ். மாதவன்</u>: தலைவர் அவர்களே, உரிமைப் பிரச்னை வருமா வராதா என்பதற்காக விளக்கம்தான் சொல்லலாமே தவிர, மற்ற விளக்கங்கள் எல்லாம் தேவை இல்லை. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் விவாதம் வேண்டுமா வேண்டாமா என்பதற்குத் தனியாகத் தீர்மானம் கொண்டுவரலாம். ஒவ்வொரு குற்றச்சாட்டிற்கும் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். ராமன் நாயர் : உரிமைப் பிரச்னைக்கு பொதுக் காரணம் என்னவென்ருல், என் மீது பழி சுமத்தப்பட்டுள்ளது. எனவே என் நிலைமையை சுத்தப்படுத்துவதற்காகவேதான் இதைச் சொல்லவேண்டியவனுக இருக்கிறேன். நான் என்னவோ பட்டா வாங்கி விட்டதாகவும் குற்றம் சுமத்துகிருர்கள். பட்டா ஏதும் கொடுக்காமலிருக்கும்போது, அவர்கள் எப்படி என் பேரில் குற்றம் சுமத்த முடியும் என்ற அளவில் என்னுடைய நிலையைச் சொல்லுவதற்காகவே இதைச் சொன்னேன். நான் ஒரு ஸ்தாபனத்தில் வேலை செய்கிறேன்.

மிஸ்டர் சேர்மன் : ''முன்பு இருந்த சர்க்கார் கொடுத்ததுதான் என்னிடம் இருக்கிறது, இந்த சர்க்கார் வந்து ஏதும் கொடுக்கவில்லை அல்லது கொடுத்திருக்கிறது'' என்று இதற்காக ஏதாவதுசொல்லுங்கள்.

திரு. ஆர். ராமன் நாயர் : இந்த சர்க்கார் வந்ததற்குப் பிறகு இந்த பூமி கொடுக்கப்படவில்லை, வாங்கப்படவும் இல்லை. என் நிலைமையை சுத்தமாக்குவதற்காக, மக்களுக்குத் தெரியப்படுத்துவதற்காகவே இந்த அறிக்கையைக் கொடுத்தேன். அதைத் தவிர, சபையை மாசுபடுத்த வேண்டும் என்றே, முதலமைச்சரைக் குறை கூற வேண்டுமென்றே, இந்த அறிக்கையைக் கொடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, இந்த உரிமைப் பிரச்னை மிக துரதிருஷ்டவசமாக, இந்த அவையில் இதற்கு முன்னல் இது வரையில் வந்திராத, எந்த சந்தர்ப்பத்திலும் நிகழ்ந்திராத ஒன்று.

திரு. எஸ். டி. ஆதித்தன் : திரு. பிரகாசம் அவர்கள் பேரில் ராஜாஜி அவர்கள் கொண்டு வந்திருக்கிருர்கள்.

*திரு. கே. ராஜாராம் : அது அசெம்பிளியில். கவுன்சிலில் அல்ல. இதைப்பற்றி திரு. ராமன் நாயர் அவர்கள் பேசும்போது, முதலமைச்சரையோ, இந்த சபையையோ அவமதிக்கும்படியான நோக்கம் ஏதும் தனக்கு இல்லை, சபைக்கு மாசு கற்பிக்கும்படியான நோக்கம் ஏதும் இல்லை, உள் நோக்கம் ஏதும் இல்லை என்றும், அவர்களுடைய நிலையை விளக்குவதற்காகத்தான் அறிக்கை விட்டதாகக் கூறியிருக்கிருர்கள். நண்பர்கள் உரிமைப் பிரச்னை கிளப்பியிருக்கிருர்கள். நாமும் கொஞ்சம் அவசரப்பட்டு முடிவு செய்வது நல்லதல்ல. தலைவர் அவர்கள் ஒரு முடிவிற்கு வருவதற்கு முன்பு, அடுத்த முறை நாம் கூடும்போது இதை எடுத்துக்கொள்ளலாம். அதாவது, பிரச்னையை ஆராய்ந்து, முதலமைச்சரையும் கலந்து ஆலோசித்து அதற்குப் பிறகு என்ன விஷயம் என்று முடிவு செய்யலாம். முடிவு ஏதும் எடுக்கப்படுவதற்கு முன்பு, இதை ஒத்துக்கொண்டு ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் அங்கத்தினர் கொண்டு வந்திருக்கின்ற உரிமைப் பிரச்னை உரிமை பிரச்னையாக மாறுமா மாருதா, 'ப்ரைமா ஃபேசி' கேஸ்

என்று சொல்வார்களே, அது இருக்கிறதா என்பதைப் பரிசீலிக்க வேண்டும். திரு. ராமன் நாயர் அவர்கள் பேசிய பேச்சுக்கள் மீண்டும் உரிமைப் பிரச்னைக்கு இடம் அளிக்குமோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மிகுந்த நல்லெண்ணத்தோடு இதைப் பற்றி நல்லெண்ணத்தைக் காண்பிக்கக்கூடிய அளவில் பரிசீலிக்க வேண்டும், அவருக்கு உள்நோக்கம் இல்லை என்று சொல்லி விட்டார்கள். அப்படிச் சொன்னதோடு விட்டிருந்தால் பரவாயில்லை. அதையும் சேர்த்து அவர்கள் சொன்னார்கள். முதலமைச்சர் அவர்கள் வேண்டுமென்றே, திரு. ராமன் நாயர் அவர்கள் மீது குற்றம் சுமத்த வேண்டும் என்ற ஒரு செய்தியைக் கொடுத்தார்கள், நோக்கத்தோடு கொடுத்தார்கள், உள் நோக்கத்தோடு கொடுத்தார்கள் என்ற அளவில் பேசியிருக்கிறார்கள். அங்கேதான் விவகாரம் வருகிறது. எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு, தகவல் தவறானது என்று சொல்லுவதற்கு உரிமை உண்டு. அப்படி வாதம் செய்வதற்கு உரிமை உண்டு. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேள்வி கேட்டுப் பேச வேண்டுமானால் இங்கே பேசலாம். ஆனால் வெளியில் அல்ல. அவையில் நடந்த நிகழ்ச்சி இது. இதைக் குறிப்பிட்டு இங்கே பேசுவதற்கு அங்கத்தினர் அவர்களுக்கு உரிமை உண்டு. அதைவிட்டு வெளியில் சொன்னால், அதைப் பத்திரிகைக்காரர்கள் பயன்படுத்திக் கொள்வார்கள். ஏமாந்துவிடக் கூடாது. பத்திரிகைக்காரர்கள் அவர்களுடைய லாபத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ளச் செய்யும்படி விட்டுவிடக் கூடாது. அங்கத்தினர்கள் மிகவும் ஜாக்ரதையாக இருக்க வேண்டும். வெளியிலே சொன்னால், தலைப்புக் கொடுத்துப் போட்டுவிடுவார்கள். இதிலும் தலைப்புக் கொடுத்துப் போட்டிருக்கிறார்கள். ''கருணாநிதி அபாண்டம்'' என்று போடப்பட்டு செய்தித் தாள் விற்கப்பட்டது அல்லவா? எனவே, அங்கத்தினர்கள் ஏமாந்துவிடக் கூடாது. பத்திரிகையில் என்ன போட்டிருக்கிறார்கள்? ''மூடி மறைப்பதற்காக இந்தத் தகவலைக் கொடுத்தார்கள்'' என்று அறிக்கையில் கொடுத்திருக்கிறார்கள். கொடுக்கவில்லை என்று சொன்னால், மிக்க மகிழ்ச்சி. ஆனால், பத்திரிகைக்காரர்கள் கொடுக்காததைக் கூட கொடுத்ததாகப் போட்டு விடுவார்கள். அத்தகைய திறமை அந்தப் பத்திரிகைக்காரர்களுக்கு உண்டு. இப்போது கூட சொல்லலாம், ''பத்திரிகைக்காரர்கள் ஏமாற்றிப் போட்டு விட்டார்கள்'' என்று. ''இதை மூடி மறைப்பதற்காக முதலமைச்சர் அவர்கள் இந்தக் கருத்தைக் கூறியிருக்கிறார்கள்'' என்று போட்டிருக்கிறார்கள். எல்லா அங்கத்தினர்களும் இங்கேதான் இருந்தார்கள். அங்கத்தினர்கள் கேள்வி கேட்டார்கள். அது சம்பந்தமாக பதில் கொடுக்கப்பட்டது. நான் எதிர்க் கட்சியாகிய காங்கிரஸ் கட்சியைப் பற்றி மட்டும் குறிப்பிடவில்லை. எல்லாக் கட்சிக்காரர்களும் இருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்கள் என்று மட்டும்கூட சொல்ல முடியாது. இந்த மன்றத்தில் நடக்கும் சம்பவங்களுக்கு மதிப்பு கொடுக்க வேண்டும். நல்ல நோக்கத்தோடு, முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு அங்கத்தினர் ராமன் நாயர் உட்பட வாங்கியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். எதையும் மூடி மறைப்பதற்காக அல்ல. தீய நோக்கத்தோடு அப்படிக் கூறியிருக்கிறார்கள் என்றால், அந்த ஒரு நிலையைப் புரிந்து சொள்ள முடியவில்லை. அப்படித் தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள் என்றால், அதைக்

கூட, மாண்புமிகு அங்கத்தினர்கள் குறை கூற உரிமை உண்டு. இன்றைக்குக் கூட சொல்லலாம். ஏதாவது தவறுகளோ, குறைபாடு களோ, இருந்தால், அதை எதிர்க் கட்சித் தலைவரிடம் சொல்லி, அந்தத் தகவலை இந்த மன்றத்திற்குக் கொடுத்திருக்கலாம். அப்படி யில்லாமல் வெளியில் பத்திரிகை உலகத்திற்குச் சென்று கூறுவதென்றால், நம்மை நாமே இழித்துக் கொள்வதாக, இழிவுபடுத்திக் கொள்வதாக ஆகும். அது சரியல்ல. இந்தச் சட்ட மன்றத்தில் எல்லோரும் ஒன்று. எதிர்க் கட்சி ஆளுங் கட்சிக்கு மதிப்புத் தர வேண்டும், ஆளுங் கட்சி எதிர்க் கட்சிக்கு மதிப்புத் தர வேண்டும். தவறான தகவல்கள் இருந்தால், எடுத்துக் காட்ட உரிமை உண்டு. விவாதத்தின் மூலம் அதைத் தெளிவுபடுத்திக் கொள்ளலாம். அதை விட்டு, பத்திரிகை உலகத்திற்குச் சென்று, அதைப் பத்திரிகைக்காரர்கள் பயன்படுத்திக் கொள்ளும் முயற்சியில் விட்டுவிடுவது தீய நோக்கத்தையுடையதாக அமையும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்கள்
10-30 a.m. உறுப்பினர் அவர்களைப் சரியாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். திசை திருப்பும் முயற்சி, கருணாநிதியின் திசை திருப்பும் முயற்சியை அம்பலப்படுத்தினர் என்று போட்டிருக்கிறது. திசை திருப்பும் நோக்கம் எந்தச் சந்தர்ப்பத்திலும் எழவில்லை என்பதைக் கூறிக்கொள் கிறேன். 10 ஏக்கராவோ, 4 1/2 ஏக்கராவோ, 6 1/2 ஏக்கராவோ நீங்கள் வைத்து இல்லாத ஒன்றை வைத்திருப்பதாகப் பொய்யாக முதலமைச்சர் அவர்கள் தீய நோக்கத்தோடு, உறுப்பினர் அவர்கள் அனுபவிக்காத ஒன்றை அனுபவிப்பதாகச் சொன்னதாகப் போட்டிருக் கிறது. உறுப்பினர் அவர்கள் இன்றைக்குச் சொல்கிறபோது, ''என் கிரோச்மெண்ட் செய்திருந்தேன், அந்த நிலம் எனக்குப் பட்டா கொடுக்கப்பட்டது'', என்று கூறினார்கள். என்கிரோச்மெண்ட் செய்வ தற்கு எந்த உரிமையும் இல்லை, எந்தச் சட்டமும் இல்லை. அதை எந்தச் சட்டமும் ஆதரிக்கவும் இல்லை. தவறு. நீங்கள் ஆக்கிரமித்து இருந்த நிலத்தைக் கொடுத்ததைச் சொல்லவில்லை. சொல்லாததை யெல்லாம் எடுத்துக்கொண்டு ஒரு தவறான எண்ணம் வரும்படி பத்திரிகையிலே அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். விளக்கம் கொடுக்கின்ற முறையிலே இந்தச் சபையையும், முதலமைச்சர் அவர்களையும் அவமானப்படுத்துகிற வகையிலே அறிக்கை கொடுத்திருக் கிறார்கள். அதுதான் தவறானது என்று சுட்டிக் காட்டுகிறேன். அது எவ்வளவு தவறானது, எவ்வளவு தவறான தகவலைப் பத்திரிகைக்குத் தந்திருக்கிறார்கள் என்பதை உறுப்பினர் அவர்கள் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். முதலமைச்சர் அவர்கள் தியாகிகளும், ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்களும் இதிலே அடங்குவார்கள் என்று சொல் லியதை, தியாகிகளை விலக்கிக் காண்பித்து அவர்கள் மதிக்கப்படுகிற நல்ல நோக்கத்தோடு பதில் சொன்னதை, இன்றைக்கு முதலமைச்சர் தியாகிகளை அவமானப்படுத்துகிற முறையிலே சொன்னார் என்று ஒரு தீய கருததைப் பத்திரிகையிலே வெளியிடுவது எவ்வளவு பெரும் தீயது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்குச் சிந்தித்துப் பார்த்தோம். நாம் கொடுத்த தகவல் ஏதாவது தவறானதாக இருக் குமோ என்று தீவிரமாக விசாரித்துப் பார்த்தோம். ஏதாவது தவறு நடந்திருக்குமோ, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமன் நாயர் அவர்

களின் உள்ளத்தைப் புண்படுத்துகிற வகையிலே நடந்து கொண்டு விட்டோமோ என்று அச்சத்தோடு மறுபடியும் தீவிரமாக விசாரித்துப் பார்த்தோம். மற்றவர்களை அவமானப்படுத்துகிற முறையிலோ, அல்லது அவர்கள் மனம் புண்படுகின்ற வகையிலோ நடந்துகொள்கிற வர்கள் அல்ல. அப்படிப்பட்ட அரசியல் அநாகரீகத்திலே நம்பிக்கை உடையவர்கள் அல்ல. அந்தப் பண்பிலே வளர்ந்தவர்கள் அல்ல. திரு. ராமன் நாயர் அவர்களுக்கு 5—10—56-லே 10 ஏக்கரா நிலம் தியாகி நிலமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைத் திருவேங்கடம் என்பவர் அனுபவித்துக்கொண்டிருந்தார். அவரை வெளியேற்றிவிட்டு அந்த நிலத்தை இவருக்குக் கொடுக்கவேண்டுமென்று உத்திரவு பிறப் பிக்கப்பட்டு, அந்த நிலம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனல் எதிர்க் கட்சித் தலைவர் சொல்லும்போது, அவர்கள் சொன்ன வார்த்தை, ''இந்த நிலத்தை அவர் வாங்கிக்கொள்ளவில்லை. அந்த பூமி பிறரிடம் இருக்கிறதே தவிர, இவர் வசம் கொடுக்கப்படவில்லை'' என்பதாகும். ''அந்த நிலத்தை என்னலே உழ முடியவில்லை, அதனல் சாகுபடி செய்வதற்கு பெருந்தன்மையோடு அந்த நிலத்தை வேறு ஒருவருக்குக் கொடுத்துவிட்டேன்; அந்த நிலம் என்னிடம் இல்லை'' என்பதாக இந்தச் சபையிலே சொன்னர். இது உண்மை. ஆனல் ஆராய்ந்து பார்த்தபோது, இந்த நிலம் இன்னும் ராமன் நாயரின் பெயரிலேதான் இருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் இதைக் குறிப்பிட விரும்புகிறேன். 12—12—61-லே 4 ஏக்கரா 54 சென்ட் நிலம் சர்வே நெம்பர் 343/3, கூடலூர் தாலுகா நெல்லியாளம் கிராமத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலம் 1957-ம் ஆண்டிலிருந்து அவருடைய அனுபவத்தில் இருந்து வந்தது. அந்த நிலத்தை அவருக்குக் கொடுத்திருக்கிருர்கள். அதைத் தவறு என்று வாதிடவில்லை. கொடுக் கப்பட்டிருக்கிற செய்தியைச் சொல்லுகிறேன். காரணம், வெளியே 'எல்லா பூமியும் திராவிட முன்னேற்றக் கழகக் காரனுக்கே கொடுக்கப் படுகிறது என்ற கருத்து சொல்லப்படுகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்களுக்குக் கொடுக்கப்பட்டால், அவர்கள் பாவம் செய்து விடவில்லை. காங்கிரஸ்காரர்கள் நிலம் வாங்கிக் கொண்டதனலேயே, அவர்கள் பாவம் செய்தவர்கள் அல்ல. எந்தக் கட்சிக்காரர்களானலும், அவர்கள் பாவம் செய்தவர்கள் அல்ல. ஜனநாயகத்திலே எல்லாக் கட்சிக்காரர்களும் நிலத்தை வாங்கி அனுபவிக்க உரிமை பெற்றவர்கள். நாங்கள் மறுக்கவில்லை. நாங்கள் கேட்பதெல்லாம் தவருன தகவலைப் பத்திரிகையிலே கொடுத்திருக்கிருர்களே, அது சரியானதுதானு? 15-10-1962-ல் பி.கே. கோமளவல்லி அம்மாளுக்கு 2 ஏக்கரா 46 சென்ட் நிலம் சர்வே எண். 342-ல் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1—7—1959 முதல் அந்த நிலத்தை அவர் அனுபவித்துக்கொண்டிருக்கிருர் என்ற அடிப்படையிலே அது அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு அடுத்தபடியாக கொண்டம்மாளு அவர்களுக்கு 26—10—64 இலே இரண்டு ஏக்கரா 70 சென்ட் நிலம் 101/26 சர்வே நெம்பரில் கொடுக்கப்பட்டிருக்கிறது. சந்திரிகா, ராமன் நாயரின் மகள், அவர் களுக்குகடலூர் நெல்லியாளம் கிராமத்தில் 2ஏக்கரா 84சென்ட் நிலம், 101/27 சர்வே நெம்பரில் உள்ள நிலம், கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலங்களெல்லாம் முன்னலே அனுபவிக்காத நிலம். இந்த

நிலங்கள் இவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கான தகவல்கள் இருக்கின்றன. அவ்வளவுதான். இதைக்கூட சரியில்லை என்று சொல்லுவார்களானால், நிச்சயம் விசாரணை செய்து இது சரியா இல்லையா என்பதைக் கண்டறியத் தயாராக இருக்கிறோம். தவறான நோக்கத்தோடு சொன்னோம், திசை திருப்பி விடுகிற நோக்கத்தோடு, தீய நோக்கத்தோடு சொன்னோம் என்று முதலமைச்சர் மீது மாசு கற்பிப்பது சரியல்ல என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். யார், யார் அப்படி நிலம் வாங்கியவர்கள், யாராவது வாங்கி இருந்தால் அவர் பெயரைச் சொல்லுங்கள் என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்ட காரணத்தினால் தான், திரு. ராமன் நாயர் அவர்களுடைய பெயரைச் சொன்னோம். வேறு காரணம் எதுவும் இல்லை. எவர் மீதும் பழி சுமத்த வேண்டும் என்று சொல்லவில்லை. எந்த எந்த இடத்திலே எந்த எந்த எம்.எல்.ஏ., எம்.எல்.சி. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களா, வேறு கட்சியைச் சேர்ந்தவர்களா என்ற எல்லாப் புள்ளி விவரங்களையும் தயாராக வைத்திருக்கிறோம். யாரையும் குறை கூறுவதற்காகச் சொல்லவில்லை. யாராவது இந்த மன்றத்திலே இருக்கிறவர்கள் நிலம் வாங்கியிருந்தால் சொல்லுங்கள் என்று எதிர்க் கட்சித் தலைவர் கேட்ட காரணத்தினால், சொன்னோம். இதிலே பரிசீலிக்க வேண்டியது அப்படிக் கொடுக்கப் பட்டது 10 ஏக்கராவோ, 20 ஏக்கராவோ என்பதல்ல. கொடுக்கப் பட்டதா, இல்லையா, இப்படி நிலத்தை அவர் பெற்றுக்கொண்டிருக்கிறாரா இல்லையா என்பதுதான். அதைப்பற்றிச் சரியான தகவல்களைக் கொடுக்க வேண்டுமே தவிர, நாங்கள் சொல்லியதிலே தவறு இருந்தால் அதைச் சுட்டிக் காட்டியிருந்தால், பதில் சொல்லத் தயாராக இருக்கிறோம். விசாரிக்க வேண்டுமென்று சொல்லி அறிக்கை எழுதிக் கொடுக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் மீது உள்ள உரிமைப் பிரச்னை, முதலமைச்சரின் மீது பழி சுமத்தும் தீய நோக்கத்தோடு இதுபோன்ற அறிக்கையைக் கொடுத்திருக்கிறார் என்பதுதான். எனவே அவர் சொல்லிய வார்த்தைகள் தவறு என்று மாண்புமிகு உறுப்பினர் அவற்றை வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டும். பத்திரிகைக்காரர்கள் அப்படித் தான் போடுவார்கள். அவர் சொல்லாததையும் போட்டிருப்பார்கள். ஆகையால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த அறிக்கையிலே கண்ட வார்த்தைகள் தவறானவை, நான் சொல்லியது தவறு என்று சொல்லி விடுவார்களானால் இது பிரச்னையில்லை. பத்திரிகையில் பிரசுரித்ததற்காக உரிமைக் குழு, வெளியிடுபவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளும். அதில் ஆட்சேபணையில்லை. அதைத்தான் சொல்கிறேன். நாங்கள் சொன்னவைகளில் தவறு இருக்குமானால், அதை நிரூபித்தால் பதில் அளிக்கத் தயாராக இருக்கிறோம். இங்கே அவருடைய நிலையை விளக்கிச் சொல்லும் வாய்ப்பை விட்டுவிட்டு வெளியிலே சென்று இந்த மன்றத்திற்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் மாசு கற்பிக்கும் முறையிலே இப்படிப்பட்ட தவறான அறிக்கைகளைக் கொடுப்பது சரியல்ல என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். முதலமைச்சர் அவர்களுக்கு மாசு கற்பிக்கிற முறையிலே பத்திரிகைகள் அறிக்கை கொடுக்கும்படியான சூழ்நிலையை உருவாக்கிக்கொண்டார்கள். எனவே இது உரிமை மீறிய செயல் என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

3rd December 1970]

*திரு. கே. ராஜாராம் : திரு. ராமன் நாயர் அவர்கள் பத்திரிகையிலே அறிக்கை கொடுத்ததை இல்லை என்று சொல்லவில்லை. அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். ஆனால் அவர் சரியான முறையிலே தமிழ் அறிந்திராத காரணத்தினால், அந்த அறிக்கையிலே தவறு இருக்கலாம். அதற்காக இதை உரிமைப் பிரச்னையாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். முதலமைச்சர் அவர்களுக்கு மாசு கற்பிக்கிற எண்ணம் அவருக்குக் கிடையாது. அந்த அறிக்கையை வாபஸ் வாங்கிக்கொள் கிறேன் என்கிறார். ஆனால் அதைக் கிளியராகச் சொல்லவில்லை. அவ்வளவுதான்.

திரு. ஆர். ராமன் நாயர் : அந்த அறிக்கையிலே வந்தது தவறானது என்றால், அதை நான் வாபஸ் வாங்கிக் கொள்கிறேன். எனக்குத் தமிழ் சரியாகத் தெரியாது. நான் தமிழில் நன்றாகப் படித்தவன் அல்ல.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : உறுப்பினர் அவர்கள் அறிக்கை கொடுத்தார்களா இல்லையா ?

*திரு. கே. ராஜாராம் : அவர் கொடுத்த அறிக்கை தப்பான அபிப்பிராயத்தை ஏற்படுத்துமானால், வாபஸ் வாங்கிக்கொள்கிறேன் என்கிறார். என்க்ரோச்மெண்ட் என்றால் என்ன என்று அர்த்தம் தெரியாமல் பேசினார்கள். அனுபவத்தில் இருப்பதை என்க்ரோச்மெண்ட் என்ற அர்த்தத்திலே கூறியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : அவருக்கு நிலம் வழங்கப் பட்டதையே நாங்கள் தவறு என்று சொல்ல வரவில்லை. ஆனால் முதலமைச்சர் அவர்கள் திசை திருப்பும் முறையில் தவறான தகவல்களைத் தந்தார்கள் என்று அறிக்கை கொடுத்திருப்பதுதான் தவறு. வாபஸ் வாங்கிக்கொள்ளச் சொல்கிறேன். பத்திரிகை மீது என்ன நடவடிக்கை எடுப்பது என்பதைப்பற்றி பின்னால் சொல்கிறேன்.

திரு. ஆர். ராமன் நாயர் : யாரையும் அவமானப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு அந்த அறிக்கையைக் கொடுக்கவில்லை. என்னுடைய நிலையை விளக்குவதற்காகத்தான் அந்த அறிக்கையைக் கொடுத்தேன். அந்த அறிக்கை தவறானது என்றால், தவறான வாக்கியத்தை வாபஸ் வாங்கிக்கொள்கிறேன்.

மிஸ்டர் சேர்மன் : அந்த அறிக்கையிலே உள்ள வாசகங்கள் சரியா?

திரு. ஆர். ராமன் நாயர் : அந்த அறிக்கையிலே வந்திருக்கிற வாசகங்கள் தவறு. அந்தத் தவறான வார்த்தைகளை நான் வாபஸ் வாங்கிக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : அந்த பத்திரிகையினுடைய ஆசிரியரைப் பொறுத்த வரைக்கும் தீர்ப்புக்கு விட்டுவிடுகிறேன்.

மிஸ்டர் சேர்மன் : அதை பிரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்பலாம். திரு. ராமன் நாயரை மன்னித்துவிடலாம்.

10-40 a.m. திரு. கே. ராஜாராம் : இவர்கள் கொடுத்த அறிக்கை தவறாக இருக்கிறது என்றுதான் பிரிவிலெஜ் கமிட்டிக்கு அனுப்பலாம் என்று இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அறிக்கை கொடுத்தது உண்மை என்று ஒத்துக்கொண்டார். அதை அவர்கள் போட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : தலைவர் அவர்களே, அதைப் பற்றிக்கூட சட்டம் இருக்கிறது. யார் எதைச் சொன்னாலும் பத்திரிகா சுதந்திரத்தின் பேரால் எதையும் போட்டுவிடலாம் என்ற அரசியல் அநாகரீகம் இந்த நாட்டிலே வளர்க்கப்பட்டு வருகிறது. சபையைப் பொறுத்த வரைக்கும் பத்திரிகைக்காரர்களுக்கு அந்த உரிமை இல்லை. விதிகளிலே மிகத் தெளிவாகப் போடப்பட்டிருக்கிறது. அந்த ''புரொட்டக்ஷன்'' அவர்களுக்குக் கிடையாது. ஆகவே ஆசிரியர் அவர்களுக்கு நாம் நோட்டீஸ் அனுப்பலாம். அவர்கள் இதற்கு என்ன சொல்கிறார்கள்? உறுப்பினர் அவர்கள் வாபஸ் வாங்கிக் கொண்டதாலே, அவர்களும் வாபஸ் வாங்கிக் கொள்வதானால், நாம் ஏற்றுக்கொள்கிறோம். நமது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல், இவர்கள் வாபஸ் வாங்கிக்கொண்ட காரணத்தாலே, பத்திரிகை ஆசிரியருக்கும் ஒரு வாய்ப்புக் கொடுத்தால் என்ன என்று சொல்கிறார்கள். எனவே அதற்குப் பிறகு மன்றத்திலே எடுத்துக் கொள்ளலாம்.

MR. CHAIRMAN : Then I reserve my ruling.

(Deputy Chairman in the Chair).

V. CALL-ATTENTION NOTICES

(1) *Hardship caused to the Spinning Mills in Tamil Nadu and the resultant Unemployment of Workers due to Non-availability of Cotton.*

*THIRU K. RAJARAM : Mr. Deputy Chairman, Sir, I call the attention of the Hon. the Minister for Industries to a matter of urgent public importance, namely, the hardship caused to the Spinning Mills in Tamil Nadu due to the sudden non-availability of cotton of the required quality and quantity and the resultant unemployment that may be caused to lakhs of mill workers due to the threatened closure of the mills for want of raw materials.

THE HON. THIRU S. MADHAVAN : Mr. Deputy Chairman, Sir, Tamil Nadu is surplus in cotton yarn production with the total production of yarn by our mills being about 75,000 bales per month, and the total consumption about 35,000 bales only per mensem. However, representatives of Handloom Industry complained in March '70 against

the gradual increase in yarn prices and the Government discussed the problem at a meeting on 11-3-1970 and ordered in G.O. Ms. No. 901, Industries, dated 16-4-70 the constitution of a Committee with Director of Handlooms and Textiles as its Chairman. Owing to the efforts of this Committee, the South India Mill Owners' Association requested its member mills to hold the price line of yarn and the South India Yarn Trade Federation asked its members to limit the profit margin to 1% only. These steps had some effect indicating a gradual decline in prices. But it could not last long against the odds of sharp rise in prices of indigenous cotton faced by our textile mills. And so, there is a spurt again during the past one month.

The main reason for the increase in prices of cotton yarn is the very acute situation in the supply of cotton leading to abnormal high prices of cotton. The cotton crop of the current cotton year has been estimated to be of the order of 57 lakhs bales in the country as against the original anticipation of 62 lakhs bales. The arrivals of crop into the market are also reported to be smaller than in preceding years, leading to a pressure on the available supplies of cotton. This situation has further worsened by 'rush purchases' by several Mills. Another reason is that the import of foreign cotton was delayed considerably due to a prolonged dispute over the quantum of commission etc. between the newly constituted Cotton Corporation of India and the Importers of cotton. However, this has been got over and the foreign cotton has started coming to the country.

So far as Tamil Nadu is concerned, the annual requirement of raw cotton is about 10.5 lakhs bales, of which only about 2.56 lakhs bales of cotton are produced within the State. Consequently the bulk of the requirement of cotton is to be met by purchase from up-country States and by way of imports. Further, the mills in Tamil Nadu which depend on other States for their supplies of cotton have to pay a higher price *i.e.*, Rs.150/- per candy—than their counter-parts in Bombay and Ahmedabad.

As an immediate remedy to the spiralling prices of cotton and to meet the shortage of cotton, the Textile Industry is considering the need for a block closure of all mills on an All India basis statutorily, at least for a week if not for 2 weeks, till the position improves. However, the Minister of State in the Ministry of Foreign Trade is reported to have assured the Rajya Sabha on the 26th November 1970 that there would be no closure of Textile Mills in the country for want of cotton supply and that every possible effort would be made to make cotton available to the Textile Mills. He has also indicated that the Government of India would import an additional quantity of 5 lakhs bales of cotton during the year to meet the situation.

The only immediate way to get over this crisis, is expeditious and massive import of cotton. The Director of Handlooms and Textiles has requested the Textile Commissioner, Bombay to make expeditious arrangements for larger imports of short staple American Cotton. He has also requested the Cotton Corporation of India to arrange for the procurement of up-country cotton also and supply them to the Textile Mills in our State at fair and economic prices. The prices of yarn sold by the Co-operative Spinning Mills to the Weavers Co-operative Societies are being fixed at reasonable levels with a view to see that the price is held finally and the whole production of the Co-operative Spinning Mills is being earmarked for the use of these co-operatives.

As a long-term measure, action is being pursued with the co-operation of the Department of Agriculture, the Textile industry and the Department of Handlooms to prepare schemes for increasing the cotton production in our State which is the ultimate remedy for the ills of the cotton mill industry in our State.

The State Government are closely watching the situation and keeping in touch with the Government of India with a view to avert any crisis in the Textile industry or in the handloom industry. Though the mass closure of mills will not be a solution for the present crisis, it is absolutely necessary to make the cotton available to all the mills and all possible steps will be taken to achieve this end.

THIRU S. NARAYANASWAMY : On a point of clarification from the Hon. Minister.

10-50 a.m. DEPUTY CHAIRMAN : Generally, as per rules, no debate is allowed on such a statement.

*THIRU S. NARAYANASWAMY : While we are grateful to the Hon. Minister for the very detailed statement about steps taken to protect the interests of the South Indian Spinning and Weaving Mills, all I want to know is this. In view of the threat in the papers that the Government of India are likely to impose ceiling prices and bring in a system of control over raw cotton, the chances are for cotton going underground and becoming more unavailable to the mills. As in the past, control measures have only made the commodity more scarce than before, it is likely to make the difficulties of South Indian Textile Mills even more real than ever before for the reason that the Central Government, with all the regidities attendant on procurement of cotton, may not be able to procure the required quantity of cotton. In view of this, would the State Government take steps to see that nothing is done by the Central Government in a hurry to impose any ceiling price or general physical control over cotton, so that we are at least not in a worse position than now in regard to supply of cotton to Southern State Mills ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய சூழ்நிலையை மாற்றியமைப்பதற்காக, ஆலைகளுக்குப் போதிய பஞ்சு கிடைக்கக்கூடிய வழிவகைகளைக் காண்பதற்காகச் சில முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலே ஒரு முயற்சி, இன்றைக்குச் செய்தியாக வந்திருப்பதாக மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட சட்டமோ, கட்டுப்பாடோ வருமானால், அது எந்த அளவுக்கு ஆலைகளுக்குச் சாதகமாக இருக்கும் அல்லது பாதகமாக இருக்கும் என்பதையெல்லாம் மத்திய அரசாங்கம் பரிசீலிக்கும் என்று நான் நம்புகிறேன். ஆலைகளுக்குப் பஞ்சு தடங்கல் இல்லாமல் கிடைக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு, பஞ்சை சில பேர் பதுக்கி வைக்க இடமிருக்கக் கூடாது என்ற நோக்கத்தோடு, இந்த நடவடிக்கைகள் எல்லாம் எடுப்பதாகத் தெரிகிறது. நிச்சயம் ஆலைகளுக்குப் பாதகமாக எந்த நடவடிக்கையையாவது மத்திய அரசாங்கம் எடுக்குமானால், நமது மாநில அரசு ஆலைகள் சிறந்த முறையில் தடையில்லாமல் நடக்கவும் பஞ்சு கிடைக்கவும் மத்திய அரசோடு தொடர்பு கொண்டு ஆவன செய்வதற்குத் தயாராக இருக்கும்.

VI. MOTION FOR SUSPENSION OF RULE 42 OF THE COUNCIL RULES

DEPUTY CHAIRMAN : I move—

"That rule 42 of the Tamil Nadu Legislative Council Rules be suspended with reference to the limitation laid down in sub-rule (3) thereof and that more than one matter under that rule be permitted to be raised today."

The motion was put and carried.

(2) *Failure of the authorities to disburse salary for the month of October 1970 to the staff of Government Arts College for Women, Madras*

THIRU G. VASANTHA PAI : Mr. Deputy Chairman, I wish to call the attention of the Hon. the Minister for Education to a matter of urgent public importance, namely, the failure of the authorities to disburse the salaries to all the members of the staff of the Government Arts College for Women, Madras for the month of October 1970, and may I add that the salary for the month of November 1970 also has not been paid on 26th November 1970.

மாண்புமிகு திரு. எஸ்.மாதவன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அண்மையில் அக்டோபர் மாதத்திற்குச் சம்பளம் கொடுக்கவில்லை என்று கூறுகிறார். அக்டோபருக்கான சம்பளம் நவம்பர் மாதம் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். நவம்பர் மாதத்திற்குச் சம்பளம் டிசம்பர் மாதம்தான் கொடுக்க வேண்டும். அரசாங்கம் அதைப் பரிசீலித்தது. அந்தக் கல்லூரியில் எல்லோருக்கும் சம்பளம் கொடுக்கவில்லை என்று கூறுவது தவறு. ஏற்கெனவே இருக்கிறவர்களுக்கெல்லாம் கொடுக்கப்பட்டது.

புதிதாக சில ஸ்டாஃப்களை (Staffs) அரசாங்கம் நியமிக்க அனுமதி அளித்தது. அந்த ஆசிரியர்களுக்கு அல்லது வேறு துறையில் பணி யாற்றுகிறவர்களுக்கு மட்டும்தான் இந்தச் சம்பளம் அக்டோபர், நவம்பர் மாதம் கொடுக்கப்படாமல் இருந்தது. அதற்கு அரசாங்கத் தின் அனுமதி பெற்று இன்னும் சில நாட்களில் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். கல்லூரி முழுவதும் பாதிக்கும் சூழ்நிலையில் இல்லை. ஒரு சிலரைப் புதிதாக நியமித்ததால் ஏற்பட்ட தயக்கமே தவிர, வேறு எந்தவிதமான தவறும் நடக்கவில்லை.

THIRU G. VASANTHA PAI : On a point of clarification, Sir. I am told that there are about 18 persons who have not been given their salaries for October 1970, that the salary for November, 1970, due on 26th November 1970, has not yet been paid and that there is an order of the Government that the salary should be paid by the first of December. Will the Hon. Minister see that at least hereafter such hardship is not created to professors and lecturers in an educational institution?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : அதுதான் முன்னாலேயே சொன்னேன். கல்லூரி முழுவதற்கும் சம்பளம் கொடுக்கவில்லை என்று சொல்லக் கூடாது. ஒரு பேராசிரியர், ஏழு அசிஸ்டெண்ட் புரபொசர் கள், இரண்டு ஆங்கில டியூட்டர்கள், மூன்று டெமான்ஸ்ட்ரேடர்கள், நான்கு அட்டெண்டர்கள் ஆகிய இவர்கள் எல்லாம் அண்மையில் தங்களுடைய பதவிகளுக்கு ஒப்புதல் பெற்றார்கள். அதாவது 24-9-70 -ல் அரசாங்கத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதற்குப் பின்னால் உடனடியாக அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்றும் சட்டசபையின் அனுமதியைப் பெற்றும் சம்பளம் கொடுக்க வேண்டும். அதில் கால தாமதம் ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கம் அதைத் தவிர்க்க வேண்டு மென்று, கன்டின்ஜென்சி பண்டிலிருந்து உடனடியாகச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறோம். ஒரு மாத காலம் இடைவெளி ஏற்பட்டதே தவிர, பெரிய தவறு எதுவும் நடக்க வில்லை. அதுவும் கல்லூரி முழுவதற்கும் இல்லை. ஒருசில பேர்களுக்கு அந்தப் பதவி புதிதாக உருவாக்கப்பட்டதால் ஏற்பட்டது என்பதை இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

VII. GOVERNMENT BILLS

(1) *The Tamil Nadu Prohibition (Amendment) Bill*, 1970 (*L.A. Bill No.* 39 *of* 1970)

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மதுவிலக்குத் திருத்த மசோதாவை † சட்டமன்றப் பேரவை மசோதா எண் 39/1970 ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் பிரேரேபிக்கிறேன்.

இந்த மசோதாவைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே இருந்த சட்டத்திலே இப்போது அனுமதி வாங்கிக் கொண்டு சில பேர் குடிப்ப தற்கு வழி வகை செய்யப்பட்டிருக்கிறது. வேறு சில உபயோகத்திற்கு மெடிசினல் பர்ப்பசுக்கு அனுமதி கொடுப்பதற்கும் இப்போதிருக்கிற மூலச் சட்டத்திலேயே இடம் இருக்கிறது. அதே போல இப்போது

†Printed as Appendix I

3rd December 1970] [திரு. எஸ். மாதவன்]

புதிதாகக் கொண்டுவந்திருக்கிற சட்டத்தில் 17 (பி) என்ற பிரிவைச் சேர்த்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கும், ஏற்கெனவே மூலச் சட்டத்தில் அனுமதிக்கப் பட்டிருக்கிற காரணங்களுக்காகக் கொடுப்ப தற்கு வழிவகை செய்வதற்கும், இந்த மாநிலத்திலேயே உற்பத்தி செய்வதற்கு நாம் அனுமதி கொடுப்பதற்கான ஒரு அதிகாரத்தை இந்த மசோதாவின் மூலமாக அரசாங்கம் பெற விரும்புகிறது. இத னுடைய முக்கியமான நோக்கம் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட வழி முறையின்படி அந்தக் காரணங்களுக்காக இந்த மதுவை நாமே உற் பத்தி செய்ய வேண்டுமென்பது தான். இன்னொரு நோக்கம், இதற்குத் தேவையான மூலப்பொருள்கள் ஏராளமாக தமிழ் நாட்டில் கிடைக்கின் றன. இதை நாம் வீணாகப் போகும்படி செய்துவிட்டு வெளி நாடு களிலிருந்து இந்த மாநிலத்திலுள்ள சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட தேவைகளுக்காக மதுவை வரவழைக்கக்கூடாது என்ற நோக்கத்தோடு பரிசீலிக்கப்பட்டு இதற்கும் அரசாங்கம் அனுமதி கொடுக்கலாம் என்ற முடிவை இந்த மசோதாவின் மூலம் பெற விரும்புகிறோம். இதற்கும் மதுவிலக்குச் சட்டத்திற்கும் மதுவிலக்குக் கொள்கைக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்பதை வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். மதுவிலக்குக் கொள்கையைத் தீவிரமாக அமுல் நடத்தவும் சிறந்த முறையில் அமுல் நடத்த வேண்டுமென்ற உறுதியும் இந்த அரசாங்கத் திற்குத் தொடர்ந்திருக்கிறது. அதே நேரத்தில் இந்தச் சட்டத்திலும் எடுக்கிற நடவடிக்கைகளிலும் சில குறைபாடுகள் இருக்கின்றன. அவ்வப் போது இந்த மன்றத்திலும் வெளியே பொதுமக்களும் அவற்றைச் சுட்டிக்காட்டுகிறபோது, அதைத் திருத்த இந்த அரசு தயக்கம் காட் டாது, அதைப் பரிசீலித்து நடவடிக்கை எடுத்துவரும் என்பதைக் கூற ஆசைப்படுகிறேன். மதுவிலக்குக் கொள்கையை இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில், வெற்றிகரமாக நடத்த வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. அதைப் புறக்கணிக்க வழி செய்யாத வகையில் இந்த மசோதா அமுல் நடத்தப்படும் என்ற உறுதியை இந்த மன்றத்திற்குத் தர விரும்புகிறேன். ஆகையால் இந்த மசோதாவை எல்லா அங்கத்தினர் களும் ஏகோபித்து ஆதரித்து நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

DEPUTY CHAIRMAN : Motion moved—

"That the Tamil Nadu Prohibition (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 39 of 1970), as passed by the Assembly, be taken into consideration."

*THIRU G. VASANTHA PAI : Mr. Deputy Chairman, the policy, of the Government has been stated by the Hon. Minister that they do not wish to impinge on the policy of State prohibition. But my respectful submission to this House is that by slow stages, step by step there is an erosion into the concept of prohibition prevailing in this State. Already on the last occasion I brought to the notice of the Hon. Minister in answer to a question, the abundance of cropping up of liquor shops

all over Madras City and of course, one of our Members Thiru S. Raghavanandam said, "I am not able to see any of them. How does my friend see them ?" I can only say in terms of the Biblical expression "Men have eyes and they see not." Wherever we go, we pass by them.

THIRU S. RAGHAVANANDAM : I see not evil.

THIRU G. VASANTHA PAI : I hope so. Drink not evil. See not evil. That is the policy of the Government and I hope every member of the Government will stand by it. While I appreciate the Tamil Nadu Government's effort to keep up the policy of prohibition, I wish to point out that there has been a gradual erosion into that. I would like to submit that formerly all persons who were educated as a class by themselves used to spend their time in the clubs and after 9 p.m. they used to drink in the secrecy of the club where there were no children. Now there has been a prohibition that liquor should not be sold or consumed in the club.

THE HON. THIRU S. MADHAVAN : For the information of the hon. Member, I may say that the particular Government Order has been rescinded and now it is permitted.

THIRU G. VASANTHA PAI : I am obliged to the Hon. Minister for this information. I am happy that people will not pollute their homes but will go to the clubs and drink to their heart's content with their permits. That was one statement which I wanted to make on the floor of this House, for which a suitable answer has been given by the Hon. Minister and I am obliged to him for it.

The second thing is that the huge boards are very inviting. I would like to tell him that if he sees the board—even Thiru S. Raghavanandam cannot escape seeing that—he will be tempted. I live in Gandhinagar and there is a board. I go to Nungambakkam and I see a board there. I go to Habibullah Road where our Sabha is situate and I see a board with big letters, though permits are available only on grounds of health. My submission to this House is that here is another erosion of that policy. Here the Government are coming and saying that they would manufacture potable liquor or give licence or permission to manufacture potable liquor for export. What is sauce for the goose is sauce for the gander. If it is on grounds of social order and health, our country and our people should not take to liquor, it is wrong for us to say that we shall manufacture liquor for exporting it to other countries and that people there may be spoilt. Of course, we will get some money in return. We will get money for the liquor which we manufacture in this country. It is a social evil. I repeat that sauce for the goose is sauce for the gander. We hear very many comments from persons abroad. I would like to mention here that whenever delegations go

abroad from prohibition affected States, they do not have any qualms for drinking, and they drink outside this country. My respectful submission is that this creates a bad impression in the minds of the people there that when they go from prohibition areas, they are willing and prefer to drink outside. Many people from our State go to Pondicherry and Bangalore to drink. The pith and substance of this legislation is to prevent a social evil—drinking. Drink should be permiitted only on the grounds of health. My respectful submission is that while considering this Bill, this House should like to impress upon the Government that they should not further erode into this policy of prohibition or that they should once for all scrap prohibition. Let us not have a big margin and let us not have a big descent from precept to practice. Let us practise what we preach. If we want total prohibition, if we want our people not to drink, let us continue prohibition with all restrictions. If there should be a big margin and a wide gap between what we practise and what we preach, I think it is better to scrap it once for all. This is my respectful submission on this Bill. I presume that this is a Money Bill and we cannot ask this House to reject the Bill, since this House has no voice and the Assembly has a final voice. Therefore, I request the Hon. Minister to consider this aspect of the matter and see whether there should exist a wide gap between practice and precept. 11-00 a.m.

*திரு. டி. கே. ஷண்முகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அரசு அறிமுகப்படுத்தும் இந்த மதுவிலக்குத் திருத்த மசோதாவை நான் ஆதரிக்க முடியாமல் இருப்பதற்கு என்னுடைய மனமார்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். வள்ளுவர் வகுத்த வழியில் மிக வெற்றிகரமாக நடைபோட்டுக் கொண்டு வரும் இந்த அரசு, இந்த மசோதாவைக் கொண்டு வருவதன் மூலம் ஒரு களங்கத்தைத் தேடிக்கொள்கிறது என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து. பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியில் நடைபோட்டுக் கொண்டு வரும், இந்த அரசு, மகாத்மா காந்தியடிகளுடைய அந்தப் புனிதமான கொள்கையைச் செயல்படுத்த வேண்டுமென்ற உறுதியோடு அதைப் பின்பற்றிக் கொண்டுவரும் இந்த அரசு, ஏதோ ஒரு தவறான படு குழியிலே போய் விழுகிறதோ என்ற ஐயப்பாடு இந்த மசோதாவைக் கொண்டு வருவதன் மூலம் எனக்குத் தோன்றுகிறது. பொதுவாகக் கலைத் துறையில் இருப்பவர்களுக்கு இதைப்பற்றிக் கொஞ்சம் அதிகமாகக்கூட சொல்ல உரிமை உண்டு. தமிழகத்தில் கலைத் துறையில் இருக்கிறவர்களில் 100க்கு 70 பேர் இந்த மதுவை முழுக்க முழுக்க அனுபவித்துக்கொண்டிருப்பவர்கள் என்பது எனக்குத் தெரியும். அப்படிப்பட்டவர்கள் எல்லாம் ரொம்ப தாராளமாக மதுவைப் பயன்படுத்திக் கொள்வதற்கு இந்த மசோதா வாய்ப்பு அளிக்கும் என்றே நான் உறுதியாக நம்புகிறேன். சமீபத்தில் நம்முடைய அரசின் அனுமதியைப் பெற்று பிரபலமான ஒரு கலைஞர்—முதியவர் இந்த மதுக்கடையை நடத்திக்கொண்டு வருகிறார். அவருடைய பிள்ளைகள் குடிப்பதில்லை.

அவர் முதியவராக இருக்கிற காரணத்தால் கடையின் நிர்வாகத்தைப் பிள்ளைகளிடமே விட்டிருக்கிறார். அவர் பிள்ளைகள்தான் நிர்வாகம்

செய்து வருகிறார்கள். இரண்டு நாட்களுக்கு முன்னால் நான் அவரைச் சந்தித்தபோது, அவர் என்னிடம் வருத்தப்பட்டுக் கொண்டார், ''என்னுடைய ஒழுக்கமான பிள்ளைகளைக் கொண்டு இந்த மதுக்கடை வைத்து வியாபாரம் செய்வது எனக்குப் பிடிக்கவில்லை. எங்கே இவர்கள் குடிக்கக் கற்றுக்கொள்வார்களோ என்று இரவு பகல் எனக்குத் தூக்க மில்லாமல் இருக்கிறது. தவறாக இந்தக் கடை வைக்க அனுமதி வாங்கிக் கொண்டோமோ'' என்று என்னிடத்தில் சொல்லி வருத்தப்பட்டார். இப்படி நல்லவர்களைக்கூட புதுக் குடியர்களாக்க அனுமதி கொடுக்கும் முறை ஏற்கெனவே இருந்து வருகிறது. இந்நிலையில் மதுவை நாமே தயாரிப்பதிலும் ஈடுபட லைசென்ஸ் கொடுப்போம் என்றால், இன்னும் எத்தனையோ பேர் இந்தக் குடியால் பாழ்பட்டுப் போவார்கள் என்று தான் எனக்குத் தோன்றுகிறது. எனவே மதுவிலக்கு என்னும் புனித மான கொள்கைக்கு இந்த மசோதாவின் மூலம் மாசு கற்பிக்காமல் இருக்க வேண்டும் என்பதே என்னுடைய தாழ்மையான வேண்டுகோள்.

இன்னொன்றையும் நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மது குடிப்பதனாலே நம்முடைய மா மேதைகள் பலர் ஏற்கெனவே மறைந்திருக்கிறார்கள்.—அதை அகால மரணம் என்றுதான் சொல்ல வேண்டும். கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், இசை மேதை திரு. எஸ். ஜி. கிட்டப்பா, திருவாவடுதுறை, திரு. ராஜரத்தினம் பிள்ளை, திரு. காருகுருச்சி அருணாசலம் போன்ற மிகப் பெரும் கலையுலக மேதை கள் எல்லாம் இந்தக் குடிப் பழக்கத்தில் ஈடுபட்டு, அதன் கொடுமையை உணர்ந்து, தங்கள் இறுதி காலத்தில் வருத்தப்பட்டிருக்கிறார்கள். திரு. என். எஸ். கே. அவர்கள் ''நல்ல தம்பி'' என்ற படத்தில் மிக அழகாகச் சொல்லுகிறார். ''நான் இதற்கு முன்பெல்லாம் ஒரு மனித னாகவா இருந்தேன்? இரண்டு மனிதனாக அல்லவா இருந்தேன்'' என்று குடித்தபோது, தான் இருந்த நிலையை வெகு அருமையாகச் சொல்லுகிறார். பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய அருமையான படம் அது. நல்ல தம்பி படத்தில் அப்படிப்பட்ட பிரச்சாரத்தைக் கலைவாணர் எதற்காகச் செய்தார்கள் என்றால், நாம் தான் இந்த வழியில் சென்று கெட்டுப் போய்விட்டோம், இனிமேல் வருகிற சமுதாயமாவது நன்றாக இருக்க வேண்டும் என்ற உள்ளுணர்வோடுதான் அவர்களே இந்தப் பிரச்சாரத்தைச் செய்தார்கள். கடைசியில் மருத்துவ மனையில் அவர் இருந்தபோது என்னிடம் வருத்தத்தோடு ''என்னால் இந்தப் பழக்கத்திலேயிருந்து விடுபட முடியவில்லையே என்னசெய்வேன்'' என்று. அப்படிப்பட்ட நல்லவர்களின் மறைவுக்கெல்லாம் இந்தக் குடி தான் காரணம் என்பதை நாம் அறிவோம். எனவே நம் சர்க்காரே குடிக்க அனுமதியும் கொடுத்து, புதிதாக மதுவைத் தயாரிக்கவும் அனுமதி வழங்குவது என்றால், என்ன அர்த்தம்? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ''நம் மது விலக்குக் கொள்கைக்கும் இந்த மதுக் கடைகள் வைக்க அனுமதி வழங்குவதற்கும் சம்பந்தம் இல்லை'' என்று சொன்னார் கள். அவர்கள் உள்ளத்திலேயிருந்து இதய பூர்வமாகத்தான் இதைச் சொன்னார்களா என்று நான் ஐயுறுகிறேன். அப்படி அவர்கள் சொல்லி யிருக்க மாட்டார்கள் என்பதே என்னுடைய தாழ்மையான கருத்து. எனவே மதுக்கடை வைத்துக் கொள்ள அனுமதி வழங்கும் இந்த மசோ தாவைக் கொஞ்சம்கூட தயக்கமில்லாமல் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். இது தான்

3rd December 1970] [திரு. டி. கே. ஷண்முகம்]

என்னுடைய வேண்டுகோள். இதைப்பற்றிச் சொல்லும்போது இன்னொன்றையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். வள்ளுவருடைய திருக்குறளை நம்முடைய தமிழக அரசு நாடெங்கும் பரப்பி வருகிறது என்பது நமக்கெல்லாம் தெரியும். பேருந்துகளிலெல்லாம் வள்ளுவருடைய திருக்குறள் இருக்கிறது. பயணிகள் விடுதிகளில் எல்லாம் திருக்குறள் இடம் பெற்றிருக்கிறது. மக்களுக்கு நல்லதைச் செய்ய வேண்டும் என்றுதான் இதையெல்லாம் அரசு செய்கிறது என்று நான் நம்புகிறேன். ஆனால் இந்தச் செயல் அதற்கெல்லாம் ஒரு களங்கம் ஏற்படுத்தும் என்றே நான் உறுதியாகச் சொல்லுவேன். எனவே நான் மிகப் பணிவோடு ''அரசு இந்த மசோதாவை அன்புகூர்ந்து திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும்'' என்று கேட்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : தலைவர் அவர்களே, நமது நாட்டின் பல பாகங்களில், சிறப்பாகத் தமிழ் நாட்டில் கடந்த பல ஆண்டுகளாக மது விலக்குக் கொள்கை அமுலில் இருந்து வருகிறது. 11-10 a.m. மது விலக்கு நல்லதா கெட்டதா என்பதைப்பற்றி யாரும் இப்போது ஆராய முற்பட மாட்டார்கள். அது எல்லோராலும் ஒருமனதாக, மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு உண்மையாகும். பல ஆண்டுகளாகப் பரம்பரை பரம்பரையாக மது விலக்கு இந்த நாட்டிலே அமுல் செய்யப்படாமல் இருந்து இப்போது சில காலமாக மது விலக்கு அமுல் செய்வதற்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டது. ஆனால் துரதிருஷ்டவசமாக சில ஆண்டுகளாக மது விலக்கு சரியாக அமுல் செய்யப்படவில்லை என்ற புகார் இருந்தாலும், ஏழை எளிய மக்கள், பெரும்பாலும் கிராமப் பகுதிகளில் கள் முதலியவைகளை அருந்தி வந்த பரம்பரையினரின் சிறுவர்கள், இப்போது இருக்கிற தலைமுறையினர் அந்தப் பழக்கத்தை அறவே மறந்து விட்டிருக்கிறார்கள். பொதுவாக கிராமங்களில் மதுவிலக்கு மீறப்படுகிறது என்ற புகார் இருந்தாலும், அதிலும் குறிப்பாக நகரங்களை அடுத்த கிராமங்களில்தான் அத்தகைய புகார் இருந்தாலும், சாதாரண கிராமப் பகுதிகளில் எல்லாம் மது விலக்கு சிறந்த வகையில் அமுல் நடத்தப்பட்டு வருகிறது. பரம்பரை பரம்பரையாக மது அருந்தி வந்த சமுதாயத்தினர்கூட இப்போது மதுவிலக்கு காரணமாக பொருளாதார ரீதியில் முன்னேறி நல் வாழ்வு நடத்தி வருகிறார்கள். அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த சிறுவர்கள் மது எப்படி இருக்கும் என்றுகூட இப்போது அறிய மாட்டார்கள். என்னுடைய சின்ன கிராமத்தில் 40 அருந்ததியர் குடும்பங்கள் இருக்கின்றன. அப்போதெல்லாம் ஊருக்கு அப்பால் 1 மைல் தள்ளி கள்ளுக் கடை இருக்கும். அவர்கள் குடித்துவிட்டு சண்டை போட்டுக் கொள்வதை அப்போது சர்வ சாதாரணமாகப் பார்க்கலாம். அவர்கள் சம்பாதனையில் பெரும் பகுதிப் பொருளை மதுவுக்காகவே செலவிட்டு கஷ்டப்பட்டதை நான் சிறுபிராயத்திலிருந்தே பார்த்துவந்திருக்கிறேன். இப்போது கடந்த சில ஆண்டுகளாக இம்மாதிரி பரம்பரையாக மது அருந்தி வந்த பரம்பரையினர்கூட நல்வாழ்வு வாழ்கிறார்கள். அவர்களிடையே சண்டைச்சச்சரவுகள் இல்லை. பொருளாதாரத் துறையிலும் நன்கு முன்னேறி இருக்கிறார்கள். நாட்டில் பெரும் பகுதியினரின் நிலை அவ்வாறு இருக்கிறது. ஏழை எளிய மக்கள் இந்தச் சட்டத்தின் காரண

மாக நல் வாழ்வு வாழ்ந்து வருகிறுர்கள். சண்டை சச்சரவு இல்லாமல் வாழ்ந்து வருகிறுர்கள். இந்த மதுவிலக்குச் சட்டத்தை இன்னும் சிறந்த வகையில் அமுல் நடத்த வேண்டும் என்று தான் இந்த அரசு முயலுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொன்ஞர் கள். சில குறைகள் நகரங்களில் இருக்கின்றன. நகரங்களில் பல்வேறு வகைகளில் சட்டங்கள் மீறப்படுகின்றன. நகரங்களில் கிளப்புகள் என்று வைத்துக்கொண்டு இந்தச் சட்டம் மீறப்படுகிறது. ஸ்ரீவில்லிப் புத்தூர் நகரம் 57,000 ஜனத் தொகை கொண்ட நகரம். நான் கேள்விப்பட்ட வகையில் அங்கே 72 கிளப்புகள் இருக்கின்றன. ஒவ் வொருவரும் ஒவ்வொரு வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொள்வது, மாலை நேரத்தில் சூதாடுவது, குடிப்பது. இதுதான் அங்கே நடக்கிறது. இதையெல்லாம் நடத்த அரசு அனுமதிக்க வேண்டுமா? நான் இதைப் பற்றிப் பலமுறை அரசாங்கத்தின் கவனத்திற்கு இந்த மன்றத்திலேயே கொண்டுவந்திருக்கிறேன். இதற்கும் மதுவிலக்குக் கொள்கைக்கும் சம்பந்தம் இல்லை; மதுவிலக்கை இங்கே தீவிரமாக அமுல் நடத்துவோம், வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் இந்த நாட்டின் பொருளா தாரத்திற்கு அனுகூலமாக இருக்கும் என்றுதான் அரசு கருதி இதைச் செய்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ஞர்கள். வாதத்திற்கு அவர் சொன்னது ஒத்ததாக இருக்கலாமே தவிர, நாம் ஒப்புக்கொண்டிருக்கிற கொள்கைக்கு அது ஒத்ததாக இருக்க முடியாது. மனித இயல்புக்கும் மனிதனுடைய நல்வாழ்வுக்கும் இந்தக் கொள்கை இயைந்ததன்று என்று கருதுகிறேன். ஒருவர் இன்னொருவர் அருந்த வழிவகை செய்து கொடுப்பது நல்லதல்ல. அது மட்டுமல்ல. இந்த நாட்டில் ஏற்கெனவே மதுவிலக்குக் கொள்கையை அமுல்படுத்துவதில் உள்ள சிரமங்களோடு இதுவும் சேர்ந்து அதிக சிரமத்தைக் கொடுக்கும். ஒவ்வொரு ஜில்லாவிலும் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கு என்று மது தயாரிக்கும் நிலையங்களுக்கு அனுமதி கொடுத்துவிட்டால், அது பற்றி ஜில்லா கலெக்டரிடம் ஆயிரக்கணக்கான மனுக்கள் வரும். ஒவ்வொரு ஊரிலும் இது ஒரு பெரிய தொழிலாக ஆரம்பமாகிவிடும். அதை எந்த வகையிலும் கட்டுப்படுத்த முடியாது. போலீசாருக்குப் பெரும் தொல்லையாக இருக்கும். போலீஸ் கட்டுப்படுத்த முடியாது. சமுதாயத்தில் செல்வாக்கு உள்ளவர்கள் இதை மீறும்படியான சந்தர்ப் பங்கள் அதிகரிக்கும். இப்படிப்பட்ட செயல்களை நாம் செய்யக் கூடாது என்று உபதேசிப்பது பிரயோசனப்படாது. மது விலக்கு என்ற கொள்கை நம் நாடு முழுவதும் பரந்து விரிந்து படர்ந்து, நாட்டிலே மது அருந்துகிறவர்கள் இல்லை என்ற நிலையை உருவாக்க வேண்டும். அதற்கான முறையில் சிறந்த கொள்கையை நாம் கடைப் பிடிக்க வேண்டும். வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்காக என்று மசோதா தயாரித்து மாவட்டக் கலெக்டர்களுக்கு மது தயாரிப்பதற் கான மனு வந்தால் அதற்கு அனுமதி வழங்கும் அதிகாரத்தைக் கொடுப்பது என்பது அரசாங்கத்திற்குப் பின்ஞலே பெரிய தலைவலியாக இருக்கும். மதுவிலக்குக் கொள்கையை ஏற்றுக்கொண்ட அரசுக்கு இது மாசு கற்பிப்பதாக இருக்கும். இது எந்த வகையிலும் பொருந்தாது. எனவே சக அன்பர்கள் கூறியதைப்போன்று, வள்ளுவத்தை வேதமாக, கொள்கையாகக் கொண்டு செயல்படும் நம் நாட்டில் இதை அனுமதிக்கக் கூடாது. மதுவிலக்குக் கொள்கை அமுலில் இருக்கும் நம் மாநிலத்தில்

3rd December 1970] [திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு]

இதைத் தயாரிக்க லைசென்ஸ் வழங்குவது என்று சொன்னால், யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். யார் மனதிலும் திருப்தி ஏற்படாது. ஆகையால் இதைப் பெரிது என்று கருதாமல், எந்த விதமான தயக்கமும் அரசு காட்டாமல், அவர்கள் கொண்டு வந்த இந்த மசோதாவைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு நான் முடித்துக்கொள்ளு கிறேன்.

திரு. எஸ். டி. ஆதித்தன் : தலைவர் அவர்களே, நான் இந்த மசோதாவை ஆதரிக்கிறேன். அதே நேரத்தில், கள்ளுக்குடி, சாராயக்குடி என்று இருக்கிறதே, அதை முழுக்க முழுக்க எதிர்க்கிறேன். நான் ஒன்றை மாத்திரம் திட்டவட்டமாகச் சொல்ல முடியும். இந்த இந்தியாவிலே, அது கூட சரியில்லை—இந்த அகில உலகத்திலேயே கூட, மது விலக்கு என்பதற்கு எடுத்துக்காட்டாக ஒரு நாடு திகழ்கிறது என்று சொல்லப்போனால், அது தமிழ் நாடுதான். உலகத்தின் மற்றப் பகுதிகளில் எல்லாம் மது இருக்கிறது. வட நாட்டிலே மது இருக்கிறது. முஸ்லிம் நாட்டு வழக்கத்தில் மது இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில், நமது தமிழ் நாட்டில் மட்டும்தான் மது விலக்கு இருந்திருக்கிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மதுவிலக்குப் பிரசாரம் நடைபெற்று வந்திருக்கிறது. திருக்குறள் காலத்திலிருந்தே, அதற்கு முன்னேயே மதுவிலக்கு இருந்தது என்பதைப் பார்க்கிறோம். நமது நாட்டிலே 51 சதவிகிதம் மக்கள் பெண்கள். அந்தப் பெண்கள், நூற்றுக்கு நூறு பேர்களும் மதுவிலக்கிற்கு எதிராக இருந்திருப்பது தமிழ் நாட்டில் மட்டுமேதான். இதைப்பற்றி இப்போது நான் சொல்ல வேண்டிய அவசியம் என்னவென்றால் குடிப்பவனுக்கும், குடிகாரனுக்கும் வித்தியாசம் இருக்கிறது. வெளி நாடுகளில், குடிப்பவன் எல்லாம் குடிகாரன் அல்ல. ஆனால், இந்த நாட்டில் அது கிடையாது. குடிப் பழக்கத்தை மேற்கொள்ளுகிறவர்கள் எல்லாம் குடிகாரர்களாகி விடுகிறார்கள். 10-ஆயிரம் வருடமாக இந்த நாட்டில் குடிக்கிறார்கள். இல்லையென்று சொல்ல முடியாது. வெளி நாடுகளிலும் குடிக்கிறார்கள். இதில் வித்தியாசம் என்னவென்றால், அவர்கள் எல்லாம் அளவோடு குடிக்கிறார்கள். லண்டனில், பிக்கடலி சர்க்கசில் உட்கார்ந்தால் பெண்கள்கூட குடிப்பதைப் பார்க்கலாம். எல்லோரும் குடிக்கிறார்கள். நமது நாட்டில், குடிப்பது வழக்கமாக இருந்த காலத்தில் பார்த்திருக்கலாம், வாலிபப் பிள்ளைகள் குடித்துவிட்டு வந்து, வாந்தி எடுப்பதைப் பார்த்திருக்கலாம். இந்த பிக்கடலி சர்க்கசில் உட்கார்ந்து ஆண்களும், பெண்களும் குடித்து விட்டு கூத்தாடுகின்ற வழக்கம் அங்கே இல்லை. குடிக்கிறவன் குடிக்கிறான். லட்சத்தில் ஒருவன் அதிகம் குடிக்கிறான். மற்றவர்கள் எல்லாம் அளவோடு குடிக்கிறார்கள். இன்னன்ன கிளாசில் இன்னன்னாரால் கொடுக்கப்பட வேண்டும் என்பதைப் பார்க்கிறோம். அப்படிப்பட்ட பழக்க வழக்கங்கள் அங்கே உண்டு. இது ஒருபுறமிருக்க, இப்போது பிரச்னை என்னவென்றால், நமது தமிழ் நாட்டிலே சாராயம் உற்பத்தி பண்ணி அனுப்புவது என்பது. இதில் தப்பு என்னவென்று எனக்குத் தெரியவில்லை. நமது தமிழ் நாட்டிலேயே நாம் சிலருக்கு அனுமதி கொடுத்திருக்கிறோம், சாராயம் குடிப்பதற்கு. அவர்களுக்கு விற்பதற்காக, வெளி மாநிலங்களிலிருந்து வாங்கி இங்கே அவர்களுக்கு விற்கிறார்கள். எனவே, வெளி மாநிலங்களிலிருந்து வாங்கி இங்கே

கொடுப்பதற்குப் பதிலாக, இங்கேயே உற்பத்தி செய்தால் என்ன என்பதுதான் பிரச்னை. ஒரு சின்ன உதாரணம். தென்னாட்டில் ஒரு சிலர், மாட்டு மாமிசம் சாப்பிடுகிறார்கள். ஆனால், இந்தியாவில், வட நாட்டில் எப்படி என்றால், மாட்டு மாமிசம் சாப்பிடக்கூடாது. ஆகவே, மாட்டைக் கொல்லக் கூடாது, மாட்டு மாமிசம் விற்கக் கூடாது என்று மதத்தின் அடிப்படையில் வட நாட்டில் பிரசாரம் நடந்து வருகிறது. அதற்காக, நாட்டின் இன்னொரு பக்கத்தில் இருப்பவர் களும் மாட்டை அடிக்கக் கூடாது என்றால், முடியுமா? அதே மாதிரி, சீக்கியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கள் குடிப்பார்கள், சாராயம் குடிப்பார்கள். ஆனால் சிகரெட் குடிக்க மாட்டார்கள். ஆகவே, சீக்கியர்கள் சிகரெட் கம்பெனியில் வேலை செய்யக் கூடாது என்று சொல்வது நியாயமா? அதைப் போலவே, இன்னொரு உதார ணம். கலை விஷயத்தில், உதாரணம். நமது இந்திய நாட்டுப் படங் களில் முத்தமிடும் காட்சி கூடாது. ஆனால், வெளிநாட்டிற்கு ஏற்று மதியாகும் படத்தைப் பொறுத்த வரையில், முத்தம் அனுமதிக்கப்படு கிறது என்பதை கலைஞர் அவர்கள் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

11-20 a.m. திரு. டி. கே. ஷண்முகம்: நாம் தீமை என்று கருதுகின்ற ஒன்றை மற்றவர்களுக்குக் கொடுக்கலாமா என்பதுதான் கேள்வி. முத்தமிடு வதும், கள் குடிப்பதும் ஒன்றா?

திரு. ஜி. சுவாமிநாதன்: இரண்டும் போதையைக் கொடுக்கக் கூடியது. *(சிரிப்பு)*.

திரு. எஸ். டி. ஆதித்தன்: நான் வயதானவன். நீங்கள் இளைஞர் கள். பரிமாறிக் கொள்ளுங்கள். ஆட்சேபணை இல்லை. எனவே, கள் குடிப்பதை, ஒழுக்கப் பிரச்னை ஆக்குவதும், பாவம் என்பதும் தவறு என்பது என் கருத்து. அந்த அடிப்படையில் . .

திரு. டி. கே. ஷண்முகம்: திருவள்ளுவர் ''துஞ்சினார் செத்தாரின் வறல்லர், எஞ்ஞான்றும், நஞ்சுண்பார் கள்ளுண்பவர்'' என்று கூறி யிருக்கிறாரே?

திரு. எஸ். டி. ஆதித்தன்: அதைத் தான் நானே இப்போது சொல்ல விருந்தேன். அதை உறுப்பினர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். இந்தப் பிரச்னையை நான் முக்கியமாக, பெண்கள் பிரச்னையாக நினைக்கிறேன். கள் குடிக்கிறவன், தான் சம்பாதித்த பணத்தை வீட்டிற்குக் கொண்டு போய்ச் சேர்க்க மாட்டான். எனவே தான் சொன்னேன், இந்தப் பிரச்னை பெண்களுடைய பிரச்னை என்று. நமது நாட்டில் எந்தப் பெண்ணும், தன்னுடைய கையால், தன்னுடைய புருஷனுக்குச் சாராயம் ஊற்றிக் கொடுக்க சம்மதிக்க மாட்டாள். ஆனால், மற்ற நாடுகளில் இப்படியல்ல. அங்கெல்லாம், பெண்கள், ஆண்களுக்குச் சாராயம் ஊற்றிக் கொடுப்பார்கள். மனைவி, கணவனுக்குக் கள் ஊற்றிக் கொடுப்பாள். தாய் மகனுக்குக் கள் ஊற்றிக் கொடுப்பாள். எனவே, இந்தப் பிரச்னையைப் பார்க்கும்போது, இது பெண்கள் பிரச்னை. கள்ளுக் கடையால், குடும்பம் சோர்ந்து போகிறது. இந்தப்

3rd December 1970] [திரு. எஸ். டி. ஆதித்தன்]

நாட்டில் பெண்கள் நூற்றுக்கு நூறு பேர்களும் என்றைக்கு கள்ளுக் கடை வேண்டும் என்று வோட்டுப் போடுகிறார்களோ, அன்றைக்குத் தான் கள்ளுக்கடை வர வேண்டியிருக்கும் ; வர வேண்டியதுதான்.

திரு. கே. ராஜாராம் : கள் உண்ணல், பஞ்சமா பாதகங்களில் ஒன்றாகக் கூறப்படுகிறதே ?

திரு. எஸ். டி. ஆதித்தன் : அது தமிழ் நாட்டில் வேறு விதமாகக் கூறப்படுகிறது. கள்ளுண்டல் அந்த 5 பாவங்களில் வருகிறதா என்பது பிரச்னைக்குரிய விஷயம். திட்டவட்டமாகச் சொல்ல முடியாது. அதில், கள்ளைச் சேர்த்துச் சொல்வது உண்டு, கள்ளைச் சேர்க்காமல் சொல்வதும் உண்டு. இப்போது அயல் நாட்டிற்கு ஏற்றுமதி செய்வ தால், இந்த நாட்டில் யாரையாவது கெடுக்கிறோமா என்பதுதான் விஷயம். நாம் சாராயம் உற்பத்தி செய்வதில் யாருக்கும் கெடுதல் செய்வதில்லை. பெண்கள் பாதிக்கப்படுவதில்லை. இன்னொரு உதாரணம் கூட சொல்ல வேண்டும் என்றிருந்தேன். தவளைக் காலை நாம் சாப்பிடு கிறோமா ? இல்லையே ! வெளி நாட்டிற்கு அனுப்புகிறோமே. என்ன தப்பு ? ஆகவே, மாட்டு மாமிசம் சாப்பிடுவதைப் போல, 'கிஸ்ஸிங்' காட்சியை வெளி நாட்டிற்கு அனுப்புவதைப் போல, தவளைக்காலை வெளி நாட்டிற்கு அனுப்புவதைப் போல, சாராயம் தயாரித்து வெளி நாட்டிற்கு அனுப்பினால், அதில் தப்பேதுமில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் நான் இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் முன்பு சொன்ன குடும்பம், பெண்கள் என்ற பிரச்னையைப் பார்க்கும் போது, மதுவிலக்குத் திட்டம் நமது மாவட்டத்தில் தோல்வி அடைந்த தாகச் சொல்லுவது தப்பு. நான் அறிந்த வரையில் இந்தச் சட்டம் இவ்வளவு வெற்றிகரமாக இதுவரையில் எந்த மாநிலத்திலும், எந்த நாட்டிலும் அமுலாக்கப்பட்டதில்லை. ஆங்காங்கே ஏதாவது தவறுகள் இருக்கலாம். ஆனால், களவு குற்றம் என்று சொல்லுகிறோம். ஆனால் களவு இல்லாமல் இல்லை. ஆகவே, நான் சொல்லுவதெல்லாம் இந்தச் சட்டம் இது வரையில் இதைப் போல வெற்றிகரமாக நிறை வேற்றப்படவில்லை. இந்தச் சட்டத்தினுடைய முக்கிய நோக்கம் பெண்கள், குடும்பம், இதை மறந்துவிடக் கூடாது, அவர்கள் அடிபட்டுவிடக் கூடாது, புருஷன் சம்பாதிக்கிற சம்பளம் மனைவிக்கு வந்து சேர வேண்டும். மிகவும் பணக்காரர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் விஸ்கி, பிராந்தி, ஷேம்பைன் குடித்தாலோ, சொத்து போனாலோ அக்கறை இல்லை. யாருக்காக இந்தச் சட்டம் கொண்டு வருகிறோமோ, அவர்கள் வாழ வேண்டும். யாருக்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டதோ அவர்கள் வாழ்வு இன்றைக்கு வளம் ஆகியிருக்கிறது. 30 ஆண்டுகளுக்கு முன்னால் தோட்டிகள் சாயங்காலம் கூலி வாங்கிக் கொண்டு வந்தால், வீட்டிற்குப் போகாமல் கள்ளுக் கடைக்குப் போய் விடுவார்கள். வீட்டிலே இருப்பவளுக்குப் பணம் போய்ச் சேராது. ஆனால் இன்றைக்கு வீட்டிற்கு ஒழுங்காகப் பணம் போகிறது. இப்படிப்பட்ட கூலிக்காரர்கள் சம்பளத்தைக் கொண்டு போய் குடித்துவிட்டு அழிந்து போவதிலிருந்து அவர் களைக் காப்பாற்றியிருக்கிறது இந்தச் சட்டம். ஏழை எளியவர்கள்

வாழ வேண்டும் என்ற முறையிலே இந்தச் சட்டம் அமுல் செய்யப்பட்டு வருகிறது. அவர்களின் குடும்பங்களில் இன்றைக்கு சுபிட்சம் இருக்கிறது. இந்தச் சட்டம் தோற்று விட்டது என்று வேண்டுமானல், சில பேர் சொல்லலாம். ஆனல் அதைத் தோல்வி என்று சொல்ல முடியாது. இதைவிட வெற்றிகரமாக நடைபெறுகிற சட்டம் வேறு இல்லை. இந்தச் சட்டம் எதற்காகக் கொண்டு வரப்பட்டதோ அந்த நோக்கம் நன்கு நிறைவேறி வருகிறது. அதிலே சந்தேகம் கிடையாது.

சாராய உற்பத்தி என்கின்ற ஒன்றைப்பற்றிச் சொல்கிறபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் இப்படி மதுவகைகளை உற்பத்தி செய்யும்போது அது வெளியே போய் விடும் என்றும் அப்படிச் செல்லாமல் பாதுகாப்பு இருக்க வேண்டும் என்றும் கூறிவிட்டு, இங்கே மதுவகைகளை உற்பத்தி செய்து வெளி இடங்களுக்கு அனுப்பி அதன் மூலம் அவர்களைக் கெடுக்கலாமா என்றார்கள். மைசூரிலே இன்றைக்கு மதுவகைகள் தயாரிக்கப்படுகின்றன. அது வெளியே தவறுகப் போய்விடாமல் தகுந்த பாதுகாப்பு இருக்கிறது. ஒரு துளியும் வெளியே தவறுக வருவது இல்லை. அதனல் இங்கே தைரியமாக மதுவகைகளைத் தயாரிக்கிற தொழிற்சாலை ஆரம்பிக்கலாம். நாம் வெளி இடங்களுக்கு, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிக்காக மதுவகைகளைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கிறோம். இதனலே நாட்டுக்கு நன்மை. நம்முடைய நாட்டிலிருந்து டனை மரத்திலிருந்து தயாரிக்கப்படும் மதுவகையை வாங்கிக் கொள்ள ஜப்பான் தயாராக இருக்கிறது. நாம் மது வகைகளைத் தயாரிக்கும்போது, வெளிநாட்டுக்கும், வெளி இடங்களுக்கும் ஏற்றுமதி செய்வதற்காகத் தயாரிக்கும் போது, இங்கே உள்நாட்டில் தவறுகப் பயன்படுகிற முறையிலே வெளியிலே ஒரு துளியும் போகாமல் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ள வேண்டியது நமது கடமை. நோட்டு அச்சடிக்கிற நாசிக்கிலே எப்படி அது பாதுகாக்கப்படுகிறதோ அதேபோல நாமும் பாதுகாப்பு ஏற்பாடு செய்ய வேண்டும்.

DEPUTY CHAIRMAN : Let the hon. Member restrict his speech to the scope of the Bill.

THIRU S. T. ADITYAN : I will conclude within 15 minutes, Sir.

THIRU K. RAJARAM : The Deputy Chairman refers to the scope of the Bill.

திரு. எஸ். டி. ஆதித்தன் : எனவே இந்தத் தொழிலை இங்கே நடத்துவதற்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஒரு சில வார்த்தைகளைச் சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

11-30 p.m. திரு. எம். அய்யாசாமி : தலைவரவர்களே, நம்முடைய நாட்டிலே மது வகைகள் உற்பத்தி செய்யப்பட்டு வெளியிடங்களுக்கு அனுப்புவதற்கு அனுமதி வழங்குவதற்காக இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. இதில் தவறு இல்லை என்றாலும்

அதிலே ஏற்படக்கூடிய கஷ்டங்களை அனுபவத்தின் மூலம் நாம் கொஞ்சம் பார்க்க வேண்டியது அவசியமென்று சொல்லுகிறேன். நம் நாட்டிலே எத்தனையோ சட்டங்கள் இருக்கின்றன. அந்தச் சட்டங்கள் எல்லாம் உண்மையிலேயே ஒழுங்காக நடைபெற்றுக்கொண்டு வருகின்றனவா என்று பார்த்தால், இல்லை. இந்தச் சட்டங்களையெல்லாம் மீறுவதற்கு மக்கள் பல வழிகளைக் கையாளுகிறார்கள். உதாரணமாக எங்கே பார்த்தாலும், 'பார்மஸி' என்ற பெயரால் குடிப்பதற்காகக் கடைகளை வைத்திருக்கிறார்கள். மருந்து வகைகளை விற்பனை செய்வதற்காக அனுமதி கொடுத்திருக்கிறது. ஆனால் இந்த பார்மஸிகளெல்லாம் இன்றைக்கு மதுக்கடைகளாக இருக்கின்றன. வைத்தியக் காரணங்களுக்காக இந்த பார்மஸிகளுக்கு அனுமதி கொடுக்கப்பட்டது. இதைப் பற்றி இந்த மன்றத்திலே பல தடவைகள் சொல்லப்பட்டு விட்டது. இதைச் சட்டப்படி தடுக்க இடமில்லை. சட்டத்தை மீறி மதுக் கடைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இது ஒவ்வொரு தெருவிலும், ஊரிலும் இருந்துகொண்டிருக்கிறது. அதேபோல தமிழ் நாட்டிலிருந்து உணவுப் பொருள் வெளியே செல்லக் கூடாது என்று சட்டம் போட்டு வைத்திருந்தோம். ஆனால் உணவுப் பொருள் கடத்தல் பெருமளவில் நடைபெற்று உணவுப் பொருள்களுடன் பல லாரிகள் பிடிபட்டன. நாம் உஷாராகக் கண்காணித்து வந்த போதிலும் உணவுப் பொருள்கள் லாரி, லாரியாக வெளியிலே கொண்டு செல்லப்பட்டன. இதை நாம் பார்த்திருக்கிறோம். அது சம்பந்தமாக குற்றங்கள் எத்தனையோ கோர்ட்டுகளுக்குப் போய், பிடிபட்டவர்கள் தண்டிக்கப்பட்டார்கள். பிடிக்கப்பட்டவர்கள் சில பேர். பிடிபடாதவர்கள், இதனால் லாபம் சம்பாதித்தவர்கள் சில பேர். ஆகவே நாம் இப்படி ஒரு தொழிற்சாலைக்கு அனுமதி கொடுத்துவிட்டு, குறிப்பிட்ட ஒருவருக்கு லைசென்சு கொடுத்து ஏற்றுமதிக்காகத் தயார் செய்கிறோம் என்று சொல்லிவிட்ட காரணத்தினாலேயே, அது வெளியிலே வராமல் நின்று விடும் என்று நினைத்தால் தவறு. இந்தச் சட்டத்தின் உள்ளே நுழைந்து அதிலே உள்ள தப்புக்களைக் கண்டுபிடித்து அதைக் கொண்டு லாபம் அடைவது என்று உற்பத்தியாளர்கள் புதிய புதிய வழிகளைக் கண்டுபிடிப்பார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. இதை நாம் அனுபவத்திலே பார்த்துக் கொண்டு வருகிறோம். எவ்வளவுதான் காவல் போட்டிருந்தாலும், அதைச் சமாளித்துக்கொண்டு காரியங்களை அவர்கள் செய்வார்கள். ஒருவருக்கு லைசென்ஸ் கொடுத்துவிட்டு ஏற்றுமதிக்குத்தான் மது தயார் செய்வதற்கு லைசென்சு கொடுத்திருக்கிறோம், ஆகையால் உள் நாட்டிலே மது நடமாடக் கூடாது என்று சொல்லி தடுத்துவிட முடியாது. உற்பத்தி செய்கிறவர்கள் நிச்சயமாக அதிக லாபம் கிடைக்கிறது என்றால், அதற்காக எதையும் செய்வார்கள். இந்த நாட்டிலே மது விலக்குக் கொள்கையை மிகப் பெரிய தோல்வியாகச் செய்தவர்களை யாரும் மறந்துவிடக் கூடாது. ஆனால் இதைப்போல வெற்றிகரமாக நடத்தப்பட்ட சட்டம் வேறு இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கூறினார்கள். சட்டத்தின் பேரால் வெற்றிகரமாக நடத்தப்படுகிறது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. ஆனால் நடைமுறையில் என்ன நடக்கிறது ? ரிகார்டிலே வேண்டுமானால், வெற்றிகரமாக நடைபெறுகிறது என்று எழுதி வைத்துக்கொள்ளலாம். எங்கே கள் கிடைக்கவில்லை ? உண்மையில் நாடெங்கும் கள் கிடைக்கிறது. கிராமப்புறத்திற்குச் சென்றால், கள் கிடைக்கிறது. ஆகவே இந்த நிலைமையில்

மேலும் அதிகார பூர்வமாக மது தயார் செய்வதற்கு அனுமதி கொடுக்கிறோம் என்றால், யாருக்குக் கொடுப்பது, யாருக்குக் கொடுக்காமல் இருப்பது என்ற இக்கட்டான நிலைமைதான் ஏற்படும். யாருக்குக் கொடுத்து யாருக்கு இல்லை என்று சொல்வது? இதையெல்லாம் யோசித்துப் பார்த்தால் இந்தத் திருத்தத்தால் நாட்டிற்குப் பெரிய தீமை ஏற்படும் என்பதை இந்த அரசு ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்து இந்தத் திருத்த மசோதாவைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. எஸ். ராகவானந்தம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் கொண்டு வந்திருக்கிற இந்தத் திருத்த மசோதாவை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகின்றேன். ஏற்கெனவே மெடிசனல், சயின்டிபிக் அண்டு இன்டஸ்ட்டிரியல் நிறுவனங்களின் உபயோகத்துக்கு அனுமதி உள்ளதை ஹ்யூமன் கன்சம்ஷன் (Human Consumption) மனிதர்கள் குடிப்பதற்கும் தயார் செய்வதற்கு அனுமதிக்கக்கூடிய அளவிலே இந்தத் திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். லைசென்ஸ் கொடுக்கலாம் என்று கலெக்டருக்கு அதிகாரம் கொடுத்திருப்பதையும் அறிவோம். வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கும் அது உபயோகப்பட்டால், வருவாய் அதிகமாக வருமே என்ற நல்லெண்ணத்தோடுதான் இந்தத்திருத்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதை எதிர்த்துப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பாய் அவர்கள் இதைப் பற்றி ''திசீஸ்'' எழுதிக்கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். எங்கெங்கே குடிக்கின்றார்கள், எந்த எந்த சந்திலே கடை இருக்கிறது என்று சொன்னார்கள். துரதிருஷ்டவசமாக என் கண்ணிலே படவில்லை. அப்படிக் கடைகள் இருக்கலாம். கடைகளுக்கு லைசன்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அர்த்தம். நான் இதை ஆதரிப்பதன் மூலம், மது குடிக்கவும், லிக்கர் தயார் செய்யவும் லைசென்ஸ் கொடுக்கலாம் என்று நான் சொல்வதாலே எனக்கு ஏதோ லாபம் இருக்கிறது என்று யாரும் எண்ண வேண்டாம். நான் ஒரு டீடோடலர் (Teetotaller). ஸ்மோக்கூட செய்யமாட்டேன் என்பது எல்லோருக்கும் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் திரு கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் பேசினார்கள். எனக்கே சந்தேகம் வந்துவிட்டது. காங்கிரஸ் கட்சியிலேதான் அவர்கள் இருக்கிறார்களா அல்லது முன்னேற்றக் கழகத்திலே சேர்ந்துவிட்டார்களா என்று. இந்த மதுவிலக்குக் கொள்கையை இப்போது தீவிரமாகச் செயல்படுத்தி வருவது இப்போதிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத் தமிழ்நாட்டு அரசுதான் என்பது எல்லோருக்கும் தெரியும். அண்டை மாநிலமான மைசூரிலே குடித்துக்கொண்டிருக்கிறார்கள். அங்கே பெரியவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் ஆளுகிறார்கள். எல்லோரும் குடிக்கிறார்கள். அதைப்பற்றி இவர்கள் என்ன கருத்து சொல்கிறார்கள் என்று பலமுறை இதே மன்றத்தில் கேட்டிருக்கிறேன். அடுத்த மாநிலமான மைசூரிலே அவர்கள் கட்சி ஆளுவதால் குடிக்கலாம், தமிழ் நாட்டில் எங்கள் கட்சி இருக்கிற காரணத்தால் கூடாது என்று சொல்கிறார்களா? நண்பர் திரு. அய்யாசாமி அவர்கள் கிராமங்களிலெல்லாம் குடிக்கிறார்கள் என்றார்கள். நாயுடு அவர்கள் கிராமங்களிலே இல்லை என்று சொன்னார்கள். இவர்களுக்குள்ளேயே கான்ட்ரடிக்ஷன்ஸ் பார்க்கி

3rd December 1970] [திரு. எஸ். ராகவானந்தம்]

றேம். வள்ளுவரைப்பற்றி அய்யா பெரியவர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் சொன்னார்கள், குடிக்கக் கூடாது என்று அவர் சொல்லியிருப்தாக. எனக்குக் குறள் அவ்வளவு தெரியாது. ஆனால் அர்த்தம் தெரியும். ''கொல்லான் புலாலை மறுத்தானை எல்லா உயிரும் கைகூப்பித் தொழும்'' என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார். மாமிசம் சாப்பிடாமல் இருப்பவனை எல்லோரும் கும்பிடுவார்கள் என்று அர்த்தமாம். மாண்புமிகு திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன்: அவர்கள் சாப்பிடுவதில்லையா? நானும் மதிப்புக்குரிய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் கேரளாவுக்குப் போயிருந்தபோது சிக்கன் ரோஸ்ட் ஒரு பிளேட் 5 ரூபாய்க்குச் சாப்பிட்டோம். எங்கள் பணத்தில்தான் சாப்பிட்டோம். இது எதைக் காட்டுகிறது என்றால் வள்ளுவர் சொன்ன எல்லாவற்றையும் ''ஃபாலோ'' பின்பற்ற முடியாது என்பதை. இன்று புலால் யார் சாப்பிடவில்லை? சைவ முதலியார்கள் சாப்பிடுகிறார்கள். விட்டுவிட்டவர்கள் தெரிந்தும் தெரியாமலும் சாப்பிடுகிறார்கள். ஆகையினாலே வள்ளுவர் சொல்லியிருக்கிறார் என்று சொல்லி எல்லாவற்றையும் பின்பற்றுவது முடியாது. தவிரவும் நாம் சாப்பிடாத ஒன்றைப் பிறருக்குக் கொடுக்கக் கூடாது என்பது சரியல்ல. எனக்குக் கோழி ரோஸ்ட் ஃபுல்லாக, முழுமையாக சாப்பிட வேண்டும். எனது மனைவி அதைச் சுவையாகச் சமைப்பார்கள். நான் உண்ணாவிரதம் இருந்தபோது அண்ணா அவர்களே சொல்லியிருக்கிறார்கள். இவர் முழுக் கோழியைச் சாப்பிடக் கூடியவர் உண்ணாவிரதம் இருக்கிறாரே என்று. ஆனால் என் மனைவி சாப்பிடுவதில்லை. நான் 55 வயதிலே இப்படி இருப்பதற்குக் காரணம் நன்றாகச் சமைத்துப்போட்டு என் உடம்பை இப்படி அந்த அம்மாள் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள். எனக்குப் பிடிக்காத ஒன்றை நீங்கள் சாப்பிடக்கூடாது என்றால், அது கணவனுக்குச் செய்யவேண்டிய கடமையிலேயிருந்து தவறியது ஆகும். அதேமாதிரி அமெரிக்கன் கான்சுலேட்டிலே அழைப்பு அனுப்புகிறார்கள். பர்மிட் இருக்கிறவர்களுக்குக்கொடுக்கிறார்கள். அவர்கள் குடிக்கிறார்கள். போகிற தோழர்களும் பர்மிட் இருக்கிறவர்கள் குடிக்கிறார்கள். இதிலே நானும் குருமூர்த்தியும்தான் டொமோடோ ஜூஸ் சாப்பிட்டு வருகிறோம். இங்கே மது இல்லை என்றால், டூரிசம் இல்லை. கோவளத்துக்குப் போயிருந்தேன். வெஸ்ட் ஜெர்மனியிலேயிருந்து வந்திருக்கிறார்கள். அவர்கள் குடிக்கவில்லை என்றால், டூரிசமே இல்லை. அங்கு வரமாட்டார்கள், யாரும் வர மாட்டார்கள். மெடிகல் கிரவுண்ட்ஸ்ஸிலே குடிக்கிறார்கள். நடிகர்கள் ரொம்பப் பேருக்குக் குடித்தால்தான் நல்ல நடிப்பு the best out of him வருகிறது.

திரு. டி. கே. ஷண்முகம் : நல்ல நடிகர்களில், குடிக்காதவர்களும் ஏராளமாக இருக்கிறார்கள்.

திரு. எஸ். ராகவானந்தம் : உறுப்பினர் அவர்கள் சாப்பிட மாட்டார்கள் என்பது தெரியும். அதனாலேதான் எங்களோடு இருக்கிறார்கள் என்பதும் தெரியும். எனவேதான் இந்தத் திருத்த மசோதாவை நாங்கள் ஆதரிக்கும்போது, ஏற்கெனவே இருக்கக்கூடிய சட்டத்தில் ஹ்யூமன் கன்சம்ஷனுக்கு வழி வகை செய்து அதன் மூலம் அரசாங்கமோ மற்றவர்களோ வருவாய் பெற, திட்டங்களைத் தர இதைக் கொண்டு

வருகிறோம். மதிப்புக்குரிய திரு. டி. கே. ஷண்முகம் அவர்கள் சொன்னார்கள், 'நல்லதம்பி' கதையைப்பற்றி. அந்தக் கதையை எழுதியதே அறிஞர் அண்ணா அவர்கள்தான். இந்தத் தமிழகத்திலே எங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்த அறிஞர் அண்ணா அவர்கள் இந்த மதுவிலக்கிலே எவ்வளவு ஆழமான அழுத்தமான கொள்கையை வைத்திருந்தார்கள் என்பதும், அவர்களைப் பின்பற்றி வருகிற திராவிட முன்னேற்றக் கழகத்தார் எவ்வளவு அதில் அழுத்தமான நம்பிக்கை வைத்திருக்கிறோம் என்பதும் உங்கள் எல்லோருக்கும் தெரியும். எனவே இந்தத் திருத்தத்தை ஆதரிக்க வேண்டும், இதைக் கொண்டுவருவதன் மூலம் மனிதர்கள் சாப்பிடுவதற்குத் தயார் செய்வதற்குத்தான் இந்த மசோதாவிலே இடமிருக்கிறது என்று சொல்லிக்கொண்டு இந்தத் திருத்த மசோதாவை ஆதரித்து என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

11-40 p.m. *திரு. எம். ஆறுமுகசாமி : அவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை நான் எதிர்க்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திருவாளர் ஆதித்தன் அவர்கள் ஒரு பயத்தினை வெளியிட்டார்கள். அதாவது இந்தத் தொழிலை இங்கே நடத்துகிறபொழுது, நாசிக்கிலே நமது நாட்டின் நாணயங்களை அச்சடிக்கும் இடத்தில் எவ்வளவு தீவிரமான கட்டுப்பாட்டைக் கையாள்கிறார்களோ அந்த அளவு ஜாக்கிரதையாக இதிலே இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். நான் இந்த மசோதாவை எதிர்க்கிறதன் பிரதான அடிப்படையான காரணமே அந்த அபாயம் குறித்துதான். ஏனென்றால், மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவை இங்கே முன்மொழிந்து பேசுகையில், ஏற்கெனவேயுள்ள மதுவிலக்குச் சட்டத்திலே குறைபாடுகள் உண்டு, அதை அமுல் நடத்துவதிலும்கூட சிற்சில குறைபாடுகள் இருக்கலாம் என்று ஏற்றுக்கொண்டார்கள். ஏற்கெனவே உள்ள மதுவிலக்குச் சட்டத்திலே குடிப்பதற்கு சிலருக்கு அனுமதி வழங்குவதற்கான ஒரு ஓட்டை இருக்கிறது. எனக்குக்கூட சில நண்பர்களால் யோசனை சொல்லப்பட்டது. என்னுடைய நோய்க்குக் கொஞ்சம் கொஞ்சம் அதை அருந்துவது அந்த நேரங்களிலே ரொம்ப நல்லது என்று. வடக்கே ஒருமுறை போயிருந்தபோது கடுமையான குளிரில் எனக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டபோது, கான்பூரிலே என் பக்கத்திலே மேல்நாடுகளுக்குச் சென்றுவரும் எங்கள் கட்சியைச் சேர்ந்த பெரிய தலைவர் ஒருவர் இதை உபயோகித்துக்கொள், கொஞ்சம் சுகமாக இருக்கும் என்றார். நான் அப்பொழுதுகூடத் தொடவில்லை. ஏனென்று சொன்னால் இது நோய்க்கு முதலில் என்று ஆரம்பித்து, அதற்குப் பிறகு சதா சாப்பிடுகிற பழக்கம் வந்துவிடும். நோய்க்காக பர்மிட்கள் வாங்குவதற்குப் பதிலாக பர்மிட்டுக்காகத்தான் பலருக்கு நோய் வருகிறது. அறிஞர் அண்ணா அவர்கள் கூட என்னிடத்திலே ஒரு முறை சொன்னார்கள். ''மேல் நாடுகளுக்குப் பலரை அனுப்புகிறோம். அங்கே உள்ள பல விசித்திரங்களை, விஞ்ஞான முன்னேற்றங்களைப் பார்த்து வர வேண்டும் என்று. ஆனால் அவர்கள் பார்த்து வந்ததற்குப் பிறகு இங்கே பர்மிட்டுக்கு அப்ளை செய்கிறார்கள். வந்தவுடன் முதலாவது காரியம் நான் 6 மாதம் அங்கே இருந்ததால் சற்று குடிக்கப் பழகிவிட்டேன், எனக்கு அதனால் தேவை என்று நியாயம் சொல்கிறார்கள்,'' என்று

அண்ணு சொன்னுர்கள். அந்நிய நாட்டிற்குப் போய்விட்டு வந்தாலேயே ஆபத்து இருக்கிறது. பலபேர் அதிக நாள் பெங்களூரிலே தங்கிவிட்டால்கூட கஷ்டப்படுகிருர்கள்.

திரு. எஸ். ராகவானந்தம் : தலைவர் அவர்களே, பழகினுல் அந்தப் பழக்கம் வந்துவிடும் என்று கூறுகிருர்கள். நான் குடிப்பவர்களிடம் பழகுகிறேன். அது 'வில் பவரைப்' பொருத்திருக்கிறது. பர்மிட் வைத்திருப்பவர்கள், குடிப்பவர்கள் எல்லோருடனும் பழகியிருக்கிறேன். அப்படிப் பழகுவதனுல் அந்தப் பழக்கம் வந்துவிடும் என்பதை ஏற்றுக் கொள்வதற்கில்லை. அது நமது 'வில் பவரைப்' பொருத்தது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, சட்டங்களில் சில எக்ஸ்ஸெப்ஷன் (exception) இருக்கின்றது. அதுபோல திரு. ராகவானந்தம் அவர்கள் ஒரு எக்ஸ்ஸெப்ஷனுக இருக்கலாம்.

THIRU K. ARIVAZHAGAN : The hon. Member has got the will power to spoil Thiru Raghavanandam.

*திரு. எம். ஆறுமுகசாமி : குடிகாரர்கள் நம்மைக் கெடுத்து விடுவார்கள் என்று சொல்லவில்லை. ஆரம்பத்தில் நோய்க்கு என்று குடிக்கத் தொடங்கினுல் பிறகு அதுவே ஒரு நோயாகிவிடுகிறது என்ற பொருளில் தான் நான் சொன்னேன். நண்பர் திரு. ராகவானந்தம் அவர்கள் சொல்வது போல, இன்னும் மோசமான தரத்திலே உள்ளவர்களோடு கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாகப் பழகிவருகிறவன் நான். மாண்புமிகு உறுப்பினர் திரு. அறிவழகன் அவர்கள் சொல்லியது போல, நாம் யாரையெல்லாம் மோசமானவர்கள் என்று சொல்கிருேமோ அவர்கள் சமுதாயத்தில் தாழ்ந்தவர்கள், கீழ் நிலையில் உள்ளவர்கள் தான். அவர்களின் தகப்பன் மனைவிக்குக் குடிக்கக் கொடுப்பதும், கணவனுக்கு மனைவி கொடுப்பதும், மகனுக்குத் தாய் கொடுப்பதும் தாய்க்கு மகன் கொடுப்பதும் உண்டு. இது அந்த நிலையிலே உள்ளவர்களிடையே சகஜம். அந்த சமூகம் நம்முடைய கண்ணில் படாமல் இருக்கலாம். இந்த அரசு இப்போது மதுவிலக்குக் கொள்கையை உறுதியோடு பின்பற்றுகிறது. பக்கத்தில் பாண்டிச்சேரியில் நம்முடைய கொள்கையை முறியடிக்கும்படியாக இருக்கிறது. மைசூரிலே நம் கொள்கை முறியடிக்கப்படுகிறது. எந்தக் கட்சி இங்கெல்லாம் ஆட்சியில் உள்ளது என்று சொல்லவேண்டியதில்லை. நம்மை முறியடிக்கிற வகையில் பக்கத்தில் விரோதிகள் இருக்கிருர்கள். நாம் மதுவிலக்குக் கொள்கையை அமுல்படுத்துவதற்கு மிகவும் சிரமப்படுகிருேம். பல சங்கடங்களுக்கும் இக்கட்டுகளுக்கும் இடையே அது நிறைவேற்றப்பட்டு வருகிறது. இப்போது பலர் குடிப் பழக்கத்தை மறந்துவிட்டார்கள். இப்போது அவர்களுக்கு மதுப் பழக்கத்தை நாம் இதன் மூலமாக நினைவுபடுத்துகிருேம். மது விலக்குக் கொள்கையை ஒப்புக்கொண்டிருக்கிற ஒரு அரசு ஏற்கெனவே உள்ள சட்டத்தில் உள்ள ஓட்டையை முன் உதாரணமாகக் கொண்டு செல்வது சரியாகாது. நோயாளிகளுக்கு, மருந்து தயாரிப்பவர்களுக்கு அனுமதிக்கலாம் என்ற ஓட்டையைப் பின்பற்றி புதிதாக உற்பத்தி செய்வதற்கு அனுமதி கொடுத்துவிட்டால்

அந்த உற்பத்தியில் பெரிய பிளாக் மார்க்கெட்டிங், ராக்கெட்டிங்கை உருவாக்கியவர்களாவோம். பிறகு இது எங்கே கொண்டு போகும்? முதலில் ஐந்து பேர் பெரியவர்கள் குடிப்பார்கள். பிறகு அந்நிய நாட்டிற்கு ஏற்றுமதி செய்கிறேன் என்று சொல்லுவார்கள். பிறகு அதைப் பார்த்ததும் இன்னும் சிலருக்குக் குடிக்கலாம் என்ற ஆசை வரும். பிறகு இதற்கு எல்லை இல்லாமல் போகும். சட்ட பூர்வமாகவே பலரும் உற்பத்தி செய்யத் தொடங்குவார்கள். பணக்காரர்கள்செய் தால் என்ன தவறு என்று திரு. எஸ்.டி.ஆதித்தன் அவர்கள் கேட்டார் கள். பணக்காரன் மட்டுமல்ல. ஏழை அதைப் பார்த்துவிட்டு தானும் ஒரு நாளைக்கு எப்போதும் சல்பேட்டாவையே குடித்து வருகிறோமே, அந்த உயர்ந்த ரகத்தையும் ரசித்துப் பார்த்தால் என்ன என்ற ஆடம் பர நினைப்புக்கு ஆளாவான். ஓட்டலுக்குச் செல்வான். நல்ல முறை யில்தானே வெளியில் விற்கப்படுகிறது என்ற நினைப்பில் தன் பணத்தை அதிலே செலவழித்துவிட்டு வருவான். எப்படிப் பார்த்தாலும், இது நாம் அனுசரித்து வருகிற மதுவிலக்குக் கொள்கையை உடைப்பதாகத் தான் இருக்கிறது. உறுப்பினர் திரு. வசந்த பாய் அவர்கள் கூடக் கூறிப்பிட்டார்கள், 'Slowly' 'ஸ்டெப் பை ஸ்டெப்' என்று. படிப் படியாக நம்முடைய கொள்கையை உடைப்பதற்கு நாமே எடுக்கும் முயற்சியாகத்தான் இது எனக்குப்படுகிறது. ஆகவே இதை எதிர்க் கிறேன். ஒரு வேளை சட்ட மன்றத்தில் இது பாஸ் ஆகிவிட்ட பிறகு வந்தாலும்கூட, அமைச்சர் அவர்கள் இதிலுள்ள அபாயங்களை, நாங் கள் சொல்கிற எச்சரிக்கைகளைக் கருத்தில் கொண்டு, ஏதேனும் மாற்றம் செய்ய முடியுமா என்று ஆலோசிக்கும்படி கேட்டு அமைகிறேன்.

திரு. கே. அறிவழகன் : தலைவர் அவர்களே, இந்த மசோதாவில் கொண்டுவரப்பட்டிருக்கிற புதிய பகுதிகள் மதுவிலக்குக்கொள்கையைச் சரியான முறையில் நடத்துவதற்குப் பயன்படும் என்பது என்னுடைய எண்ணமாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, இதற்கு முன்னால் இருக்கிற சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிற பகுதிகளிலே பயன்படுத்தப்படுகிற வகையிலே தருவதற்கும் வெளி நாடுகளுக்கும் வேறு பல இடங்களுக்கும் ஏற்றுமதி செய்வதற்குத் தேவையானால் அதைச் செய்யவும் தான் மது உற்பத்தித் தொழிற் சாலையை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்குகிறது இந்த மசோதா என்று குறிப்பிட்டார்கள். உண்மையிலேயே மது தொழிற்சாலையைப் பொறுத்த வரையில், நம்முடைய நாட்டிலே இருக்கிற வேலையில்லாத் திண்டாட்டத்தினுடைய கொடுமையைப் பார்க்கும்போது, அது மிகவும் அவசியமானது என்பது தெரியும். இரவலராக இருப்பதை, வறுமை யில் வாடுவதைப் போன்ற கொடுமை உலகத்தில் இருக்க முடியாது என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார். அந்த அளவுக்கு வள்ளுவர் குறிப்பிட்டிருக்கிற மிக மோசமான வறுமையைப் போக்குவதற்கு ஓரளவு இது போன்ற தொழிற்சாலைகளைத் திறப்பது பயன்படும்

"The things of greatest profit are set forth on the price in the manufacture of wine."

அந்தத் தொழில் அனுபவம் உள்ளவர்கள் குறிப்பிடுவதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். உயர்ந்த மது வகைகளைப் பொறுத்த வரை யில், மிகவும் அதிகமான அளவுக்கு லாபம் தருவதாக அந்த உற்பத்தி

3rd December 1970] [திரு. கே. அறிவழகன்]

இருப்பதால் அந்தத் தொழிலுக்கு அனுமதி வழங்கி வரி மூலமாகவோ பல்வேறு வழிகளின் மூலமோ அரசுக்குக் கிடைக்கக் கூடிய பண வருவாயைப் பெறுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. இந்த நாட்டிற்கு வெளிநாட்டிலிருந்தோ, பாண்டிச்சேரியிலிருந்தோ மது சாமான்கள் கொண்டுவருவதற்குப் பலவிதமான முறைகள் நடைபெறுகின்றன. அந்த முயற்சிகளில் ஈடுபடுகிறவர்கள் அது பலனளிக்காமல் போகும் போது, இங்கேயே நியாயமான முறையில் உற்பத்தி செய்து வழங்கும் முயற்சியில் ஈடுபடுவார்கள். அப்போது ''ஸ்மக்ளிங்' போன்ற தவறுகள் நிச்சயமாகக் குறையும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : சட்டப்படி சாப்பிடுவதற்கு லைசென்சு பெற்று அவர்கள் விற்கிற கடைகளில் வாங்கிக்கொள்ளலாம். 'ஸ்மக்ளிங்' மூலமாக வாங்க வேண்டிய அவசியமில்லை.

திரு. கே. அறிவழகன் : நாட்டில் 'ஸ்மக்ளிங்' நடைபெறுகிறது என்பதை மதுவிலக்கு மசோதாவில் பேசுகிற நேரத்தில் மற்றொரு சபையில் பல மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருப்பது போல 'இல்லிசிட்' முறையில் தவறான வகையில் உற்பத்தி செய்யப்படுகிற சாராயம், வெளிநாடுகளிலிருந்து சட்ட விரோதமான வகையில் கொண்டுவரப்படுகிற மது வகைகள் எல்லாம் இருக்கின்றன. இந்த மசோதாவினால் அவை குறைவதற்கு நிச்சயமாக நியாயம் இருக்கிறது என்று கருதுகிறேன். எதிர்க் கட்சி உறுப்பினர்கள் சொல்லியது போல 11-50 p.m.

"The wine has drowned more men than the sea."

சமுதாயத்தில் வளர்ந்து வருகிற தீங்கினைக் குறைப்பதற்கு சட்டத்தால் மட்டும் முடியாது. சட்டத்தைக் கடுமையானதாக ஆக்கிவிட்டால் மட்டும் தீங்குகள் அற்றுப்போகாது. மகாத்மா காந்தியடிகள் இந்தச் சட்டத்தைப் பற்றிக் குறிப்பிடுகிற நேரத்தில், மக்களின் மனம் திருந்த வேண்டுமென்றுதான் அடிப்படையாகச் சொன்னாரே தவிர, சட்டத்தால் அதை உருவாக்க முடியாது என்பதை, கடந்த 20 ஆண்டுகளாக மதுவிலக்கை அமுல் நடத்துவதற்கு நியாயமான முறையில் அரசு முயற்சித்த போதிலும், அது முடியாமல் இருப்பது நன்றாக எடுத்துக் காட்டுகிறது. திரு. வசந்த பாய் அவர்களும், கலைஞர் திரு. ஷண்முகம் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். ''எப் பொருள் எத்தன்மைய தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதுஅறிவு'' என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார். உள்ளும் புறமும் ஆராய்ந்துதான் அரசு இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. அரசு தீமை செய்கிறவர்களைக் கொலை செய்வதில் தவறில்லை. சாதாரணமாக ஒரு தனி மனிதன் தனக்குத் தீங்கு செய்கிறவனுக்குத் திரும்ப இன்னல் இழைக்கக்கூடாது என்று சொல்லிய வள்ளுவர் கொலையிற் கொடியாரை வேந்து ஒறுத்தலில் நியாயமிருக்கிறது என்கிறார். அதைப் போல நாமே மதுவை உற்பத்தி செய்தால் மதுவிலக்கின் தன்மை குறைந்துவிடாது. அப்படி எண்ணாமல் மது விலக்கை மேலும் அமுல் செய்வதற்கு நம் நாட்டில் இளம் சிறார்களிலிருந்து பெரியவர்கள் வரை திருந்துவதற்கான நல் வாய்ப்பை நல்ல பிரசாரத்தின் மூலம் உருவாக்க வேண்டுமென்று சொல்லி இந்த மசோதாவை ஆதரித்து முடித்துக் கொள்கிறேன்.

[3rd December 1970

திரு. பி. நாராயணசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை பொறுத்த வரையில், இங்கேயே மதுவை தயார் பண்ணுகிற ஒரு பொறுப்பை மட்டும் அரசு ஏற்றுக்கொள்ளும் வகையில் மசோதா தயாராகியிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். நமது நாட்டைப் பொறுத்தவரை, நிறைய மது வகைகள் வெளியேயிருந்து வருகின்றன. தனிப்பட்டவர்களுக்கு வியாதியை முன்னிட்டோ அல்லது போதை என்ற அளவிலோ இந்நாள்வரை பர்மிட்டுகள் வழங்கப்பட்டு அவர்களும் அதைப் பயன்படுத்திக்கொண்டு வருகிறார்கள். அவர்கள் அருந்துகிற மதுவெல்லாம் அநேகமாக வெளி நாட்டிலிருந்து வருகிறது. இதன் காரணமாக அண்டை மாநிலங்கள் எல்லாம் நம்முடைய வருவாயை எடுத்துக்கொண்டு போகின்றன. நான் சார்ந்திருக்கிற கூட்டுறவுத் துறையில் என்.சி.டி.சி. இதற்கான ஒரு பெரிய திட்டத்தைப் போட்டு மூன்றாண்டுகளாக மதுரையில் இப்படி ஒரு சாராயம் காய்ச்சுகிற நிலையம் ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லி வருகிறார்கள். அந்தப் பகுதியில் திராட்சை அதிகமாக இருக்கிற காரணத்தால், அங்கே விளைகிற திராட்சைப் பொருள்கள் எல்லாம் வீணாக அழுகிப் போகின்றன. அதில் ஓரளவுக்குத்தான் மக்களுக்கு பயன்படுகிறது. மீதமுள்ள திராட்சைகள் எல்லாம் அழுகி வீணாய்ப் போகின்றன. எனவே, அவைகளை உபயோகப்படுத்தி இந்த மது தயாரிக்கும் நிலையத்தை உருவாக்கலாம். இதற்காக என். சி. டி.சி. ஸ்தாபனம் பல லட்ச ரூபாய்களைத் தருவதாகவும் இந்த மாநிலத்திலுள்ள கூட்டுறவுத்துறை அதை எடுத்துச் சரியான முறையில் நடத்த வேண்டுமென்றும் மூன்றாண்டுகளாக வற்புறுத்தி வருகிறார்கள். நானும் கடந்த 3 ஆண்டுகளாக யோசித்துச் செய்யலாம் என்ற நிலைமையிலேயே அதைத் தள்ளிப் போட்டுக்கொண்டு வருகிறேன். உள்ள நிலைமைகளைப் பார்க்கிறபோது, அப்படிப்பட்ட ஒரு மது தயாரிக்கும் நிலையத்தை ஆரம்பிக்க வேண்டும் என்றே நான் கருதுகிறேன். நம் மாநிலத்தில் முற்றிலுமாக மதுவிலக்குக் கொள்கையை அமுல் செய்வது என்பது வேறு. ஆனால் இருக்கிற வரை நம்மிடமுள்ள பொருளை மற்றவர்கள் தட்டிக்கொண்டு போய்விடாமல் இருக்க, பொருளாதாரத் துறையில் நாம் இதனால் நஷ்டப்படாமல் இருக்க, இந்தத் தொழிலை நாம் மேற்கொண்டு செயல்படலாம். பின்னால் வேண்டுமானால், பெர்மிட் கொடுக்க வேண்டுமா வேண்டாமா என்பது பற்றி முடிவு எடுக்கலாம். இன்றைய தினம் நம் நாடு பொருளாதாரத் துறையில் இருக்கிற நிலைமையில் இனியும் நாம் நம் நாட்டில் தேவைப்படும் மது வகைகளை வெளியே இருந்து இறக்குமதி செய்து தொடர்ந்து நஷ்டப்பட வேண்டுமா என்பதுதான் கேள்வி. அடுத்து, இங்கே உற்பத்தியாகிற திராட்சையை உபயோகித்து வெளிநாடுகளுக்குத் தேவைப்படும் மது வகைகளைத் தயாரித்து அவர்களுக்கு அனுப்பத்தான் இந்த மது தயாரிக்கும் நிலையங்களுக்கு அனுமதி தர இருக்கிறோம்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : இங்கே தயார் செய்வது வெளி நாட்டுக்கு அனுப்புவதற்குத்தான் என்று எங்கே இருக்கிறது? இங்கேயே உபயோகப்படுத்த முடியாதா ?

3rd December 1970]

திரு. பி. நாராயணசாமி : இதைக் கொண்டு போய் வெளி நாடுகளுக்குக் கொடுத்துவிட்டு, பிறகு நமக்குத் தேவையானதை அவர்களிடமிருந்து வாங்குவது என்றில்லை. இங்கேயே எல்லா மருந்துக் கடைகளிலும் மதுவை வைத்து விற்கிறார்கள். நம் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்களுக்குக்கூட தெரியும். அவர்கள் கடையிலேகூட விற்கிறார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : நான் மருந்துக் கடை வைக்கவுமில்லை. அங்கே மது விற்கவும் இல்லை. தவறான எண்ணம் ஏற்பட்டுவிடக் கூடாதே என்று இதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. பி. நாராயணசாமி : எதற்காகச் சொல்கிறேன் என்றால், நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்களுக்கு இது தெரியும். அவர்கள் அப்பாவே ஒரு டாக்டர். அவருக்கு நடப்பதெல்லாம் தெரியும். நெடு நாட்களாக இப்படி மருந்துக் கடைகளில் சாராயம் விற்பனை யாகிறது. சாராயம் இல்லாத மருந்துக்கடை தமிழ்நாட்டில் கிடையாது. 12-00 noon
அப்படி யாராவது ஒரு கடை வைத்திருக்கிறார் என்றால், அவர் திறமை யாக இந்தச் சர்க்காரில் அனுமதி வாங்க முடியாத நிலையில் இருக்கிறார் என்றுதான் அர்த்தம். எனக்குத் தெரிந்த வரையில், எங்கள் ஊரான மன்னார்குடியில் சாராயத்தை மருந்துக் கடைகளில் வெளியே வைத்து விற்கிறார்கள். போர்டு போட்டுக்கொண்டு விற்கிறார்கள் என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்களே, அது உண்மை. அதற்கான விளக்கங்களையெல்லாம் நான் இங்கே சொல்லுவதற்குத் தயாராக இல்லை. ஆனால் அவர்கள் அந்தச் சாராயத்தை எல்லாம் வெளி நாட்டில் இருந்துதான் வாங்குகிறார்கள். எனவே நான் கேட்பதெல்லாம் இங்கே தேவைப்படுகிற சாராயத்தைகூட வெளிநாட்டிலிருந்து வாங்கித்தான் விற்க வேண்டுமா ? இதை ஏன் நாமே தயார் செய்து நமது பொருளா தாரத்திற்கும் ஒரு நல்ல நிலைமையைத் தேடிக் கொள்ளக்கூடாது என்று தான் கேட்கிறேன். மீண்டும் சொல்லிக் கொள்ளுகிறேன் : மதுவிலக்குப் பிரச்னையில் மற்ற எந்தக் கட்சிக்காரர்களுக்கும் இருக்கிற தீவிரத்தைக் காட்டிலும் எங்கள் அமைச்சர்களுக்கும் எங்கள் கட்சிக் காரர்களுக்கும் இருக்கிற தீவிரம் எந்த வகையிலும் குறைந்ததல்ல. நாங்கள் எங்கள் கட்சிக் கூட்டங்களில் பேசுகிறபோது கூட இதைக் குறிப்பிடுகிறோம். எவ்வளவு தீவிரமாக மது விலக்கை அமுல் படுத்த வேண்டுமோ அவ் வளவு தீவிரமாக அமுல்படுத்த வேண்டும் என்பதிலே மிகுந்த அக்கறை காட்டுகிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களே அதற்கான நட வடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும். நமது பெரியவர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் பேசும்போது, அவருடைய கிராமத்தில் இப்போது யாரும் குடிப்பதே இல்லை என்று சொன்னார்கள். ஆனால் நம்முடைய மதுரைத் தோழர் அவர்கள் பேசும்போது கிராமங்களில் குடி வெகுவாக அதிகரித்திருக்கிறது என்று சொன்னார்கள். இருக்கிறதா இல்லையா என்ற ஆராய்ச்சியில் நாம் இப்போது இறங்க வேண்டாம். முன்னாலே நாங்கள் இதைத் தான் சொல்லிக் கொண்டிருந்தோம். இப்போது அவர்கள் சொல்லுகிறார்கள். நாங்கள் அந்தக் காலத்தில் பேசும் போதெல்லாம் சாராயம் காய்ச்சுவது என்பது எங்கே பார்த்தாலும்

ஒரு குடிசைத் தொழில்போல் பெருகிவிட்டது என்றுதான் குற்றம் சாட்டுவோம். இதையே பெரும் காரணமாகக் கூட அன்றைய தினம் காட்டியிருக்கிறோம். பதனீர் என்ற லைசென்ஸ் கொடுப்பார்கள். அதெல்லாம் இன்றையதினம் கள்ளாக விற்கப்படுகிறது என்று சொல்லு வோம். அது இன்றும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதனுல் தொடர்ந்து லாபம் பெற்று வரக்கூடிய அதிகாரிகள் இருக்கிறார்கள். அந்த அதிகாரிகளை நாம் எவ்வளவுதான் அடக்கினுலும் கூட எப்படியோ இதைச் செய்து விடுகிறார்கள். எனவே இது ஒன்றும் இப்போது வந்த நிலையல்ல என்றே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இது ஒரு நீண்ட நெடிய காலமாக தொடர்ந்து வந்துகொண்டேயிருக்கிறது. அவர்களையெல்லாம் விலக்குவதற்காக புதிய திருத்தங்களைக் கொண்டு வந்து மதுவிலக்கை நல்ல முறையில் அமுல்படுத்த முயற்சிப்போம். இடையில் நமக்குத் தேவைப்படும் மதுவை வெளிநாடுகளில் வாங்குவது என்பதைக் கைவிட்டு இங்கேயே தயாரிக்கிற முறையை, பொருளாதார நிலையை முன்னிட்டு, இங்கே மேற்கொள்வோம். பின்னுலே எடுக்கிற முடிவை ஒட்டி இதை நிறுத்துவதானுல் நிறுத்தலாம் என்று சொல்லிக் கொண்டு இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன்.

திரு. எஸ். முத்துசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தற்போது மது விலக்கு அமுல்படுத்தப்படுகிற தமிழ் நாட்டில் மது தயாரிக்கிற தொழிற்சாலை ஏற்படுத்துவதுபற்றி இப்போது இம் மா மன்றத்திலே மசோதா ஒன்றை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். குடிப் பழக்கத்தைப் பற்றி இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் கருத்து சொன்னபோது, ஒன்றை மிகத் தெளிவாக ஒப்புக் கொண்டார்கள். அதாவது குடிக்கிற பழக்கம் தமிழ் நாட்டில் இருந்து வருகிறது என்பதை மட்டும் ஒப்புக்கொள்கிறார்கள். இருந்து வந்தது, இருந்து வருகிறது என்பதிலே கருத்து வேற்றுமை இல்லாத அளவுக்கு இங்கே எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள். உயர்ந்த ரக மதுவைப் பெரிய பணக்காரர்கள் சாப்பிடுகிறார்கள். ஏழைகள் சல்பேட் சாப்பிடு கிறார்கள். பணக்காரர்கள் பிஸ்கட் பிராண்டி சாப்பிடுகிறார்கள் என்ற அளவுக்கு நாட்டில் உண்மை நிலைமை இருந்து வருகிறது. இருந்தாலும் கூட இதைக் கொஞ்சம் டீசென்ட்ரலைஸ் செய்ய வேண்டும் என்று அரசு எண்ணிய காரணத்தாலோ அல்லது ஏற்றுமதிக்காகத் தொழிலை அபி விருத்தி செய்ய வேண்டும் என்று எண்ணியதின் காரணமாகவோ, இந்த மசோதாவை இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். வெளிநாடுகளைப் பொறுத்த அளவில், அங்கே உள்ள மதுக் கடைகளில் பணியாற்றுகிற பணியாளர்கள் மதுவைச் சாப்பிடாத கொள்கை உள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆனுல் தமிழ் நாட்டு மக்கள் எந்தச் சூழ்நிலையில் பணியாற்றுகிறார்களோ அந்தச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு, அதோடு ஒன்றுபட்டுப் போகிற பழக்கத்தை, தமிழ் நாட்டு மக்கள் நீண்ட காலமாகக் கொண்டிருப்பதன் காரண மாக இதனுல் தீங்கு விளையாது என்று இருக்க முடியாது. எனவே ஒரு தொழிற்சாலை வைத்து, அது தொழிற்சாலையை விட்டு வெளியே வரும்போது, அந்த அளவுக்குப் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதிலே மிகவும் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும் என்ற உறுதியை எடுத்துக்கொள்ள வேண்டும். மது விலக்கு தமிழ் நாட்டில் தீவிரமாக

அமுல் நடத்தப்படுகிறது என்று சொல்லப்பட்டாலும் கூட, மாண்புமிகு உறுப்பினர் திரு. மன்னை நாராயணசாமி அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல், மது தயாரிப்பது ஒரு பெரிய குடிசைத் தொழிலாக இன்றைக்கும் இருக்கிறது. மறைந்துவிடவில்லை என்பதை உணர வேண்டும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பல்வேறு இடங்களிலும், கிராமங்களிலும், குடிசைத் தொழிலாகச் செய்து வருகின்ற நிலைமை உருவாகிறது என்ற உண்மையை எடுத்துக் காட்ட வேண்டியது என் கடமை என்று நினைக்கிறேன். பல்வேறு கிராமங்களிலும், எல்லாப் பகுதிகளிலும் பதநீர் தயாரிப்பதற்காக என்று லைசென்ஸ் பெற்று, அங்கெல்லாம் கள் தயாரிக்கும் சூழ்நிலையையும், அங்கெல்லாம் சாதாரண ஏழை எளிய மக்கள் எல்லாம் சென்று கள் பருகக்கூடிய சூழ்நிலையையும் நான் சுற்றுப்பயணம் செய்யும் போது பார்க்க முடிகிறது. சட்டம் கடுமையாக இருந்தபோதிலும், எந்த அளவுக்கு மக்களிடையே கருத்து வேறுபாடு இருந்தபோதிலும், சாதாரண மக்கள் அதைக் குடித்துக் கெட்டுப் போகின்ற காட்சியை நாம் மறைத்துவிட முடியாது. நாசிக்கில் நோட்டு அச்சடிக்கக்கூடிய இடத்தில் உள்ள கட்டுப்பாட்டு நிலைமையை எடுத்துச் சொன்னார்கள். தமிழ் நாட்டில் இத்தகைய தொழிலுக்குத் தக்க பாதுகாப்பு அளித்து, அதை நடத்த முடியுமா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். நாசிக்கில், பெரிய மிலிட்டரி பட்டாளத்தை வைத்துக்கொண்டு மிக்கப் பாதுகாப்போடு நடத்தப்படுவதைப் போன்ற தக்க கண்காணிப்போடு இந்தத் தொழிற்சாலையை இங்கே அமைக்க முடியுமா என்பதை நன்கு ஆலோசித்து, பிறகு கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எதிர் காலத்தில் மக்களைப் பாதிக்கின்ற நிலைமையை ஏற்படுத்திவிடக் கூடாது என்பதைத்தான் நமது பெரியவர் மாண்புமிகு திரு. டி. கே. எஸ். அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அவர்கள், திருவள்ளுவர் நீதியைப் பற்றியும், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கருத்துக்களைப்பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்துவதன் மூலம் எந்தவிதமான ஊறும் விளைந்துவிடக்கூடாது என்ற அடிப்படையில் அரசாங்கம் கவனத்தோடு இந்தப் பிரச்னையை அணுக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசாங்கத்தின் இந்தக் கொள்கை வெற்றி அளிக்குமா, அளிக்காதா என்பதல்ல எங்கள் விவாதம். நாங்கள் கேட்பதெல்லாம், ஒரு உத்தரவாதம். இது மக்களைப் பாதிக்காது என்ற அந்த உத்திரவாதத்தை அமைச்சர் அவர்கள் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 'லீக்கேஜ்' போன்றவை ஏற்பட்டுவிடக் கூடாது என்று சொன்னார்கள். அத்தகைய உறுதிமொழியை இந்த அரசாங்கம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அதற்கான சூழ்நிலைகள் இருக்கின்றன என்று கூறி, என் இடம் அமர்கிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவர் அவர்களே, இப்போது கொண்டு வரப்பட்டிருக்கின்ற மசோதா மீது பேசுகின்ற வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்தத் தொழிற் சாலையைக் கட்டாயம் ஆட்சியாளர்கள் உடனடியாக எடுத்து நடத்த வேண்டும், பணம் தாராளமாக இந்தத் தமிழ் நாட்டுக்குக் கிடைத்து, நாட்டு ஏழை எளிய மக்கள் வாழ்வதற்கு வழி வகைகள் செய்ய வேண் 12-10 p.m.

டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏழை நாடு என்று சொல்கிருர்களே, அந்தப் பெயரை நீக்குவதற்காக, இந்த வியாபாரத்தையாவது அரசாங்கம் எடுத்து நடத்தி தமிழ் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காந்தியார் அவர்கள் கூட மது விலக்கு வேண்டும் என்று ஒரு காலத்தில் சொன்னபோது, இந்தக் கொள்கையை, எப்பாடுபட்டாவது நிறைவேற்றிவிட வேண்டும் என்பதற்காக எடுத்துக்கொண்ட முயற்சி இது. ''பாலிசி, பாலிசி, கொள்கை, கொள்கை'' என்று எப்போதும் இருப்பது சரியல்ல. அந்தப் பாலிசி காலத்திற்கு ஒத்ததா என்பதைப் பார்க்க வேண்டும். பாலிசியை எந்தக் காலத்துக்கும் ஒரே மாதிரியாக வைத்துக் கொள்ள முடியாது. பள்ளிக்குச் செல்லும்போது இருந்த நிலைமைகளே எப்போதும் இருந்து விடுவதில்லை. எனவே, காலம் மாற, மாற, கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம், நிர்பந்தம் ஏற்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருக்கிருர்கள். அவர்கள் இப்போது கண்ணடி போட்டிருக்கிருர்கள். அவருக்குப் பத்து வயதாக இருந்த போது இந்த மூக்குக் கண்ணடி தேவையில்லாமல் இருந்தது. ஆனல் இப்போது மூக்குக் கண்ணடி தேவைப்படுகிறது. மூக்குக் கண்ணடி இல்லாமல் நடக்க முடிவதில்லை என்று சொல்கிருர்கள். எனவேதான் அந்த நிலையை ஏற்படுத்திக் கொண்டார்கள். ஆகவே, தமிழ் நாட்டு அரசாங்கத்திடம் பணம் இல்லை. பணம் ஏராளமாகத் தேவைப் படுகிறது. அரசாங்கம், பணம் இல்லாமல் இக்கட்டான நிலையில் பல திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் தவிக்கிறது. எனவே, பத்து விதத்திலும் வியாபாரம் செய்து பணம் சேர்த்தாக வேண்டும். காங்கிரஸ் காலத்தில் மதுவிலக்குத் திட்டம் இருந்தது. அவர்கள் சொல்கிருர்கள், அவர்கள் கொண்டுவந்ததாக. சரி, காங்கிரஸ் ஆட்சியில் என்ன செய்திருக்கிருர்கள்? வசதி உள்ளவர்கள் டாக்டர் சர்டிஃபிகேட்டின் பேரில் ஏராளமாகக் குடிக்கலாம் என்று லைசென்ஸ் கொடுத்திருக்கிருர்கள். ஆகவே, எப்போது லைசென்ஸ் கொடுக்க ஆரம்பித்தார்களோ, அப்போதே தவறு நடந்துவிட்டது. நான் இங்கே சொல்வதெல்லாம், தமிழ் நாட்டுப் பணம், பக்கத்திலே இருக்கின்ற பாண்டிச்சேரிக்குப் போகிறது. அந்த மதுவை நாம் இங்கே செய்யாத காரணத்தால், பக்கத்திலே இருக்கின்ற பெங்களூருக்குத் தமிழ் நாட்டுப் பணம் லட்சக் கணக்கில் கொள்ளை கொள்ளையாகப் போகிறது. இப்படி, நாலா பக்கமும் நமது பணம் போய்க் கொண்டிருக்கிறது. இதையாவது அணை கட்டித் தடுத்து நிறுத்த வேண்டாமா? 'ப்ரூயரீஸ்' (**Breweris**) இந்தியா பூராவும் இருக்கின்றன. பெங்களூரில் செய்கிருர்கள். இந்தியா பூராவும் இருக்கும்போது இங்கே மட்டும்எப்படித் தடை செய்ய வேண்டும் என்பதுதான் என் கேள்வி. இங்கே தேவையில்லை என்ருல், தடை என்ருல், அந்தத் தடையை மத்திய சர்க்கார் ஆட்சி பொதுவாக இந்தியா பூராவும் போட்டுவிடலாமே? பல மாநிலங்களில் ப்ரூயரீஸ் வைப்பதற்கு இடம் தந்துவிட்டு, தமிழ் நாட்டுக்கு மட்டும் இல்லை என்பது கஷ்டமானது. தமிழ் நாட்டில் மது விலக்குக் கொள்கை இருக்கிறது. கொள்கைக்கு அப்பாற்பட்டவைகளுக்குக் கொள்கை இல்லை. வியாபாரம் வேறு. அதற்கும் மது விலக்கிற்கும் சம்பந்தம் இல்லை. தமிழ் நாட்டுக்கு வேண்டிய பாட்டில்கள் இருக்கின்றனவே, இவைகளை நாம் வெளி மாநிலங்களிலிருந்து

3rd December 1970] [திரு. சி. வி. ராஜகோபால்]

தானே வாங்குகிறோம்? காங்கிரஸ்காரர்கள் இதை அடியோடு ஒழித்திருந்தால் பரவாயில்லை. அதை விட்டுவிட்டு, லைசென்ஸ் கொடுத்துவிட்டு, வெளி நாட்டிலிருந்து, வெளி மாநிலங்களிலிருந்து பாட்டில்களை வரவழைப்பது என்றால் அது என்ன மதுவிலக்குச் சட்டம்? அது மிகவும் சாதாரணமானது. ஆகவே, நிச்சயம் வியாபாரம் செய்ய வேண்டும். தமிழ் நாட்டுப் பணம் விரயம் ஆகக் கூடாது. வெளி நாட்டிலிருந்து வந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களது மனப்பான்மையை மாற்றுவது என்பது இயலாத காரியம். பெரிய பெரிய மனிதர்கள், நியாயாதிபதிகள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்கள் எப்போதும் குடித்துக்கொண்டே இருப்பதில்லை. ஒரு 'ஸ்டிமுலேஷன்' வேண்டும் என்பதற்காகத் தான் கொஞ்சம் குடிப்பார்கள். ஜட்ஜ்மெண்ட் எழுதும்போது, சும்மா ஒரு சொட்டு நாக்கில் வைத்துக் கொள்வார்கள். 'ஸ்டிமுலேட்' பண்ணுவதற்காக. மது ஒன்றினால் மட்டுமல்ல. காஃபி குடிக்கிறோமே? ஏன்? ஸ்டிமுலேஷன் குறைந்துவிடும்போது காபி குடித்து அதைச் சரி செய்கிறோம். எனவே, பல வியாபாரங்கள் செய்து தமிழ் நாட்டிற்குப் பணம் சேகரித்து பல திட்டங்கள் மூலமாக ஏழை மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு கொண்ட இந்தத் திட்டத்தை ஆதரிக்கிறேன்.

*திரு. கே. ராஜாராம்: துணைத் தலைவர் அவர்களே, தொழில் துறை அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவைப்பற்றிப் பேசும்போது அரசாங்கத்தின் கொள்கையை வலியுறுத்திப் பேசியது மன நிறைவைக் கொடுக்கிறது. மது விலக்கைப் பொறுத்த வரையில், இப்போது இருப்பதைக் காட்டிலும் இன்னும் தீவிரமாக அமுல்படுத்துவது அரசின் கொள்கை என்று சொன்னார்கள். உண்மையில், இது மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது. மாநில முதல்வர் அவர்கள் பல இடங்களில்சென்று, மதுவிலக்கை வைத்திருப்பதா என்பது இன்னும் கேள்விக் குறியாகவே இருக்கிறது என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது, தொழில் அமைச்சர் அவர்கள் இந்த மா சபையில் இந்த மாதிரிச் சொல்வது என் போன்றவர்களுக்கு மிக்க மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சுதந்திரம் கிடைத்த உடனே மதுவிலக்கை மாநிலம் பூராவிலும் அமுலுக்குக் கொண்டுவரவில்லை. ஒரு சில ஜில்லாக்களில் மட்டும் கொண்டுவருகிறோம் என்று சொன்னதற்காக அன்று இருந்த முதலமைச்சரையே, ஏன், அரசாங்கத்தையே கூட மாற்றியமைத்தோம். முதலமைச்சராக இருந்த திரு. பிரகாசம் 3 ஜில்லாக்களில் மாத்திரம் மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டுவந்துவிட்டு, மற்ற ஜில்லாக்களில் கொண்டுவரவில்லை என்பதற்காக அரசாங்கத்தையே மாற்றியமைத்தோம். அந்தக் கட்சியைச் சேர்ந்தவன் என்ற முறையில், முதலமைச்சர் மதுவிலக்கைக் கேள்விக் குறி என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது திடீரென்று அரசாங்கத்தின் கொள்கையை, நிர்ணயம் செய்த கொள்கையை முதலமைச்சர் கை விடமாட்டார் என்று தொழில் அமைச்சர் சொன்னது மனநிறைவைக் கொடுக்கிறது என்று சொல்லி என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் பொது மக்களுக்கு வந்திருக்கும் சந்தேகம் முதலமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொல்கிறார், தொழில் அமைச்சர் வேறு ஒன்றைச் சொல்கிறார் என்பதாகும்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : முதலமைச்சர் அவர்கள் கூறிய கருத்துக்களுக்கும் நான் சொல்கிற கருத்துக்களுக்கும் முரண்பாடு இருப்பதாகத் திரும்பத் திரும்பச் சொல்கிற காரணத்தினுல், அந்த எண்ணத்தை மாற்ற வேண்டுமென்று ஒன்றைத் தெளிவாக்க விரும்புகிறேன். மது விலக்குக் கொள்கையிலே எந்த விதமான தளர்ச்சியும் இல்லே. மதுவிலக்கை ரத்து செய்துவிடப்போவதில்லே என்பதைமட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய சர்க்காரின் கொள்கையை நாங்கள் உறுதியாகப் பின்பற்றி வருகிறோம். இதற்காக மத்திய சர்க்காரிடமிருந்து உதவித் தொகையைக் கேட்கிறோமே தவிர, மதுவிலக்குக் கொள்கையை விட்டுவிடப் போகிறோம்என்று யாரும் தவருக அர்த்தம் செய்துகொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய சர்க்காரிடமிருந்து உதவித் தொகை பெறுவதற்காக, கேள்விக்குறியாக இருக்கிறது என்று முதலமைச்சர் அவர்கள் கூறினர்களே தவிர, இந்தக் கொள்கையை விட்டு விடப்போகிறோம் என்று எண்ணிவிட வேண்டாம்.

*திரு. கே. ராஜாராம் : அமைச்சர் அவர்கள் உறுதியாகக் கூறியதற்காக மிக்க மகிழ்ச்சி. ஆனல் அதைச் சரியாக அமுல் நடத்துவதற்கு இந்த மசோதா, இப்போது சட்டமாக்கப்பட இருக்கும் இந்த மசோதா எந்த அளவிலே உதவி செய்யும் என்பதைப் பரிசீலனே செய்ய வேண்டியிருக்கிறது. சாதாரணமாக இப்போதுள்ள நிலேமையில் அவ்வளவு திருப்திகரமாக இல்லே. மதுவிலக்குச் சட்டத்தை மீறி மது அருந்துவது நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இந்தச் சட்டம் அமுலுக்கு வந்த போது மது அருந்துவதைப்பற்றியோ, மற்றும் மது வகைகளேப் பற்றியோ பத்திரிகைகளில் விளம்பரம் செய்யக் கூடாது என்று செய்திருந்தோம். இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் மது புட்டிகளேப் பற்றியோ, மது அருந்துவது பற்றியோ விளம்பரம் செய்வது தடுக்கப்பட்டிருக்கிறது. ஆனல் பெர்மிட் வாங்கி மது அருந்துபவர்களுக்காக, சில கடைகளுக்கு லேசென்சு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கடைகளுக்கு முன்னலே இருக்கும் படங்களேயும், எழுதியிருக்கும் வாசகங்களேயும் படித்தால், அவ்வளவு வசீகரமாகப் போட்டிருக்கிறர்கள். தெருவிலே போகிறவர்கள் மது அருந்த வேண்டும் என்று அழைப்பது போல அவை இருக்கின்றன. முன்பு இப்படி விளம்பரம் செய்வதைத் தடுத்திருந்தோம். இன்றைக்கு அப்படியில்லே. அண்ணு அவர்கள் வீட்டிற்குப் போகும் வழியில் இப்படி எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. இப்படிப் போர்டு போடுவது தவறு இல்லேயா ?

திரு. சி. வி. ராஜகோபால் : உள்ளே சரக்கை வைத்துக்கொண்டு வெளியே போர்டு வைக்காமல் இருப்பாஞ ?

திரு. கே. ராஜாராம் : திரு. ராஜகோபால் அவர்கள் கூறிய கருத்தை வேறு யாரும் சொல்ல முடியாது. எனக்கு ரொம்ப வேண்டியவர். இப்படியெல்லாம் கடைகளிலே போர்டு வைக்கலாமா, அப்படிச் செய்
12-20 a.m. வதை நாம் தடை செய்து சட்டம் செய்திருக்கிறோம் இல்லேயா என்பதைப் பார்க்க வேண்டும். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், மதுவிலக்கு வெற்றிகரமாகநடைபெற்றுக்கொண்டுவருகிறது. ஒரு குடிகாரன் தன்னுடைய மகன் கூடக் குடிக்க வேண்டுமென்று

3rd December 1970] [திரு. கே. ராஜாராம்]

விரும்புவதில்லை. தன் மகன் குடிக்கிறான் என்று கேள்விப்பட்டால், ஆத்திரப்பட்டு அடிக்கிறான். 'நான் தான் குடித்துக் கெட்டுப் போனேன், நீயும் ஏன் கெட்டுப் போகிறாய்' என்று அடிக்கிறான். குடிக்காதே என்று கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறான். அப்படிப்பட்ட நாடு இது. குடி குடியைக் கெடுப்பது என்று சொல்வது உலகத்திலே இங்குதான். தமிழ் நாட்டிலே தான் குடியின் கொடுமையை நாம் வற்புறுத்திச் சொல்கிறோம். மேல் நாடுகளிலே குடிப்பது தவறு இல்லை என்று நினைக்கிறார்கள்.

திரு. சி. வி. ராஜகோபால்: மேல்நாட்டு நாகரீகம் இந்தியாவிற்குள் வேகமாகப் பரவி வருகிறது. நீங்கள் சொல்வது 10 வருடத்திற்கு முன்பு இருந்த நிலை. இன்றைக்கு மகனும் தகப்பனும் சேர்ந்து குடிக்கிற காலமாகப் போய்விட்டதை நானே பார்த்தேன்.

திரு. கே. ராஜாராம்: நமது நாட்டைப் பொறுத்த வரையில், இல்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. அவர்கள் சொன்ன மாதிரி இல்லை. அது எக்ஸ்ஸெப்ஷன். அதையே ஜெனரல் ரூலாக எடுத்துக்கொள்ளக் கூடாது. நான் அதிகமாகப் பேசப் போவதில்லை. முதலில் கொண்டுவந்த மசோதாவில் இங்கே ஒயின் காய்ச்சுவது என்று இருந்தது. ஆனால் புதிய மசோதாவில் ஒயின் அல்லது அது போன்ற லிக்கர் என்று சொல்லும்போது, சாராயம் அல்லது வேறு போதைப் பொருள்கள் தயார் செய்வதற்கு வழி செய்வதற்கு இடம் கொடுக்கிறது. வெறும் ஒயின் என்று சொல்வது சரியல்ல. லிக்கர் அல்லது ஒயின் போன்ற பொருள்கள், பிராந்தி இவைகள் செய்வதற்கு இதிலே இடம் கொடுக்கப்படுகிறது. இப்படி லைசென்சு கொடுத்துவிட்டு மது விலக்குச் சட்டத்தை நல்ல முறையிலே செயல்படுத்தப்போவதாகச் சொல்வதில் அர்த்தம் இல்லை. இது மதுவிலக்குச் சட்டத்தை உருவில்லாமல் செய்வதற்கு வேண்டிய காரியங்களைச் செய்து விடும் என்று சொல்கிறேன். அதற்கு முத்தாய்ப்பு வைப்பதுபோல-இந்தச்சட்டத்தைக் கொண்டு வருவது நல்லதல்ல. இங்கே குடிக்க மாட்டோம், ஆனால் வெளியிலே இருக்கிறவர்கள் குடிக்கக் கொடுப்போம் என்று சொல்வது சரியல்ல. நான் குடிக்க மாட்டேன் நீ குடி என்று சொன்னால், அது எப்படிச் சரியாகும்? இப்படிப் போதைப் பொருள்களைத் தயார் செய்வது மது விலக்குச் சட்டத்தை இன்னும் அதிகமாகப் பயன் இல்லாமல் ஆக்குவதற்கு உடந்தையாக இருப்பதாகத்தான் ஆகும். அதனால் இந்த மசோதாவை வன்மையாக எதிர்க்கிறேன். அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவை வாபஸ் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ் மாதவன்: தலைவரவர்களே, இந்த மசோதாவின் மீது பேசிய உறுப்பினர்கள் தமிழ் நாட்டு மக்களுடைய உள்ளத்தைப் பிரதிபலித்தார்கள் என்றால், அது மிகையாகாது. இங்கே இந்த மசோதாவை ஆதரித்தவர்களானாலும், எதிர்த்தவர்களானாலும், மதுவிலக்கைத் தீவிரமாக அமுல் நடத்த வேண்டும், அந்தச் சட்டத்தைப் பயனுள்ள வகையிலே நடைமுறைப்படுத்த வேண்டும். அதற்குக் குந்தகம் வரும்படி இந்தப் புதிய சட்டம் இருக்கக் கூடாது என்ற

[திரு. எஸ். மாதவன்] [3rd Decmber 1970

கருத்தை எடுத்து வைத்தார்கள். தென்னாட்டு காந்தி அறிஞர் அண்ணா அவர்களின் வழியில் வந்தவர்கள், அவரால் வளர்க்கப்பட்ட நாங்கள் மதுவிலக்குக் கொள்கையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கையை கைவிட்டு விடக் கூடாது, அவர் கடைப்பிடித்து வந்த உறுதியுடன் மது விலக்குக் கொள்கையை அமுல் செய்ய வேண்டும் என்று எடுத்துக் சொன்னார்கள். இதைக் கேட்க எனக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்படுகிறது. நான் தொடக்கத்தில் கூறியது போல, அந்தக் கொள்கையிலே இந்த அரசுக்கும், இந்த அரசை நிர்வகிப்பவர்களுக்கும் சிறிது கூட தயக்கம் கிடையாது. அதிலே எந்த விதமான சந்தேகமும் இல்லை என்பதை நான் தெளிவுபடுத்த ஆசைப்படுகிறேன். தொழில் என்ற முறையிலே இதைத் தொடங்கலாம் என்ற எண்ணத்தோடு இது இங்கே மேற்கொள்ளப்படுகிறது. அதற்கான அதிகாரத்தை இந்த மசோதாவில் பெறுகிறோம். இதைத் தவிர வேறு எந்த விதமான நோக்கமும் இல்லை என்பதை மீண்டும் வலியுறுத்திச் சொல்ல ஆசைப் படுகிறேன். இந்த மசோதாவைப் பயன்படுத்தித் தவறாக நடப்பதற்கு மதுவிலக்குச் சட்டத்தை முறியடிப்பதற்கு வாய்ப்புகள் உருவாகாமல் இந்த அரசு பாதுகாப்பு தர வேண்டும். அதற்கு உறுதி தரப்படுகிற கோரிக்கை இந்த மன்றத்தில் வைக்கப்பட்டது. அதுதான் நம்முடைய கொள்கை. அந்த உறுதியை இந்த அரசாங்கம் எப்போதும் தருகின்றது என்பதை மீண்டும் வலியுறுத்த ஆசைப்படுகிறேன். இந்தத் தொழிற் சாலையைப்பற்றி ஆராய்கின்றபோது, அதிலே அதிகமாகக் கவனம் செலுத்தி ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று இந்த அரசாங்கம் நினைத்துப் பார்த்தது. மதுரை, சேலம், திருச்சி, கோவை இந்த மாவட்டங்களில் 3600 ஏக்கராக்களில் திராட்சை பயிரிடப்படுகிறது. சுமார் 14 டன் திராட்சை ஆண்டு ஒன்றிற்கு உற்பத்தியாகிறது. இதைக் கொண்டு சுமார் நான்கு ஒயின் தொழிற்சாலைகள் நடத்தலாம் என்ற புள்ளி விவரங்களை நாம் சேகரித்தோம். அது மட்டுமல்ல. இந்தச் சட்டத்திலே ஏற்கெனவே இருக்கிற கான்ஸ்டிடியூஷனிலே அனு மதிக்கப்பட்டிருக்கிற சில கொள்கைப்படி மது வகைகள் வழங்கப்படு கின்றன என்பது நமக்குத் தெரியும். மூலச் சட்டத்தில் மூன்றாவது சாப்டரில் இது விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு எவ்வளவு தேவை, கொடுத்திருக்கின்ற அனுமதிக்கு எவ்வளவு தேவை என்று கணக்குப் போட்டுப் பார்த்தேன். சுமார் 6000 லிட்டர் இன்றைக்குத் தேவைப்படுகிறது. ஒயின், விஸ்கி, பிராந்தி, ரம், ஜின், பீர் இவை களையெல்லாம் மொத்தமாகக் கணக்குப்போட்டுப் பார்த்ததில் இந்த அளவு தேவைப்படுகிறது. அதற்கு இந்த மசோதாவில் அனுமதி கொடுக்கப்படுகிறது. ஆக இருக்கின்ற சட்டத்திலே நாம் அனுமதிக் கின்ற வகைகளுக்குக் கொடுக்கின்ற ஒரு வாய்ப்பை ஏற்படுத்துவதற்கு நாமே உற்பத்தி செய்யலாமா என்பது இந்த மசோதாவினுடைய நோக்கம் என்பதைப் பார்க்கிறோம். வியாபாரம் என்ற தோரணையிலே பக்கத்து மாநிலங்களுக்கு, வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற தொழிலாக இதை உண்டாக்கலாமா என்ற முயற்சிதான் இந்த அர சாங்கத்தினுடைய முயற்சி. அதனுடைய விளைவுதான் இந்த மசோதா.

3rd December 1970] [திரு. எஸ். மாதவன்]

இந்தக் கருத்தைக்கூட ஏதோ திராவிட முன்னேற்றக் கழக அரசு சிந்தித்ததாக, கொண்டுவருவதாக நம்முடைய காங்கிரஸ் கட்சி நண்பர்கள் நினைக்க மாட்டார்கள், நினைக்கவிடக் கூடாது என்பதற்காக முன் எச்சரிக்கையாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்தக் கருத்து 1947-ம் ஆண்டிலிருந்தே, காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்த காலத்திலேயே பல ஆண்டுகள் தொடர்ந்து பரிசீலிக்கப்பட்டு வந்தது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக, தொழிற்சாலைகளுக்கு நாம் அனுமதி கொடுக்கலாமா என்ற கருத்தைப் பரிசீலனை செய்துகொண்டு வந்தார்கள். அண்மைக் காலத்திலே, அவர்கள் ஆட்சியைவிட்டு கடைசியிலே போவதற்கு முன்னாலேயும் அவர்கள் பரிசீலித்தார்கள். பரிசீலித்து அவர்கள் ஏற்ற முடிவை அப்படியே பின்பற்றுகிறது இந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு. எனக்குள்ள தயக்கம் எல்லாம், எனக்கு உள்ள சந்தேகம் எல்லாம், வெளியிலே உள்ள கட்சித்தலைவர்கள், நாங்கள் உருவாக்கிய கொள்கையை எங்களை எதிர்க்கின்ற திராவிட முன்னேற்றக் கட்சி ஆட்சி பரிவோடு, அன்போடு ஆதரித்து நிறைவேற்ற முன்னாலே வருகிறபோது, எங்களாலே இந்த மன்றத்துக்கு அனுப்பப்பட்ட காங்கிரஸ் கட்சி நண்பர்கள் இதை எதிர்க்கலாமா என்று கேட்பார்களோ என்ற சந்தேகத்திலே நான் இதைக் கேட்கின்றேன். அவர்கள் எடுத்த முடிவைத் தவிர, வேறு எந்த விதமான சந்தேகமும் இதில் யாரும் எடுத்துக் கொள்ளக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. ராஜாராம் : அவர்களே அமுலுக்கு கொண்டுவந்திருக்கலாமே.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : நமது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே அதைத்தான் வலியுறுத்திக் கூறினார்கள். இதை அமுல் நடத்துவதிலே ஏதும் தவறுதல் ஏற்பட்டுவிடக் கூடாது என்றுதான் வலியுறுத்தினார்கள். நான் அதைப் பாராட்டுகிறேன். நானே இப்படிப்பட்ட சந்தேகத்தை என்னுடைய உள்ளத்திலே எழுப்பிக் கொண்டேன். இதற்கு கோரிக்கையாக எதைக் கொண்டு வரலாம் என்று பரிசீலித்தபோது, இப்படிப்பட்ட சந்தேகம் ஏற்பட்டதும், மது விலக்குக் கொள்கையை தங்களுடைய சொந்தக் கொள்கை என்று ஏற்றுக்கொள்வதே காங்கிரஸ் கட்சி. காந்தியடிகள் உருவாக்கிய கொள்கை அவர்களுக்குச் சொந்தம் என்பதும், தமிழ் நாட்டுப் பண்புக்கும் ஏற்புடைத்து என்பதும் ஏற்றுக்கொள்ளப்படுகிற கொள்கை. இப்படிப்பட்ட கொள்கையிலே ஏதாவது தவறு ஏற்பட்டுவிடுமோ என்ற சந்தேகம் எங்களுக்கும் ஏற்பட்டது. ஆனால் எந்தக் கட்சி இந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டதோ, அந்தக் கட்சியினுடைய தலைவர் முதுபெருந் தலைவர்கள், இந்தக் கொள்கையிலே முழு நம்பிக்கை வைத்திருந்த தலைவர்கள் மிக அண்மைக் காலத்திலே, ஆட்சியை விட்டுப் போவதற்கு மிக அண்மைக் காலத்திலே இதைப்பற்றி பரிசீலித்து, தனிப்பட்ட அமைச்சர்கள் அல்ல, அமைச்சரவையிலேயே பரிசீலித்து முடிவு எடுத்தார்கள். அதிலேயும் குறிப்பாக இந்தக் கொள்கையிலே யாருக்கு ஆழ்ந்த நம்பிக்கை இருக்கிறதோ, எந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள் இந்த மதுவிலக்கு இல்லாத காரணத்தாலே குடிப் பழக்கத்திலே அழிந்துவிடுகிறார்கள் என்று மேடைகளிலே முழக்க

மிட்டு அவர்களுக்காக வாதாடுகின்றார்களோ, அந்தத் தாழ்த்தப்பட்ட குலத்துக்கு தனிப்பெருந் தலைவராக, பண்புள்ள தலைவராக, இன்றைக்கும் தமிழ் நாட்டு காங்கிரஸ் கட்சி தலைவராக இருக்கக்கூடிய ஒருவர் அவர்களே அமைச்சராக இருந்த காலத்திலே இதைப்பற்றிப் பரிசீலித்து அவர்களுடைய கையாலேயே இந்த மதுவிலக்குக் கொள்கைக்குக் குந்தகம் ஏற்படாத முறையிலே, வெளியிலே ஏற்றுமதி செய்வதற்காக இந்தத் தொழிற்சாலைக்கு அனுமதி கொடுக்கலாம் என்று எழுதியிருக்
12-30 p.m. கிற வாசகத்தை நான் படித்ததற்குப் பின்னாலேதான் என்னுடைய உள்ளத்துக்கே அப்படிப்பட்ட ஒருவரே, அப்படிப்பட்ட ஒரு தலைவரே, இன்றைக்கும் நமது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நமது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக ஏற்றுக்கொள்ளக் கூடிய தனிப்பெரும் செல்வாக்கு படைத்த தலைவரே உணர்ந்து அவருடைய கைப்படவே எழுதியிருக்கின்ற காரணத்தாலே, இப்படிப்பட்ட கொள்கை தேவை தான் என்ற முடிவுக்கு எங்களாலே வர முடிந்தது. அவர் மட்டுந் தானா? இன்றைக்குக்கூட தமிழ் நாட்டிலே சிறந்த தலைவர், சிறந்த நிர்வாகி என்று சொல்லக்கூடிய அளவுக்குத் தகுதி படைத்தவர்கள் முதலமைச்சராக இருந்து அவர்களும் பரிசீலித்து இது நியாயந்தான் என்று ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய குறிப்புகளைப் பார்த்த பிறகுதான் எங்களுக்கெல்லாம் இந்த தைரியம் வந்தது. காங்கிரஸ் கட்சிப் பெருந் தலைவர்களே இப்படிப்பட்ட கொள்கைக்கு ஆதரவு தந்திருக்கும் போது, இதிலே தவறே இருக்காது, நியாயமான முறையிலே நடத்த முடியும் என்ற நம்பிக்கையோடு இதைக் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே மதுவிலக்குக் கொள்கையையும் இதையும், பிணைத்து நாம் பேசவேண்டாம் என்று மட்டும் பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன். மீண்டும் சொல்கிறேன், இந்த அரசு இன்றைக்கு மதுவிலக்குக் கொள்கையிலே தெளிவான திட்டவட்டமான கொள்கையைக் கொண்டிருக்கிற காரணத்தாலேதான் இந்த மசோதாவிலேகூட சட்டத்திலே 'அனுமதிக்கப்பட்ட வகைகளுக்காக, வெளியிலே ஏற்றுமதி செய்வதற்காக' என்பதைத் தெளிவாகப் போட்டிருக்கிறோம். ஆகவே மதுவிலக்குக் கொள்கையைப்பற்றி யாருக்கும் சந்தேகம் வேண்டாம். ஆனால் மதுவிலக்குக் கொள்கையைப்பற்றி நாம் சிந்திப்பது நியாயம் என்று கருதுகிறேன்.

*திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : சற்று முன்னால் சக அங்கத்தினர் மன்னை நாராயணசாமி அவர்கள், பேசும்போது, இங்கே இப்பொழுது சட்டத்துக்குட்பட்டுத் தயாரிக்கப்படும் மது இந்தத் தமிழ் நாட்டின் உபயோகத்துக்குப் பயன்படாது வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யக் கூடியது மட்டுந்தானா என்று கேட்டபோது, இங்கும் பயன்படும் என்று சொன்னார்களே, ஆகையினாலே முன்னால் காங்கிரஸ் ஆட்சி இருந்த போது, அவர்கள் பரிசீலனை செய்து தமிழ் நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. கக்கன் அவர்கள் சம்மதம் அளித்த கொள்கையிலே உள்நாட்டுக்கும் பயன்படும் வகையிலே இந்த மது தயாரிக்கப்படும் என்ற கொள்கை ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : நான் யாருடைய பெயரையும் இழுக்க விரும்பவில்லை. யாருக்கும் தொல்லை கொடுக்க விரும்பவில்லை. ஆனால் நமது முன்னாள் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர்

3rd December 1970] [திரு. எஸ் மாதவன்]

அவர்கள் இப்பொழுது சொன்னதைப் பார்த்தால், வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கு நீங்கள் தொழிற்சாலைக்கு அனுமதிக்கலாம் என்று சொல்வதுபோல் தொனிக்கிறது. நாம் இப்படியெல்லாம் வாதத்தை வைக்க வேண்டாம். நான் முன்னேயே விளக்கினேன், சட்டத்திலே அனுமதிக்கப்பட்ட வகைகளுக்கு என்று. மது விலக்குக் கொள்கையைப்பற்றி ஆழ்ந்து பரிசீலிப்பதிலே இந்த அரசாங்கத்துக்கு எந்தவிதத் தயக்கமும் கிடையாது. நான் தேர்தலிலே வெற்றிபெற்று அமைச்சரானவுடனே என்னுடைய தொகுதியிலே ஒரு கிராமத்திற்குப் போனேன். அந்தக் கிராமம் குடிப் பழக்கத்திலே ஆர்வம் உள்ளவர்கள் இருக்கின்ற கிராமம். அந்த ஊருக்குச் சென்றவுடனே முதன்முதல் ஒரு பெரியவர் கேட்டது, நீங்கள் ஆட்சிக்கு வந்துவிட்டதாலே எப்படியாவது இந்தக் கள்ளுக்கடையை திறக்கக்கூடாதா என்று. நான் அவர்களைப் பக்கத்திலே வைத்துக்கொண்டு, எனக்குப் பக்கத்திலே இருந்த நூற்றுக்கணக்கான தாய்மார்களைப் பார்த்துக் கேட்டேன், இது நியாயமா என்று. 'அய்யோ சாமி, அதை மட்டும் கொண்டுவந்து விடாதீர்கள். எங்களுடைய வாழ்க்கையைக் கெடுத்துவிடும். எங்களுடைய கிராமத்தினுடைய சூழ்நிலையே மாறிவிடும்' என்று சொன்ன காட்சியை நானே நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறேன். அந்தக் கிராம மக்களிடத்திலே அப்படிப்பட்ட உணர்வு இருக்கிறது என்பதை யாரும் மறந்துவிட முடியாது. இப்போதைக்கு நமது தமிழ் நாட்டிலே மது விலக்கு வேண்டும் என்ற கொள்கையைத்தான் பின்பற்றி வரக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. நாட்டிலே ஏற்படக்கூடிய சூழ்நிலை பரவலாக மாறி வருகிறது என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. அது மட்டுமல்ல. ஒழுக்கத்தைக் கற்பிப்பது சட்டத்தின் மூலமாக மட்டுந்தான் என்று கருதினால், அதிலே தோல்வியைத்தான் அணைக்க வேண்டி வரும். மதுவிலக்குச் சட்டத்திலே எங்கேயாவது ஓட்டை இருக்கிறது என்றால், ஒழுக்கத்தை விரும்பாதவர்கள் நாட்டிலே இருக்கிறார்கள் என்பதுதான் பொருள். நமது தமிழ் நாட்டு முன்னாள் காங்கிரஸ் கமிட்டித் தலைவரவர்கள், மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அருமையாகச் சொன்னார்கள். இன்றைக்குக்கூட கிராம மக்களிடத்திலே மதுவிலக்கு வேண்டும் என்ற உணர்வு இருப்பதை வலியுறுத்தினார்கள். மாண்புமிகு அங்கத்தினர் அய்யாசாமி அவர்கள் சொல்ல வேண்டும் என்பதற்காக சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். நிச்சயம் கிராம மக்கள்மீது அவர்களுக்கும் நம்பிக்கை இருக்கும் என்று நம்புகிறேன்.

திரு. எம். அய்யாசாமி : வலங்கிமானில்கூட கள் இறக்கி அதைக் குடித்து 9 பேர் செத்தார்கள் என்ற செய்தி பத்திரிகையிலே வந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : அதைத்தானே மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் சொன்னார்கள். எங்கேயோ நடக்கிற நிகழ்ச்சிகளை எடுத்துக்கொண்டு கிராமங்களிலெல்லாம் நடக்கிறது என்பது கிராம மக்களை இழிவுபடுத்துவதாகும் என்று. மாண்புமிகு அய்யாசாமி அவர்கள் மதுரையிலே இருப்பதாலே எங்களைப் போன்ற கிராமத்தார்களைப்பற்றித் தெரியவில்லை. எங்கள் கிராமத்

திலேயே இருக்கிற திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் எங்கள் பக்கம் இருக்கிறார்கள் என்பதிலே மகிழ்ச்சியடைகிறேன். ஆகவே மது விலக்குக் கொள்கையை வலியுறுத்தவேண்டும் என்பதிலே யாருக்கும் சந்தேகம் வேண்டாம். சட்டத்திலே கொண்டுவர வேண்டும் என்று முயற்சி செய்யும்போது தவறுகள் ஏற்படுகின்றன. அதையெல்லாம் மாற்றியமைப்பதற்கு இதைச் சமுதாயப் பிரச்னையாக ஏற்றுக்கொண்டு முயற்சி எடுக்க வேண்டுமே தவிர, ஒரு சட்டப் பிரச்னையாக, ஒரு அரசியல் கட்சி அல்லது ஒரு அரசாங்கத்தின் தனிப்பட்ட பிரச்னையாக எடுத்துக்கொண்டு வாதாடுவது பிரச்னையைவிட்டு தொலைவை நோக்கி நம்மை அழைத்துச் செல்வதாகும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

இங்கே பல்வேறுபட்ட அரசியல் கட்சித் தலைவர்கள் பேசினார்கள். அவர்கள் பேசும்போது, தமிழர் என்ற உணர்ச்சியைத் தெரிவித்தார் களே தவிர, தங்கள் கட்சி உள்ளத்தை வெளிப்படுத்தவில்லை. நமது நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் விளக்கமாகச் சொன்னார்கள். தங்கள் கட்சித் தலைவரே குடியுங்கள் என்று சொன்னார்கள் என்று சொன னார்கள். ஆக அந்த அந்தக் கட்சி ஆளுகின்ற மாநிலத்திலே மது விலக்குக் கொள்கையை ரத்து செய்திருக்கிறது என்பதையும் உணர் கிறோம்.

காங்கிரஸ் கட்சிதான் இந்தக் கொள்கைக்குத் தோற்றுவாய் என்பதை நாமெல்லாம் உணர்ந்திருக்கிறோம். அதே காங்கிரஸ் கட்சி ஆளுகிற மாநிலங்களில் முழுக்க முழுக்க மதுவினை ஏற்கக் கூடிய சூழ்நிலை உருவாகிவிட்டது என்பதை நாம் இன்றைக்குக் காண்கிறோம். இந்த மன்றமும் அதைக் காணக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. சிண்டிகேட், இண்டிகேட் என்ற பெயரில் தவறு இருக்குமானால், ஆர்கனைசேஷன், காங்கிரஸ், ரூலிங் காங்கிரஸ் என்று இருந்தாலும், இந்த விஷயத்தில் கருத்து வேறுபாடுகள் இல்லை. எந்தக் கட்சியாக இருந்தாலும், கொண்ட கொள்கையை விடக்கூடிய சூழ்நிலையில் வேண்டுமென்றே அவற்றிற்கு எதிராகச் செல்கிறார்கள் என்று கூறமாட்டேன். அதற்கு மாறாக நாட்டின் சூழ்நிலைக்கு ஏற்றவாறு நாட்டின் கொள்கையை மாற்ற வேண்டுமென்ற நல்ல எண்ணத்தின் காரணமாக மதுவிலக்கை தளர்த்து கிற நிலையைப் பல்வேறு மாநிலங்களில் பார்க்கிறோம். சில அரசியல் கட்சிகள் மதுவிலக்கு கூடாது என்று வற்புறுத்தும் போக்கு நாட்டில் இருக்கிறது. தனிப்பட்ட மனிதர்களின் பிரச்னை அது. தமிழ் நாட்டுப் பண்பைப் பொறுத்த வரையில், நாம் மதுவிலக்கை ஏற்றுக் கொள்கிறோம் என்பதில் சந்தேகமே வேண்டாம். இப்போது அரசாங் கம் கொண்டுவரும் மசோதாவையும் மதுவிலக்கையும் இணைத்துப் பேசுகிறவர்கள் அகில இந்திய ரீதியில் இதைப்பற்றிச் சிந்திக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அகில இந்தியக் கட்சியாக உள்ளவர்கள் இதைப்பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். கட்சித் தலைவர்களிடம் அவர்கள் சொல்ல வேண்டும். அரசியல் அமைப்புச் சட்டத்தில் டைரக் டிவ் பிரின்சிபிளில் குறிப்பிட்டவைகளுக்கு மாறாக நடக்கும் சூழ்நிலை இந்திய நாட்டில் உருவாகலாம் என்பதை அகில இந்திய கட்சிகள் சிந்திக்க வேண்டும். எங்களைப் பொறுத்த வரையில், பொறுப்பு உணர்ச்சியோடு மத்தியஅரசாங்கத்திடம் சொல்லியிருக்கிறோம். மத்திய

3rd December 1970] [திரு. எஸ். மாதவன்]

அரசாங்கம் மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்த வரையில், அந்தந்த மாநில அரசுகளே பார்த்துக்கொள்ளும் வகையில் விட்டுவிட வேண்டும். கொள்கை அவர்களுடையதாக இருக்கலாம். அதை நிறை வேற்றுகிற அதிகாரமும் அவர்களிடமே இருக்க வேண்டுமென்று கொண்டு மதுவிலக்கை இந்திய நாடுமுழுவதும் ஏகோபித்து நிறைவேற்ற சட்டம் உருவாக்க வேண்டும். அதற்காக மாநில அரசாங்கத்தின் அதிகாரத்தை மத்திய அரசாங்கத்திற்கு விட்டுக் கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதைத் திராவிட முன்னேற்றக் கழக அரசின் சார்பில் மதுவிலக்குக்கொள்கை நாடு முழுமையும் பரப்பப்பட வேண்டு மென்ற நல்ல எண்ணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அகில இந்தியக் கட்சியாக உள்ளவர்கள் பக்கத்து மாநிலங்களுக்குச் சென்று இந்த ஆலோசனையைக் கூறவேண்டும். அகில இந்தியா முழுவதும் ஒரு கொள்கை உருவாக்கப்படவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். பக்கத்து மாநிலங்கள் முழுவதும் மதுவிலக்கை ரத்து செய்துவிட்ட காரணத்தால் தமிழ் நாட்டில் மிகவும் சிக்கலான நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. சில கடத்தல்கள், தவறுகள் நடக்கின்றன என்றால் அவற்றிற்கு இதுவும் ஒரு காரணம் என்பதைச் சிந்திக்க வேண்டும். எப்படிச் சட்டத்தைப் போட்டு காவல் துறையைப் பலப்படுத்தினாலும், சுற்றியுள்ளவர்கள் அப்படிப்பட்ட சூழ்நிலையில் வாழும்போது, நமக்கு மதுவிலக்கை ரத்து செய்யும் பேராபத்து வந்து விடுமோ என்று அச்சப்பட வேண்டியவர்களாக இருக்கிறோம். அப்படி வராது என்றாலும் அச்சம் இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையை மாற்றுவதற்கு அகில இந்திய கட்சிகள் முயற்சி எடுக்க வேண்டும், மத்திய அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். மதுவிலக்குக் கொள்கைக்கும் மதுத் தொழிற்சாலை தொடங்குவதற்கும் நிச்சயம் சம்பந்தமில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள்எதிர்ப்பதற்குக் காரணம்,இந்தத்தொழிற்சாலை தொடங்குவதனால் மதுவிலக்குக் கொள்கை தளர்ந்துவிடுமோ, அதற்கு ஊறுநேரிடுமோ என்ற அச்சம்தான். அதைப் போக்கும் வழியில் அரசாங்கத்தின் சார்பில் உறுதி அளிக்க விரும்புகிறேன். தொழிற்சாலை திறப்பதற்கு அனுமதி தருவதற்கும் மதுவிலக்கை அமுலாக்குவதற்கும் சம்பந்தமில்லை. தொழிற்சாலை, சட்டத்திற்கு உட்பட்டுத்தான் செயல்படும் என்பதையும் சட்டத்திற்குப் புறம்பாக நடப்பதை இந்த அரசாங்கம் அனுமதிக்காது என்பதையும் கூறி நல்ல நோக்கத்தோடு எதிர்க்கிறவர்கள் நிச்சயமாக அவர்கள் திருத்தத்தைத் திரும்பப் பெற்று இந்த மசோதாவை ஏகோபித்து நிறைவேற்றித் தர வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன். 12-40 p.m.

DEPUTY CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Prohibition (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 39 of 1970), as passed by the Assembly, be taken into consideration."

The motion was put and carried.

THIRU K. RAJARAM : The Noes have it.

THE HON. THIRU S. MADHAVAN : The motion was put already to the vote of the House and carried.

DEPUTY CHAIRMAN : There are no amendments to clauses.

Clauses 2 to 4 were put and carried.

Clause 1, the Long Title and the Enacting Formula were put and carried.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

"That the Tamil Nadu Prohibition (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 39 of 1970), as passed by the Assembly, be passed."

DEPUTY CHAIRMAN: Those who are in favour of the motion will please say "Aye."

(A large number of Members said 'Aye').

DEPUTY CHAIRMAN : The voices of 'Ayes' being more I think the 'Ayes' have it.

THIRU K. RAJARAM : The 'Noes' have it, Sir.

DEPUTY CHAIRMAN : The hon. the Leader of the Opposition may say "The 'Noes' have it." As Chairman, I have got power to decide whether it is a frivolous claim or a real claim. I have always got powers in this regard.

THIRU K. RAJARAM : Then I want a poll.

DEPUTY CHAIRMAN : It is not necessary.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் டிவிஷன் கேட்பதற்கு முறையிருக்கிறது. நம்முடைய கன்வென்ஷன் விதியின்படி 'Carried or lost' என்று தலைவர் அவர்கள் சுறுசுறுப்பாகச் சொல்லிவிட்டார்கள். அப்படித் தலைவர் சொன்னதற்குப் பிறகு 'நோ' என்று எதிர்க் கட்சித் தலைவர் சொன்னார்களே தவிர 'I want division' என்று சொல்லவில்லை.

DEPUTY CHAIRMAN : I shall now read the relevant rules. "If in the opinion of the Chairman, the division is unnecessarily claimed, he may ask the members who are for 'Aye' and those for 'No' respectively to rise in their places and, on acount being taken, he may declare the determination of the House. In such a case, the names of the voters shall not be recorded." I now call upon the Members to rise in their places.

3rd December 1970]

(Then the Members stood in their respective places and a count was taken.)

DEPUTY CHAIRMAN : Ayes 17 and Noes 9. The motion is carried.

The motion was carried and the Bill was passed.

(2) *The Tamil Nadu Water Supply and Drainage Board Bill,* 1970 (*L. A. Bill No. 47 of* 1970)

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : தமிழ் நாடு 1970-ஆம் ஆண்டு நீர் வழங்கல் வடிகால் வாரிய மசோதாவை† (சட்ட மன்றப்பேரவை மசோதா எண் 47/1970) ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று நான் முன்மொழிகிறேன். இம்மசோதா சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நகர்ப் புறப் பகுதிகளுக்கும், கிராமப்புறப் பகுதிகளுக்கும் இயன்ற வரையில் குறைந்த காலத்தில் நீர் வழங்கு வசதிகளையும் போதிய வடிகால் வசதிகளையும் செய்து தருவதன் முக்கியத்துவத்தைக் குறித்து தற்போது சில காலமாகவே அரசின் நாட்டத்தைக் கவர்ந்து வந்துள்ளது. நீர் வழங்கு வடிகால் திட்டங்கள் தொடர்பான பொருள்கள் பல துறைகளால் கவனிக்கப்பட்டு வந்தன என்பது தெரிய வந்தது. எனவே குடி நீர் வழங்கு வடிகால் திட்டங்களைச் செவ்விய முறையில் திட்டமிட்டு நிறைவேற்றுவதற்காக, இவற்றை ஒரே அமைப்பின் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டு வருவது அவசியமென்று அரசு கருதியது. அப்போதுதான் அவற்றை நன்கு ஆய்வு செய்து நிறைவேற்ற இயலும் என்பதும் அரசின் கருத்தாகும். அதற்கிணங்க, தமிழ் நாடு நீர் வழங்கு வடிகால் வாரியத்தை 1969 செப்டம்பரில் அரசு அமைத்தது. இந்த வாரியம் தனிச் சிறப்பு வாய்ந்ததாகும். எடுத்துக்காட்டாக, கல்கத்தா அல்லது பங்களூரைச் சேர்ந்த மாநகர் நீர்வழங்கு கழிவுநீர் அகற்று வசதி வாரியங்கள் நீர்வழங்கு வடிகால் திட்டங்களை மட்டுமே கவனித்துக்கொள்கின்றன; அதுவும் அந்தந்த நகரங்களில் அத்திட்டத்தை நிறைவேற்றுவது குறித்தே அந்த வாரியங்கள் நாட்டம் செலுத்துகின்றன. ஆனால், தமிழ்நாடு நீர்வழங்கு வடிகால் வாரியம் தமிழ் நாடு முழுவதற்குமான நீர்வழங்கு வடிகால் திட்டங்கள் குறித்து நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கென நிர்வாக ஆணை ஒன்றினால் நிறுவப்பட்டது.

இந்த வாரியம் சட்டமுறை அடிப்படையில் அமைந்த தன்னாட்சி உரிமையுடைய குழுவாக நிறுவப்படுமானால், தமிழ் நாட்டிலுள்ள எல்லா நகராட்சிகளுக்கும் முக்கிய ஊராட்சிகளுக்கும் குடிநீர் வசதியையும் வடிகால் வசதியையும் 1972-ம் ஆண்டுக்குள் செய்து தரும் நோக்கத்துடன் விரைவாக திட்டமிடுவதும் திட்டங்களை விரைவாக ஆய்வு செய்து நிறைவேற்றுவதும் இயலும் என்று அரசு கூறுகிறது. அத்துடன், நிதி உதவும் நிறுவனங்களிடமிருந்தும் வெளிச் சந்தைகளிலிருந்தும் அது கணிசமான அளவிற்கு நிதி வாயில்களைத் திரட்டுவது இயலும். எனவே, தன்னாட்சி உரிமையுடைய தமிழ் நாடு நீர்வழங்கு வடிகால் வாரியத்தை நிறுவ இந்த மசோதா வகை செய்கிறது. உள்ளாட்சி

† Printed as Appendix II

[திரு. எஸ். மாதவன்] [3rd December 1970

மன்றங்களின் சார்பாக அவர்களது இசைவுடனும் தீவிர ஒத்துழைப் புடனும், நீர்வழங்கு வடிகால் திட்டங்களை ஆய்வு செய்து தயாரித்து நிறைவேற்றுவதற்கான அதிகாரங்களையும் அலுவல்களையும் அந்த வாரி யம் கொண்டிருக்கும்.

இந்த வாரியம் சுயேச்சையான, சட்ட பூர்வமான குழுவாக அமைக் கப்பட்ட பிறகு, நீர்வழங்கு வடிகால் திட்டங்களை திட்டமிட்டு ஆய்வு செய்து நிறைவேற்றும் பணி அதற்கு நேரிடையாக ஒப்படைக்கப்படும். ஏனைய வளர்ச்சித் திட்டங்கள் தொடர்பாக அவர்களது பிற பொறுப்பு களுக்கேற்ப அரசு உதவியும் வாரியத்திற்குக் கிடைக்கும். எனினும் நிதி உதவும் நிறுவனங்கள் மூலமாகவும், பொதுக் கடன்கள் மூலமாக வும் தனக்குத் தேவையான நிதிகளைத் திரட்டிக் கொள்வது வாரியத் தின் பொறுப்பாகும். இந்த நிதி வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொண்டு, பெருமளவு நகர்ப்புற பகுதிகளுக்கும், கிராமப்புறப் பகுதி களுக்கும் 1972 ஆம் ஆண்டுக்குள் நீர் வழங்கு வடிகால் வசதிகளைச் செய்து கொடுக்கும் மாபெரும் திட்டமொன்றை வாரியம் ஏற்கெனவே மேற்கொண்டுள்ளது.

சென்னை மாநகரில் தொழில்களுக்கும், வளர்ந்துவரும் மக்கள் தொகைக்கும் நீர்த் தேவைகள் சொல்லொணு அளவிற்கு அதிகரித்து வந்துள்ளன. சென்னை மாநகரின் இத்தகைய நீர்வழங்கு பிரச்னைக்கு நீண்டகால நோக்கில் தீர்வு காணும் நோக்கத்துடன், சென்னை மா நகருக்கு நீர் வழங்கு வசதியைப் பெருக்க வேண்டியுள்ளது. தமிழ் நாடு நீர்வழங்கு வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்ட பெருந் திட்டங்களில் இதுவும் ஒன்ருகும். முதற்கண், தென்ஞற்காடு மாவட் டத்திலுள்ள வீராணம் ஏரியிலிருந்து நீர் இறைத்துச் சென்னைக்கு மாநகருக்கு நாளொன்றுக்கு 40 மில்லியன் காலன் நீர் கூடுதலாக வழங்குவதென இப்போது முடிவு செய்யப்பட்டுள்ளது.

அரசால் மேற்கொள்ளப்பட்ட உறுதியான இந்த நடவடிக்கைகளின் விளைவாகவும், தமிழ் நாடு நீர்வழங்கு வடிகால் வாரியம் தன்னுட்சி உரிமை பெற்ற குழுவாக அமைக்கப்பட்டதன் விளைவாகவும், இம் மாநிலத்தின் ஒவ்வொரு நகரமும் கிராமமும் நீர் வழங்கு வசதி, வடி கால் வசதி போன்ற அடிப்படை வசதிகளை விரைவில் பெறும் என்று நான் நம்புகிறேன்.

இவை கூறி, சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டுள்ள, இம்மசோதாவை இம்மேலவை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளுமாறு பரிந்துரைக்கின்றேன்.

DEPUTY CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Water Supply and Drainage Board Bill, 1970 (L.A. Bill No. 47 of 1970), as passed by the Assembly, be taken nto consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

3rd December 1970]

Clauses 2 to 73 were put and carried.

Clause 1, the Long Title and the Enacting Formula were put and carried.

THE HON. THIRU S. MADHAVAN : I move—

"That the Tamil Nadu Water Supply and Drainage Board Bill, 1970 (L.A. Bill No. 47 of 1970), as passed by the Assembly, be passed."

DEPUTY CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Water Supply and Drainage Board Bill, 1970 (L.A. Bill No. 47 of 1970), as passed by the Assembly, be passed."

The motion was put and carried and the Bill was passed.

DEPUTY CHAIRMAN : The House will now adjourn *sine die*. 12-48 p.m.

The House then adjourned *sine die*.

VIII. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE

A. *Statutory Rules and Orders*

NIL.

B. *Reports, Notifications and Other Papers*

*30. Returns of Assets of Four Members of the Tamil Nadu Legislative Assembly for the years ending 31-3-1967, 31-3-1968, and 31-3-1969 and 29 Members of the Assembly for the year ending 31-3-1970, placed on the Table in pursuance of the Resolution passed by the Tamil Nadu Legislature on the 28th August 1969.

**31. The Tamil Nadu Prohibition (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 39 of 1970), as passed by the Assembly.

**32. The Tamil Nadu Water Supply and Drainage Board Bill, 1970 (L.A. Bill No. 47 of 1970), as passed by the Assembly.

†33. Errata to the Tamil Nadu Co-operative Societies (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 27 of 1970), as passed by the Assembly.

*Laid on the Table of the House on 2nd December, 1970.

**Circulated to all M.L.Cs. on 2nd December, 1970.

†Circulated to all M.L.Cs. on 30th November, 1970.

Appendix I

[*Vide* item VII (1)]

L.A. Bill No. 39 of 1970

(As passed by the Assembly)

A Bill further to amend the Tamil Nadu Prohibition Act, 1937.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-first Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Prohibition (Amendment) Act, 1970.

(2) It shall come into force on such date as the State Government may, by notification, appoint.

2. *Insertion of new section* 17-B *in Tamil Nadu Act* X *of* 1937.—After section 17-A of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937) (hereinafter referred to as the principal Act), the following section shall be inserted, namely :—

"17-B. *Licence for manufacture of potable liquor.*—The State Government or subject to their control, the Collector may issue licence to any person or any institution whether under the management of Government or not, for the manufacture of liquor for human consumption for purposes of export, for the export of such liquor and for the purposes permitted under this Act."

3. *Amendment of section* 21, *Tamil Nadu Act* X *of* 1937.—In section 21 of the principal Act, for the words, figures and letter "section 6-A, 18, 19 or 20," the words, figures and letters "section 6-A, 17-B, 18, 19 or 20" shall be substituted.

4. *Amendment of section* 22 *Tamil Nadu Act X of* 1937.–In section 22 of the principal Act, for the words, figures and letter "section 6-A, 18, 12, or 20'' the words, figures and letters "section 6-A, 17-B, 18, 19 or 20" shall be subsituted.

[3rd December 1970

APPEND,X II

[*Vide* item VII (II)]

L.A. Bill No. 47 of 1970

(As passed by the Assembly)

THE TAMIL NADU WATER SUPPLY AND DRAINAGE BOARD BILL, 1970.

A Bill to provide for the establishment of Water Supply and Drainage Board and the regulation and development of drinking water and drainage in the State of Tamil Nadu.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-first Year of the Republic of India as follows :—

CHAPTER I

PERLIMINARY

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Water Supply and Drainage Board Act, 1970.

(2) It shall come into force on such date as the Government may, by notification, appoint.

2. *Definitions.*—In this Act, unless the context otherwise requires,—

(1) " Board " means the Tamil Nadu Water Supply and Drainage Board constituted under section 4 ;

(2) " Chairman " means the Chairman of the Board ;

(3) " Committee " means any Committee appointed under section 14 ;

(4) " Director " means the Director of the Board and includes its Chairman and Managing Director ;

(5) " drainage " means any device for carrying off sewage, offensive matter, polluted water, waste water, rain water, or sub-soil water ;

(6) " Government " means the State Government ;

(7) " local authority " means—

(*i*) the Municipal Corporation of Madras, or

(*ii*) a municipal council constituted under the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), or

3rd December 1970]

(*iii*) a township committee constituted under the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920) or the Mettur Township Act, 1940 (Tamil Nadu Act XI of 1940), or the Courtallam Township Act, 1954 (Tamil Nadu Act XVI of 1954), or the Bhavanisagar Township Act, 1954 (Tamil Nadu Act XXV of 1954), or the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958) or under any other law for the time being in force, or

